

கல்கி


குடும்பத்துடன் களிக்க...

KALKI
7.5.2006 ரூ.8.00
80 பக்கங்கள்

தேர்தல்
ஸ்பெஷல் -II

வாரிசு
ரசியல்?

கடற்கரைக் காதல்!


100% Vegetarian
Supreme
SUN FLOWER OIL
Non greasy
சுப்ரீம் சன்பிளவர் ஆயில்
நவீனமுறையில் மெழுகு தன்மை நீக்கப்பட்டது.
எனவே எண்ணெய்பிசக்கு இன்றி.
உட்கொள்ளும் உணவு வெகுவிரைவாக
செரிமானம் அடையச்செய்கிறது.
மற்றும் குறைவான அளவே எண்ணெய்தேவைப்படுகிறது.
4 side sealed printed laminated pouch
Anti-leaching
Anti-odour
Naturally healthy
Supreme
SUNFLOWER OIL
FREE Gift with every pack
Stocks are available without this offer also

பச்சக் குதிர

பார்த்திபனுக்குள்ள எப்பவுமே ரெண்டு முகம் உண்டு. ஒரு ஆளு படைப்பாளி. இன்னொருத்தர் வியாபாரி. படைப்பாளி மட்டும் படமெடுத்தா 'குடைக்குள் மழை' பெய்யும். வியாபாரி படமெடுத்தா 'உள்ளே வெளியே'ன்னு தியேட்டர்ல கூட்டம் அலைமோதும். இவங்க ரெண்டுபேரும் கைகோத்துக்கிட்டா என்ன நடக்கும்? மிருகம் பாதி, மனிதன் பாதின்னு 'பச்சமுத்து'வைப் படைச்சிருக்காரு பார்த்திபன்.

பேட்டை பிஸ்தா பச்சமுத்துவோட ஜாகை சென்னையில் இருக்கிற நடுவாணிக்குப்பம். இவரோட பைக்கைப் பார்த்தாலே எரிச்சல் பிடுங்குது. அப்புறம் அவரோட நடவடிக்கை ஒவ்வொண்ணையும் பார்த்தால்.. திரையைக் கிழிச்சிட்டுப் போய் பச்சமுத்துவை நாமளே போட்டுத் தள்ளிடலாமான்னு தோணுது. மாநகராட்சி பள்ளிக்கூடத்தை வாடகைக்கு விடுறது, கல்யாண வீட்டுல மாப்பிள்ளையை அடிச்சு விரட்டிட்டு நமீதாவை தந்திரமா கைப்பிடிக்கிறதுன்னு அராஜகம்னா அப்படி ஒரு அராஜகம். அப்படிப்பட்ட ஆள், குப்பத்துல தனக்கு மரியாதை எப்படி இருக்குன்னு பரிசோதனை பண்ணிப் பார்க்கிறதுக்காக தன்னோட வீட்டுக்கு பச்சமுத்துன்ற பேர்ல ஒரு டெட்பாடியை அனுப்புறார். மொத்த மக்களும் சுதந்திரம் கிடைச்ச மகிழ்ச்சியிலே பிணத்தைச் செருப்பால செமத்தியா அடிக்கிறாங்க. இதை மறைஞ்சிருந்து பார்க்கிற பச்சமுத்து ரெண்டாவது பாதியில எப்படி மாறிடுறார்னு பார்த்திபன் சொல்ற விதம் முதல் பாதியிலே 'உவா'க்குன்னு குமட்டுற மாதிரியும்... ரெண்டாவது பாதியிலே என்ன ஒரு குவாலிட்டின்னு பாராட்டுற மாதிரியும் இருக்கு.

பச்சமுத்து பார்த்திபனோட அப்பாவா முத்துக்கருப்பன் கேரக்டர்ல வாயைக் கோணலா வெச்சுக்கிட்டு நடிக்கிற டபுள் ஆக்ட் பார்த்திபன் கிறுக்குத்தனத்துக்கு நூத்துக்கு எழுபத்தஞ்சு மார்க் கொடுக்கலாம். முதல் பாதி படம் முழுக்கக் காட்சி அமைப்பு, ஒளி அமைப்பு, கலை நிர்மாணம்னு டல்லா காட்டுற இயக்குநர் பார்த்திபன், ரெண்டாவது பாதியில டாலடிக்கிற மாதிரி தலைகீழா படத்தோட தொனியை (டோன்) மாத்திடுறது அபாரம்.

சென்னைத் தமிழ், குப்பத்து லாங்குவேஜ்னு நமீதாவுக்குக் குரல் கொடுத்திருக்கிற டப்பிங் கலைஞர் பட்டையைக் கிளப்பியிருக்கார். சபேஷ்-முரளி இசை, சர்வதேச இசை ஆல்பங்களின் கலவை மாதிரி ஸ்ட்ராங்கான 'காப்பி'. அடம் பிடிக்கிற மனசுள்ள அத்தனை பேரும் பச்சக் குதிரய அவசியம் பாருங்க.

- லஜ்ஜாவதி





நல்லா கீது

தேவவிரதனின் 'மௌனம் பேசியதே' சிறுகதை மனதைக் கவர்ந்தது.

- அங்கயற்கண்ணி அம்மையப்பன், திருநெல்வேலி

காமெடிப் பக்கம் ரொம்பவே நல்லா கீது தலீவா. அதுக்கு இப்ப இன்னான்ற...!

- டி.கே.சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்

விபத்துகளை வேடிக்கை பார்க்கும் பொறுப்பற்ற மனிதர்களைக்கூட நகைச்சுவையாகக் காட்சிப்படுத்த அமரர் கல்கியால்தான் முடியும்.

- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

தேர்தல் ஷோ - தலையங்கம் பிரமாதம்.

- ஆர்.ரங்கநாதன், சென்னை-17

சிபிராஜ் பேட்டி சிறப்பாக இருந்தது. ஆனாலும் அப்பாவை மிஞ்ச இன்னும் வெகுதூரம் போகவேண்டும் என்பதே உண்மை.

- சிவகுமார், திருச்சி

இந்திய ஹாக்கி அணிச் செயலாளர் ஜோதிகுமரனின் ஆதங்கம் நியாயமானதே.

- சி.பரத், சென்னை

நடுப்பக்க கல்யாணியின் பேச்சு, அவரைப் போலவே சிக்!

- பி.சங்கீதா, குற்றாலம்

தேர்தல் கூட்டணியைப் பார்த்து மிரண்டு போயிருக்கும் சமயத்தில், மருத்துவக் கட்டுரைக்கு 'எலும்புகளின் கூட்டணிக்கு எதிரி' என்று தலைப்பு வைத்துப் பயமுறுத்துவது நியாயமா?

- அய்யாறு வாசுதேவன், மடிப்பாக்கம்

திருமாவளவனின் சாதுர்யம் பேட்டியில் மட்டும்தானா?... தேர்தலிலுமா என்

உற்சாக டானிக்!

பதினான்கு வாரங்களிலேயே 'வானவில் வயசு' முடிந்து போனதில் மிகுந்த ஏமாற்றமடைந்தேன்.

- அமிர்தநேயன், உடுமலைப்பேட்டை

மரபின் மைந்தன் முத்தையாவின் தூரிகை வரைந்த வானவில், எங்கள் இதயங்களில் கலையாது நிலையாக இருக்கும்.

- எஸ்.எம்.சுல்தானா, திண்டுக்கல்

வண்ணமயமாகவும், இளமை

பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

- ப.சுகுமார், தூத்துக்குடி

சென்னையில் குகை மனிதர்கள்' கட்டுரையைப் படித்து இப்படியும் வாழ முடியுமா என அதிர்ச்சியடைந்தேன்.

- ஜி.சுந்தரராஜன், வேளச்சேரி

கு.ஞானசம்பந்தனின் தொடர் வடிவேலுவின் காமெடி ட்ராக்போல கலக்கலாக இருக்கிறது.

- ஆர்.ராமசுப்பிரமணியன், கோவை

தலீவா!

நாதஸ்வர மேதை திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை கட்டுரை, சுகமான மலரும் நினைவுகள்.

- பா.அச்சுதன், வயலூர்

பாக்யராஜின் திரைக்கதை, தேர்தல் களத்தில் எடுபடுமா?

- எம்.செல்லையா, தஞ்சாவூர்

வளம் தரும் வாஸ்து, வாராவாரம் படிக்கத் தூண்டிவிடுகிறது.

- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்



யாகவும் வெளிவந்த 'வானவில் வயசு' தொடர், இளைஞர்களுக்கு உற்சாக டானிக் தொடராக அமைந்திருந்தது.

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

மரபின் மைந்தன் முத்தையாவின் வியக்க வைக்கும் எழுத்து நடையில் விழுந்ததுதான்... இன்னமும் எழுந்திருக்கவில்லை!

- எம்.ரேவதி, சென்னை - 2

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

தேர்தல் II ஸ்பெஷல்

ஒரு கவிஞர் மற்றும் சிந்தனையாளர் என்ற முறையில் இந்தத் தேர்தல் கூச்சல்கள் உங்களிடம் ஏற்படுத்தும் தாக்கமென்ன?

"நான் வளர்ந்த சூழலில் பார்க்கும்போது, தேர்தல்நேர பரபரப்பு அல்லது நீங்கள் சொல்வதுபோல கூச்சல் என்பது எனக்குப் பழகிப்போன விஷயம். ஜனநாயக நாட்டில் மிகவும் முக்கியமான விஷயம் தேர்தல். இந்தப் பரபரப்பைக் கண்டு நாம் ஒதுங்கிப்போக வேண்டிய அவசியமில்லை. மாறாக, நாம் நெருக்கமாக இருக்க வேண்டிய விஷயம் இது. என்னதான் ஊடகங்களின் ஆதிக்கம் வளர்ந்திருந்தாலும், இன்னமும் நம் அரசியல் தலைவர்கள் தெரு மேடைகளில் நேருக்கு நேர் மக்கள் மனச்சாட்சியோடு பேசும் யதார்த்த நிலைதான் இங்கு நிலவுகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக சில தலைவர்கள் பிரசார தளத்தை கூச்சலாக மாற்றி விடுகிறார்கள்."

ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் பெண்களின் பங்கு கணிசமானது. அந்த வகையில் அவர்கள் தங்கள் பங்களிப்பை முறையாகச் செய்கிறார்களா?

"பெண்களின் பங்களிப்பைப் பற்றி பேசும் நீங்கள் 'ஆண்கள் மட்டும் பெரிய தெளிவோடு வோட்டுப் போடுகிறார்களா' என்பதை முதலில் சொல்லுங்கள். சமூகச் சூழல், பெண்களை முடக்கி வைத்த நிலை ஆகியவை பெண்கள் சிந்தனைத் தெளிவு அடைவதில் தாமதத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால் இந்தப் போக்கு முடிவுக்கு வரும். இப்போதே அதற்கான அடையாளம் தெரிகிறது. போகவேண்டிய தூரம் நிறைய.

பெண்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களிக்கிறார்களா?

"தாங்கள் நினைத்ததை மனைவி ஈடேற்ற வேண்டும் என்ற ஆணாதிக்க மனோபாவம் இப்போதும் இருக்கிறது. இந்த வாக்குரிமையை உபயோகிக்கும் விஷயத்திலும் அது உண்டு. ஆனால் இந்த ஒரு விவகாரத்தில்தான் மனைவியாகிய பெண், தான் விரும்பியபடி செயல்படும் ரகசிய வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு இருக்கும்போது சுயமாகச் சிந்தித்து

"வாரிசு

வோட்டுப் போடுவதற்கான சூழல் உருவாகிறது."

ஜனநாயக அமைப்பில் பொறுப்பேற்கும் பெண்களின் பின்னணியில் ஆண்களின் பங்களிப்புதானே அதிகமாக இருக்கிறது. இது மாறுமா?

"நீங்கள் சொல்வது போன்ற சூழல் துவக்கத்தில் இருந்தது. மாற்றம் வருகிறது. ஆனால் இன்னமும் பெரிய அளவில் வரவில்லை. இட ஒதுக்கீடு என்ற கட்டாயம் காரணமாக ஆண்களுக்கு மாற்றாக பொறுப்புக்கு வந்த பெண்கள் செயல்படுவதில் முதலில் ஆண்கள் ஆதிக்கம் அதிகம் இருந்தாலும் சமீப

காலங்களில் சவால்களை எதிர்கொள்வதில் பெண்கள் சாதனை படைத்து வருகிறார்கள். சுயமாகச் சிந்தித்து செயலாற்றும் வல்லமை பெண்களிடையே அதிகரித்து வருகிறது."

நமது நாட்டில் பொது வாழ்க்கைக்கு வரும் பெண்களின் மீது, நன்னடத்தை விஷயத்தில் ஒரு சந்தேகப் பார்வை நிலவுகிறதே.

"இதற்குக் காரணம், இன்றைய சமுதாய அமைப்பில் ஆணுக்கோர் அளவு கோல், பெண்களுக்கு வேறு அளவுகோல் என்பதால்தான். ஆனால் பெண்கள் இதைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டிய தில்லை; பயந்துகொண்டு ஒதுங்க வேண்டியதில்லை. பெண்கள் தங்கள் மனச்சாட்சிக்கு மட்டுமே




அரசியல் தவறுதான்!"



"எங்கள் மீது செருப்பு வீசுபவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேடையின் அருகில் அதற்காக இடம் ஒதுக்கி யுள்ளோம். அந்த இடத்தை நோக்கியே வீசும்படி கேட்டுக் கொள்கிறேன்."

- தேனி எஸ்.மாரியப்பன்



"இந்த எலெக்ஷன்ல எங்க கட்சியை ஆதரிச்சு உங்க வாய்ஸ் வேணும்."

"ஸாரி. நான் தர்றதா இல்லை."

"சரி.. அட்லீஸ்ட் டப்பிங் வாய்ஸாவது கிடைக்குமா?"

- சி.பி. செந்தில்குமார்

"எங்களுக்கு ஆட்சியிலும் பங்கு தேவையில்லை; அதிகாரத்திலும் பங்கு தேவையில்லை. கொடுக்க வேண்டியதில் பங்கு கொடுத்தால் அதுவே போதும்!"

- இடைப்பாடி ஜெ.மாணிக்கவாசகம்



பயந்தால் போதும்."

பெண் என்ற முறையில் ஜெயலலிதாவை ஒரு சாதனையாளர் என்று ஒப்புக்கொள்வீர்களா?

"ஒரு அரசியல் தலைவராக அவர் உருவாகிவிட்ட பின்னர், ஆண், பெண், மதம், தொழில் ஆகியவற்றைத் தாண்டித்தான் நாம் விமர்சனங்களை வைக்க வேண்டும். அந்த வகையில் ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைக்காத எந்தத் தலைவரையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது."

நீங்கள் ஏன் பிரசாரம் செய்வதில்லை?

"நான் நேரடியாக அரசியலில் இல்லாததால் பிரசாரத்தில் இறங்கவில்லை."

நேரடியாக அரசியலில் வர என்ன தயக்கம்?

"நீங்களெல்லாம் வாரிசு அரசியல் என்று சொல்வீர்களே. அதனால்தான்." (சிரிக்கிறார்).

அதுசரி, வாரிசு அரசியலைப் பற்றி உங்கள் கருத்து?

"வாரிசு என்பதற்காகவே ஒருவருக்கு வாய்ப்பு உருவாக்கப் படுவது தவறு என்று சொல்லும் அதே சமயத்தில், தகுதியுடைய ஒருவருக்கு, வாரிசு என்பதற்காகவே வாய்ப்பு மறுக்கப்படக்கூடாது என்பதும் என் கருத்து."

கவிஞர் சல்மாவுக்கு தி.மு.க. ஸீட் உங்கள் சிபாரிசுதானா?


"நல்ல வேடிக்கை. அவர் மட்டுமல்ல, ஆலடி அருணா மகள் பூங்கோதை என் நெருங்கிய தோழி. திருவல்லிக்கேணி வேட்பாளர் நாகராஜனும் அவர் மனைவியும் எனக்கு ஆசிரியர்கள். நட்பு, தோழமை, மரியாதை என்பது தனிப்பட்ட விஷயம். கட்சி விவகாரங்களில் குறுக்கே புகுந்து சிபாரிசு செய்யும் வழக்கம் எனக்குக் கிடையாது."

- ப்ரியன்

அட்டை, படம் : ஸ்ரீஹரி

நீங்கள் கேட்டவை

• மும்பை சலோ!



● போத்தனூர் புலிச்சோழன், கோவை - 23

? சிம்ரன் தேர்தல் பிரசாரத்தைக் கேட்டு 'விழிப் புணர்ச்சி' பெறுவதற்கு தமிழகத்து வாக்காளர் பெருமக்கள் என்ன அத்தனை ஞானசூன்யங்களா?

! ஜெயலலிதா அரசியலுக்கு வந்தபோதும் இப்படிக் கேட்டவர்கள் பலர் உண்டு! ஆனால், அதே 'ஞானசூன்யங்கள்' அவருக்குப் பாடம் புகட்டியதும் உண்டு அல்லவா?

● திமிங்கிலம், கோபி

? விஜயகாந்தின் இலவச சீமைப் பசு வாக்குறுதி பற்றி?



• ஏட்டிக்குப்....

! ஆட்சியைப் பிடிக்கப் போவதில்லை என்பது உறுதியாகத் தெரிகிறபோது பசுமாடு என்ன, டைனஸாரைக்கூட இலவசமாகத் தருவதாக அறிவிக்கலாம்!

● பி.ராஜேஸ்வரி, மதுரை - 16

? தி.மு.க.வுக்கு எதிர்கட்சி வரிசை கூட கிடைக்காது என வைகோ கூறுகிறாரே?

• இராட்சஸ இலவசங்கள்!



! மே 10-ம் தேதி இந்த வார்த்தைகளை அவர் விழுங்க வேண்டியிருக்கும். விழுங்க தண்ணீர் கூட கிடைக்காது அவருக்கு!

● ஆர்.நந்தகோபால், திருச்சி

? 'எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பாதிக்கப்படுவது ஏழைகள்தான்' என்று? கூறி வாக்களிப்பையே புறக்கணிப்போர் குறித்து...?

! அவ்வாறு புறக்கணிப்போர் பெரும்பாலும் ஏழைகள் அல்ல; படித்த, வசதி படைத்த வாக்காளர்கள்தான். ஆனால், இந்தப் புறக்கணிப்பினால் ஏழைகள்தான் மீண்டும், பிறரைக் காட்டிலும் அதிகமாக, பாதிக்கப்படுகிறார்கள்.

● ஜி.குப்புசாமி, சங்கராபுரம்

? டீ.வி. நடிகை வைஷ்ணவி தற்கொலை குறித்து?

! ஏற்கெனவே மணமான தேவ் ஆனந்த் என்பவரை அவர் காதலித்ததாக வெளிவந்துள்ள செய்தியைப் பார்க்க, சின்னத் திரை சீரியல் கதைகளின் சீர்கேடுகள் அதில் நடிப்பவர்களிடமும் தொற்றிக் கொள்கிறதோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

● கே.பெருமாள், கூனியூர்

• .... போட்டி....?



? ஒருவழியாக சென்னை கமிஷனர் மாற்றப்பட்டு விட்டாரே? இதை முதலிலேயே செய்திருக்கலாமே?

! ஜெ.வுடைய சர்வாதிகார பிராண்ட் மோதல் நிர்வாகத்தில் அது எப்படி நடக்கும்? எதற்கெடுத்தாலும் தகராறுதான்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? முதல்வர் நாற்காலிக்கு ஸ்டாலினும் தயாநிதி மாறனும் போட்டி போடுவதாகச் சொல்கிறாரே சரத்குமார்?

! ஒரு பேச்சுக்கு, அத்தகைய போட்டி இருப்பதாகவே ஒப்புக்கொண்டால்கூட, அதில் தப்பு இல்லையே! உட்கட்சி ஜனநாயகம் ஆரோக்கியமாகச் செயல்படுகிறதா என்பதுதான் முக்கியம். அவர் போய்ச் சேர்ந்துள்ள கட்சியில் அது மருந்துக்கும் இல்லையே.


● பி.இராஜேந்திரன், லோயர் அணைக்கட்டு

? சென்னை உயர்நீதி மன்றத்தின்

மதுரை கிளையில் மஹா லோக் அதாலத் நடத்தி, ஒரே நாளில் 12,000 வழக்குகளில் தீர்வு காணப்பட்டுள்ளதே. நிலுவையிலுள்ள இலட்சக்கணக்கான வழக்குகளுக்கு இதே முறையில் தீர்வு காண முடியுமா?

! சில்லறை வழக்குகளை வேண்டுமென்றால் இந்த முறையில் தீர்த்து, சம்பந்தப்பட்ட மக்களுக்கு நிம்மதி அளிக்கலாம். ஆனால் அரசியல்வாதிகள், வி.ஐ.பிக்கள், மடாதிபதிகள் பேரிலான வழக்குகளை என்ன செய்ய? அவற்றில் நீதி வழங்கப்படாதவரை மக்களுக்கு நீதி அமைப்பிடம் நம்பிக்கை ஏற்படாது.

● தி.வி.கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 20 ★



● விழுங்கப்போகும் வார்த்தைகள்!

கடுமையாக எதிர்க்கின்றனர்?

! அது மிகப்பெரிய ரிஸ்க் என்பதால்தான். பிராவிடண்ட் ஃபண்ட் நிதியும் இவ்வாறு முதலீடாகியுள்ளது மிகவும் கவலைக்குரிய விஷயம்.

● வி.எஸ்.விஜயமாறன், நெய்வாசல்

? ஜெ.வும் கருணாநிதியும் மாறி மாறி கதை சொல்கிறார்களே... நம்ம கதையை யாரிடம் சொல்வது?

! வோட்டுப் பெட்டியிடம் தான்

● வசீகரன், தேனாம்பேட்டை

? மதங்களால் குழப்பம் அதிகமா? இணக்கம் அதிகமா?

வாக்காளர்கள் ஞானசூன்யங்களா?

? நமது அரசியல் சாஸனம் கடந்த 55 ஆண்டுகளில் 104 முறை திருத்தப்பட்டுள்ளது எதைக் குறிக்கின்றது?

! செருப்புக்கு (தன்னலன்) ஏற்ப காலை (மக்கள் நலன்) வெட்ட அரசியல்வாதிகள் நன்கு பழகியிருப்பதைத்தான்.

● அ.கனகம்மாள், மதுரை

? இந்திய தபால் துறையில் சேமிப்பில் உள்ள தொகையிலிருந்து முதல் தவணையாக பத்தாயிரம் கோடி ரூபாயைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய அரசு அனுமதித்துள்ளதை இடது சாரிகள் ஏன்

● படத்திலிருந்து பாடத்துக்கு!



தராசு

! கட்சிகளுக்கு வோட்டுகள் அதிகம்! சராசரிகளுக்குக் குழப்பம் அதிகம்! சிந்திப்போருக்கு இணக்கம் அதிகம்.

● எம்.ராஜேந்திரன், லால்குடி

? ஆண்டிப்பட்டி தொகுதியில்தான் இந்தியாவிலேயே அதிக நாட்டு நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளாரே?

! வெட்கத்துக்குரிய விஷயத்தை இப்படிப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் அவரது அறியாமை பரிதாபத்

துக்குரியது. ஒரு முதல்வர் தமிழ்நாட்டின் அத்தனை தொகுதிகளையும் தனது தொகுதியாக அல்லவா கருத வேண்டும். மாநில நோக்கும் இல்லை, தேசிய பார்வையும் இல்லை. சுயநலநோக்கு ஒன்று தான் போங்கள்.

● ஆர்.எஸ்.மணி,
கோவை - 41



● பேசும் பதவி அனுபவம்!

? "தொழிலாளர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்களுக்கும் வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடும்; தொழில்களும் நசித்துவிடும்" என்று மே.வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா உணர்ந்து கூறும் அறிவுரையை இங்குள்ள கம்யூனிஸ்ட் தோழர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லையே?

! ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து, அனுபவத்தின் அடிப்படையில் மே.வங்க முதல்வர் பேசுகிறார். கடமைகள் பற்றி அதிகம் சிந்திக்காமல், உரிமையைப் பற்றி மட்டுமே திட்டமிட்டுப் போராடி வந்தவர்களுக்கு அவருடைய யதார்த்த போக்கை ஏற்க சிறிது காலம் ஆகும்.

● பூமகன், திருவாலம் பொழில்



● சிதைத்த சின்னத்திரை!

? இந்தத் தேர்தல் களத்தில் நிற்கும் இரு பெரும் கட்சிகளுக்கும் வாழ்வா - சாவா பிரச்னை என்கிறார்களோ?

! ஜனநாயகத்தில் ஆட்சிக்கு வருவது எவ்வளவு பெருமையோ, அதே அளவு பொறுப்புள்ள எதிர்கட்சியாக இயங்குவதும் பெருமைதான். எனவே, வாழ்வு - சாவு பிரச்னையெல்லாம் பிரதான கட்சிகளுக்குக் கிடையாது. மக்களுக்கு வாழ்வா தாழ்வா என்பதுதான் கவனத்துக்குரியது.

● கே.வி.ராமன், சென்னை

? மும்பை நடன பார்களைத் தடை செய்யும் மஹாராஷ்டிர அரசின் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு வழங்கி, நடனமாதர்களுக்கு மறுவாழ்வு அளித்துள்ளதே மும்பை உயர்நீதி மன்றம்?

இந்தச் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கம் நடனத்தைத் தடுப்பது (அது ஆபாசமாக இருந்தபோதிலும்) மட்டும் அல்ல; அதன் உடன் விளைவாக அந்த நடன மாதர்கள் விலைமாதர்களாகி விடுவதைத் தடுக்கவும் சட்டம் முயன்றது. நோக்கம் உயர்ந்தது. ஆனால், சட்டம் அவ்வளித் தெளித்த அவசரக் கோலம் ஆகிவிட்டதால் நிறைவேறுவதில் சிக்கல்கள்.

● அ.ப.ஜெ. சுவாமிநாதன், பொன்னன்திட்டு

? இந்தி சினிமாக்களில் தமிழர்கள் ராஜ்ஜியம் தொடங்கியுள்ளது பற்றி...?

! லேட்டஸ்ட் ராஜ்யத்தின் மன்னர் இளையராஜா! அமிதாப் நடிக்கும் படத்துக்கு இசையமைக்கவிருக்கிறார். மிக 'உயரமான' இடத்தைப் பிடித்ததற்காக வாழ்த்துவோம்.

ரூ.100 பரிசு பெறுபவர் :
ஆர்.எஸ்.மணி,
'ராஜம்மாள் இல்லம்', 29,
வி.என்.ஆர். நகர் முதல் தெரு,
வடவள்ளி அஞ்சல்,
கோவை - 641 041.

ரூ.50 பரிசு பெறுபவர் :
தி.வி.கிருஷ்ணமூர்த்தி,
3பி, 'பத்மம்', புது எண் - 14,
ஏழாவது குறுக்குத் தெரு,
சாஸ்திரி நகர்,
சென்னை - 600 020.



உ

ஸ்ரீ ஸத்குரு பாதம் துணை

குரு: சிவோ குருர் தேவோ குருர் பந்து: சரீரிணம்!
குருராத்மா குருர்ஜீவோ குரோரந்யந்த வித்யதே!!

குருவே சிவன், குருவே கடவுள் அனைத்துயிருக்கும்
குருவே உற்றார், குருவே ஆத்மன், குருவே ஜீவன்,
குருவைத் தவிர வேறு எதுவும் கிடையாது.
(குரு கீதை)

ஸ்ரீஸ்ரீஸ்ரீ பரமாச்சார்யாள் ஜெயந்தியை முன்னிட்டு

ஸ்ரீ அதிருத்ர மஹாயாக அழைப்பிதழ்

யஜுர் வேதத்தில் நடுநாயகமாக இருக்கும் ஸ்ரீருத்ரம் என்னும் பகுதியை கூட்டு வழிபாட்டுடன் பாராயணம் செய்தால் மக்கள் இயற்கை சீற்றங்களினால் துன்பப்படமாட்டார்கள் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளதை ரிஷிகளும், மஹான்களும், ஞானிகளும் உறுதி செய்துள்ளனர்.

எனவே, இந்த அடிப்படையில் **காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா ஸ்வாமிகளின் கிருபையால் அவரது ஜெயந்தியை** முன்னிட்டு நிகழும் வ்யய வருடம் சித்திரை மாதம் 31ம் தேதி ஞாயிறு முதல் வைகாசி மாதம் 10ம் தேதி புதன் வரை **(14.5.2006 முதல் 24.05.2006 வரை) அதிருத்ர மஹா யாகம்** மயிலாடுதுரை வட்டம் திருஅன்னியூர் என்கிற பொன்னூரில் ஸ்ரீபிரஹன் நாயகி அம்பாள் ஸமேத ஸ்ரீ ஆபத்ஸஹாயேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகத்தில் நடைபெற உள்ளது.

இந்த ஸ்ரீ அதிருத்ர மஹாயாகத்தில் கலந்து கொண்டு **உலக நன்மைக்காக** வழிபாடு செய்து குருஅருள் அமிர்தத்தை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இப்படிக்கு
பொன்னூர் கிராம மக்கள்

நிதி உதவியை "Athirudra Maha Yagna Trust, Mayiladuturai" என்ற பெயரில் Sri PS.R.Venkatramani, Sree Meenakshi Agencies, 59, Tennur High Road, Trichy - 620 017க்கு அனுப்பவும்.

● ஸ்டான்லி



மெர்க்குரி பூக்களை ரசிகர்கள் வாரிச் சூடிக்கொண்டதில் எல்லையில்லா மகிழ்ச்சியில் இருக்கிறார் இயக்குநர் எஸ். எஸ்.ஸ்டான்லி. "பொதுவாக விநியோகஸ்தர்கள் ஒரு படம் ஹிட்டானால்கூட 'சுமாராத்தாங்க போச்சு' என்று பட்டும்படாமல் பேசுவார்கள். ஆனால் மெர்க்குரி பூக்கள் வெற்றியை என்னிடம் நெகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டார்கள். 'அடுத்த படம் எப்போ சார்' என்று அவர்கள் தந்த உற்சாகத்தில் இதோ ஸ்ரீகாந்த், கோலிவுட்டின் லேட்டஸ்ட் ஏஞ்சல் பாவனா இருவரையும் கூட்டிக் கொண்டு 'கிழக்குக் கடற்கரைச் சாலை'யில் பயணிக்கத் தயாராகிவிட்டேன்'' என்று துடிப்பாகப் பேச ஆரம்பித்தார்.

"என்னுடைய எந்தப் படமும் தோல்வியடைந்ததில்லை. 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்'கூட வாங்கியவர்களுக்கு கைநிறைய லாபத்தைக் கொடுத்தது. தனுஷ் உச்சத்தில் இருந்தபோது ரிலீஸான படம். அதனால் அதற்கு உருவான எதிர்பார்ப்பே தலைகீழாக வேலை செய்தது. டிராவலோக் மாதிரி வெளிநாட்டுப் பயணங்களின்போது இரு இளம் உள்ளங்களுக்கு ஏற்படுகிற அனுபவங்கள் ரசிகர்களுக்குப் போதுமானதாக இல்லை. 'அந்நியமா இருக்கு', 'சென்டிமென்ட் இல்லை'ன்னு நிறைய விமர்சனங்கள். 'மெர்க்குரி பூக்கள்'ல அத்தகைய தவறுகளைத் திருத்திக்கொண்டேன். கொஞ்சம் மிஸ்ஸாகியிருந்தாலும் விசு, வி.சேகர் படம் என்கிற முத்திரை குத்தப்பட்டிருக்கும். 'மௌன ராகம்' படத்தைவிட எளிமையாகவும் இயல்பாகவும் புதுமணத்தம்பதிகளுக்கு இடையிலான ஊடல் கூடல்களை மிடில் கிளாஸ் தன்மையோடு வெளிப்படுத்தியிருந்தேன். மிடில்கிளாஸ் வாழ்க்கையை விட்டுவிட்டு என்னால் சிந்திக்க முடியாது.

ஸ்ரீகாந்த்தும் மீரா ஜாஸ்மினும் 'உங்களுக்குத்தான் கல்யாணமே ஆகலையே. எப்படி தத்ரூபமா காட்சிகள் அமைக்கறீங்க'ன்னு கிண்டலடிச்சாங்க. 'ஆமா, நீங்க ரெண்டு பேரும்கூட பேச்சிலர்ஸ் தான். கதாபாத்திரத்தையொட்டி இவ்ளோ இயல்பா எப்படி நடிக்க முடியுது?'ன்னு நானும் ஜாலியா பதிலடி கொடுத்தேன். ரெண்டு பேரும் ஓடி ஒளிஞ்சுட்டாங்க" என்றவரை, கி.க. சாலையில் மேலும் பயணிக்க வைத்தோம்.

"ஈ.சி.ஆர். ரோடுன்னா சுகமான கார் டிரைவிங், காதலர்களின் உல்லாசப் பிரதேசம், கடத்தல், வழிப்பறி, விபத்துக்களின் விளைநிலம் என்று அதைப் பற்றிய கருத்துக்கள் வெவ்வேறாக இருக்கும். ஆனால் எனக்கு அந்தச் சாலையில் ஏற்பட்ட அனுபவம் வேறு. புதுமையும் திகிலும் கலந்த அனுபவம் அது. இப்படத்தின் மைய இழையே அதுதான். சவாலாகச் சொல்கிறேன். உங்களால் நிச்சயம் கதையின் போக்கைத் தீர்மானிக்க முடியாது" என்றவரிடம் 'அடிதடி, ரவுடிக் கதைகளில் ஏன் ஆர்வமில்லை' என்று சீண்டினால் சாந்தமாகப் பதில் வருகிறது.

"ரௌடிகளிடம் எனக்குப் பரிச்சயமில்லாததால் அவர்களைப் பிரதான பாத்திரமாகக் கொண்டு கதை பின்ன என்னால் முடிவதில்லை. சமகால வாழ்க்கையிலிருந்தே கதாபாத்திரங்களை உருவாக்குகிறேன். இவை ரசிகர்களுக்குப் பரிச்சயமான பாத்திரங்கள் என்பதால் அவற்றோடு ஒன்றிவிடுவார்கள். இதுதான் எனது பாத்திரங்களின் பலம்" என நெற்றியடியாகச் சொன்னவர், ஸ்ரீகாந்தை வைத்துத் தொடர்ந்து படம் இயக்குவது ஏன் என்பதற்கும் பதில் வைத்திருக்கிறார்.

"ஸ்ரீகாந்த் என் முதல் கதாநாயகன். முதன்மையான கதாநாயகன். இவர் இலேசுப்பட்ட ஆளில்லை. நல்ல சந்தர்ப்பம் வாய்க்கும்போது இவராலும் உச்சத்துக்குச் செல்ல முடியும். அப்புறம், என் கதாநாயகிகளுக்குக் கட்டாயம் தமிழ் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். மொழி புரியாமல் உதட்டை மட்டும் அசைத்தால் கதாபாத்திரத்துக்குள் ஜீவனைப் புகுத்த முடியாது. அதனால்தான் தமிழ் பேசும் பைங்கிளி பாவனாவைத் தேர்வு செய்திருக்கிறேன். சித்திரம் பேசுதடியில் அவரது நடிப்பை தமிழகமே மெச்சிக் கொண்டிருக்கிறது" என்றவரின் படங்கள் அனைத்தும் மென்மையாகவும் ஆபாச அருவருப்பின்றித் தரமாகவும்

இருப்பதன் தனிக் காரணம்?

"இன்றைக்கும் நான் பெற்றோருக்குப் பயந்த பிள்ளை. மெர்க்குரி பூக்களில் கணவன் - மனைவி தொடர்பான சாதாரணக் காட்சிகளுக்கே 'அப்பா என்ன சொல்வாரோ' எனப் பயந்தேன். பாலியல் காட்சிகளால் மட்டும் ஒரு படம் ஓடி விடாது. இளைஞர்கள் தமிழ்ப் படங்களைத் தங்கள் குடும்ப உறுப்பினர்களோடு வந்து பார்க்கவே படைப்பாளிகள் பாதை போட்டுத்தர வேண்டும். மற்றபடி இயக்குநர்கள் அனைவரும் நண்பர்களாக இருப்பதால் என்னால் மேலும் விமர்சனம் வைக்க முடியாது. நான் சந்திக்கும் சம்பவங்கள், மனிதர்கள்தான் என் கதைக் களங்கள். நடிகர்களுக்கு இடப்படும் ஒப்பனை கதைக்கு ஒத்து வராது" என்கிறவருக்கு சக இயக்குநர்கள்போல் நடிப்பு, தயாரிப்பு மீது ஆசையிருக்கிறதா?

"இயக்குநர் தோழர்கள் நடிகராகும் போது ஆச்சர்யம் மேவிட அவர்களைப் பார்ப்பேன். இயக்குநராக சாதித்துக் காட்டவே இன்னமும் பலபடிகள் ஏற வேண்டியிருக்கிறதே... மற்றபடி தயாரிப்பாளராகும் அளவுக்கு எனக்குப் பின்புலம் கிடையாது. போதுமென்ற மனம் உடையவன். கடன் ஏதுமின்றி நிம்மதியாக மூன்று வேளையும் சாப்பிட்டாலே மனதும் வயிறும் நிறையுமல்லவா!'' என்று எளிமை பாராட்டும் ஸ்டான்லிக்கு அதிவிரைவில் டும்டும்.

- ச.ந.கண்ணன்

அட்டை, படங்கள் :
ஆண்டனி ஸ்ரீதர்



• 'கிழக்குக் கடற்கரை சாலை' படத்தில் ஸ்ரீகாந்த் - பாவனா...

தமிழ் பேசும் பைங்கிளி!



கல்கி



2006 மே 7
விய சித்திரை 24
மலர் : 64
இதழ் : 40

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

வோட்டு யாருக்கு?

தமிழகத்தில் நல்லாட்சி மலரவேண்டும் என்றுதான் அனைத்து வாக்காளர்களும் விரும்புகிறார்கள்.


ஆனால்... 'அந்த நல்லாட்சி அமைய யாருக்கு வோட்டுப் போடுவது?' என்பது இன்று பயமுறுத்தும் கேள்வியாகவே இருக்கிறது.


பிரதான கட்சிகளான அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய இரண்டுமே தமிழகத்தின் முன்னேற்றத்துக்கான கொள்கைகள், செயல் திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களை அணுகவில்லை. வாக்காளரை மயக்கும் இலவச திட்டங்களைத்தான் அவை முதன்மைப்படுத்தி அறிவித்துள்ளன. இந்த இலவசங்களுக்கான பணம், கட்சித் தலைவர்களின் வங்கிக் கணக்குகளிலிருந்து வரப்போவதில்லை. மக்கள் செலுத்தும் வரிப்பணமே 'இலவசங்கள்' என்கிற உற்பத்திக்கு உதவாத செலவினத்துக்குப் பயனாகும்.

விஜயகாந்தும் இலவச கலாசாரத்தை நம்பித்தான் வோட்டு கேட்கிறார். பா.ஜ.க.வோ, ராமர் கோயில் அஜெண்டாவைத் தாண்டி வரவேயில்லை.

பா.ஜ.க.வைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு ஆறுதல். அதன் தலைவர்களுள் ஒருவரான வெங்கய்யா நாயுடு, "இலவசங்களை அறிவிப்பது குறித்து அரசியல் கட்சிகளிடையே ஒரு நாடு தழுவிய விவாதம் நடத்தப்பட்டு, இந்தப் போக்கு சீர் செய்யப்படவேண்டும்" என்று கூறியுள்ளார்.

எனினும் தமிழக வாக்காளர் இத்தேர்தலில் கட்சியையோ கூட்டணியையோ மையப்படுத்தி தனது வோட்டைப் போட்டுவிட முடியாது. தற்போது, ஆட்சியில் இருக்கும் அரசு, நான் காண்டுகளுக்கு மக்களைப் படாதபாடுபடுத்திவிட்டு, கடைசி ஓர் ஆண்டில், தேர்தலை மனத்தில் கொண்டு, திடீர் கருணையும்





பச்சாதாபமும் பொங்க, சலுகை / நலத்திட்ட மழை பொழிந்து தள்ளியது.

இந்த ஆட்சியிலிருந்து மாற்றம் நிச்சயம் தேவை என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் மாற்று அணியான தி.மு.க. கூட்டணியின் இப்போதைய செயல்பாடுகள் நம்பிக்கையூட்ட வில்லை. தி.மு.க. தலைவரின் இலவசங்கள் அறிவிப்புக்கு மற்ற கட்சிகள் ஒத்து ஊதுகின்றன. தி.மு.க.வின் இளைய தலைமுறை தலைவர்கள் தங்கள் செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்துவது, குடும்ப அரசியல், இரண்டாம் நிலை தலைவர்கள் அதிருப்தியுடன் விலகுதல், என பல விஷயங்கள் அந்தக் கட்சிக்கு எதிராக உள்ளன.

கூட்டணி ஆட்சிக்குச் சம்மதிக்கவே மறுத்த தி.மு.க. தலைவர், சமீபத்தில்தான் அதற்கு ஜாடைமாடையாக ஒப்புதல் தெரிவித்து உரையாற்றியிருக்கிறார்.

மொத்தத்தில், எல்லோருக்குமே ஆட்சியைப் பிடிப்பது ஒன்றுதான் நோக்கமாக உள்ளதே யொழிய நல்லாட்சி வழங்குவது அல்ல!

இந்நிலையில் வாக்காளர்கள் செய்யக்கூடியது ஒன்றுதான். கட்சிகளை மறந்துவிட்டு வேட்பாளர்களின் தராதரத்தை ஆராய வேண்டும். ஒரு வேட்பாளரின் தகுதி என்ன? அவரது சொத்துக் கணக்கு என்ன? அவர் பொதுவாழ்வில் நற்பெயர் எடுத்துள்ளாரா? ஊழல் கறை படியாதவரா? தனி வாழ்வில் தூய்மை காப்பவரா? நல்லவரா? என்று ஆராய வேண்டும். வல்லவராக இருந்து நல்லவராக இராது போனால் அவருடைய வல்லமை முழுவதும் அவருடைய சொந்த முன்னேற்றத்துக்குத்தான் பயன்படுமேயொழிய மக்கள் நலனுக்கு அல்ல. ஆனால் ஒரு வேட்பாளர் நல்லவராயிருந்து வல்லவராக இல்லாது போனல் அதிக பாதகம் இல்லை. தமது நேர்மையை மட்டும் விட்டுக்கொடுக்காமல், உரிய உதவியையோ அறிவுரையையோ அவர் பிறரிடமிருந்து பெற்றுச் செயல்படலாம்.

ஆகவே, நல்லவர்களுக்கு வோட்டளிப்பது ஒன்றே இன்று தமிழக வாக்காளர்களுக்குத் தீர்வு. இதனால் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல்போக வாய்ப்பு உண்டு. ஆனால், அதுவேகூட முன்னணி கட்சிகளுக்கு ஒரு நல்ல பாடமாக அமையும்.

மக்கள் சிந்தித்து வோட்டுப் போடுகிறார்கள் என்னும்போது, அரசியல்வாதிகளும் சிந்திக்க ஆரம்பிப்பார்கள்! வாக்காளரின் மனசாட்சி தப்பிப் பிழைக்கும்.

'அது சரி, ஆட்சி அமைய வேண்டாமா?' என்றால், 'பெரும்பான்மை பலத்தில் அமையக் கூடிய அராஜக ஆட்சியைவிட, வலிமை குறைந்தவர்கள் சேர்ந்து அமைக்கும் கூட்டணி ஆட்சியின் குறைந்தபட்ச செயல்திட்டம் எவ்வளவோ மேல்' என்பதுதான் பதில். ●



மே இதழ் முதல்...
சுபா
எழுதும்
என்னை விட்டுப் போகாதே...
உள்ளம் கசியும்
குடும்பத் தொடர்...
அனுராதா சேகர் எழுதும்
சரணம் ஷீரடி சாயி!
ஆசீர்வாதத் தொடர்...
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்



"கமல் மாதிரி வருமா?"

சின்னக் குழந்தையாய் சிணுங்கி, கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் சன் மியூசிக் தொகுப்பாளினி காஜெல்! 'சிந்துபாத்' சீரியலின் ரோபோ மனுஷி.

"நான் தமிழ்ப் பொண்ணுதாங்க... என்னோட சொந்தப் பேர்கூட தமிழ்ச்செல்விதான்" என்றவரிடம் அப்படியா! அப்போ காஜெல்ங்கிறது இரவல் பேரா? என்றால்...

"ஆமாம். மீடியாவுக்காக அப்படி மாத்திக்கிட்டேன். நடிகை கஜோலை எனக்கு ரொம்பப் பிடிக்கும். காஜெல்னு ஸ்டைலா வெச்சுக்கிட்டேன். நல்லாயிருக்கா?" என்கிறவருக்கு பாலிவுட்டில் நடிக்க ஆசையாம். பாலிவுட் சான்ஸ் கிடைத்தால் பட்டென்று பறக்க 'ஜெட்' போல் ரெடியாக இருக்கிறார். அப்போ கோலிவுட்?

"அதான் கள்வனின் காதலி, இதயத்திருடன், டிஷ்யும்ல நடிச்சிருக்கேனே! இன்னும் நல்ல வாய்ப்பா வந்தா பண்ணலாம். இல்லன்னா கோலிவுட்டுக்கு குட்பை சொல்லிட்டு பாலிவுட்ல கலக்கணும்னு கொள்ளை ஆசை இருக்கு."

அதுசரி, சன் டீ.வியில இவருக்கு எப்படி சான்ஸ் கிடைச்சுதாம்?

"அது ஒரு சொல்ல மறந்த கதை. நானும் என்னோட தோழியும் விண் டீ.விக்கு சான்ஸ் கேட்டுப் போயிருந்தோம். மேக்கப்லாம் பண்ணிப் பார்த்தப்போ சரியில்லைன்னு ரிஜக்ட் பண்ணிட்டாங்க. அப்புறம் சன் டீ.வியில சான்ஸ் கேக்க போகலாம்னு அவ சொன்னப்போ, 'சன் டீ.வியா? சான்ஸே இல்ல'ன்னுதான் நினைச்சேன். ஆனா இன்டர்வியூ பண்ண ஒன் மன்த்ல காம்பியர் வேலை கிடைச்சிருச்சு. 'ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்' மட்டுமில்லாம 'நட்புக்காக', 'ஹாய் குட்டீஸ்!' 'லேடிஸ் சாய்ஸ்'ன்னு நிறைய பண்ணிக்கிட்டிருக்கேன். 'நீங்க ரொம்ப சிம்பிளா இருக்கீங்க! மெச்சூர்டா பேசுறீங்க... கொஞ்சிக் கொஞ்சிப் பேசுறது எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்'னு போன்ல அன்புத் தொல்லைகள் அதிகமா இருக்கு" என்று கவலைப்படுகிறவருக்கு கமல்தான் கனவு நாயகனாம்.

"அவரோட நடிப்பு, டைரக்ஷன், டான்ஸ், கேரக்டர் ப்ச்.. அவரு மாதிரி யாருங்க இருக்கா?" என்றெல்லாம் கமல் புகழைத் தொகுத்து வழங்க ஆரம்பித்தவரை 'கட்' சொல்லி, 'உங்க வயசு' என்று கமுக்கமாகக் கேட்டால், 'ஆஃப்டர் த ப்ரேக்' என்று சொல்லாமலேயே எஸ்கேப்பானார் தமிழ்ச் செல்வி.

- ம.மனோசௌந்தர்

படம்: பொள்ளாச்சி டி.சுந்தரம்

சேனல்

முதன் முதலாய்...

கூட்டணிக் குழப்பங்கள், அணிவிட்டு அணி மாற்றம், நடிகர் - நடிகைகள் பிரசாரம் என்று அனல் பறக்கக் காட்சியளிக்கிறது தேர்தல் களம். இந்தச் சூழலில் பதிமூன்றாவது தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் முதன் முறையாக வாக்களிக்க இருக்கும் இளம் வாக்காளர்களை எப்படி பாதித்திருக்கிறது? தங்களின் முதல் வாக்கை யாருக்குப் போடப் போகிறார்கள்? நம்மிடம் சிக்கிய நான்கு கன்னி வாக்காளர்களிடம் கருத்துக் கேட்டோம்...

பிரவீன்குமார்:

(C.P.T. கல்லூரி மாணவர், தரமணி)

ஜனநாயக கடமையை ஆற்றப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இருக்கிறேன். இப்போ கொள்கை கோட்பாட்டோடு யாரும் அரசியலுக்கு வர்றதில்ல. சினிமாவுல வாய்ப்பு இல்லன்னதும் இங்க வராங்க. அ.தி.மு.க.வுக்குத்தான் அதிகம் பேர் வராங்க. இது சந்தர்ப்பவாத கூட்டணி. ஒரு சீட்டு கிடைக்கலன்னு, டீ.வில காண்பிக்கலன்னு கூட்டணி விட்டு கூட்டணி தாவிய ஒருவர், அங்கேயும் டீ.வில காண்பிக்கலன்னா வேற எங்காவது போய்டுவாரா? இதெல்லாம்தான் மாணவர்கள் மத்தியில் அரசியல் நல்லதில்ல என்ற எண்ணத்தை உருவாக்கி, வோட்டுப் போட முன்வர்றவங்களோட எண்ணிக்கை குறைஞ்சு போய்டுது.

தேவி:

(தமிழ்த்துறை ஆய்வு மாணவி)

முதன் முறையா வோட்டுப் போடறது மகிழ்ச்சியா இருக்கு. நாமும் இந்திய பிரஜைதான்னு நினைக்கும்போது பெருமையா இருக்கு! இங்கு நடக்கிற அரசியல், மக்களை வாழ வைப்பதற்குப் பதிலா அவங்கள வீழ்த்துவதற்காக நடந்துட்டு இருக்கு.



• பிரவீன்குமார்



• விஜயகுமார்



• தேவி



• மகேஷ் வளவன் • பிரேமா

எந்த வியூகம் அமைச்சாவது மக்களைக் கவிழ்க்கணும்னு நினைக்கிறாங்க. அரசியல்வாதிங்க மக்களை நல்லாவே புரிஞ்சு வெச்சிருக்காங்க. அதுக்காகத்தான் இந்த நடிகர் நடிகைகள் எல்லாம். முன் பிருந்த அரசியல் தலைவர்கள் சாதியிருக்கக் கூடாதுன்னு நினைச்சாங்க. இப்ப அரசியல், சாதியை மட்டுமே மையப் படுத்தி நடந்துட்டு இருக்கு. இதேபோல இருந்தா தமிழ்நாட்டோட அடையாளமே மாறிடும். இதனால புதுசா யாராவது வந்தா நல்லா இருக்கும்.

விஜயகுமார்:
(சாஃப்ட்வேர் இன்ஜினியர்)

மக்களுக்கு நல்லது செய்றவங்களுக்கு வோட்டுப் போடுவேன். அதை வெளியே சொல்ல முடியாது. மக்களுக்கு எதுவேணும்னாலும் கொடுத்து வோட்டு வாங்கிடலாம்னு நினைக்கிறாங்க. மக்களுக்கும் நாலெட்ஜ் இருக்கு; அதைப் பொறுத்துதான் அவங்களும் வோட்டுப் போடுவாங்க. எந்தக் கட்சி வேணும்னாலும் ஆட்சிக்கு வரலாம்! ஆனா... அது மக்களுக்கு நல்லது பண்ற கட்சியா இருக்கணும். இந்த நிலையில நான் முதன் முறையா வோட்டுப் போடறது த்ரில்லிங்கா இருக்கு.

மகேஷ் வளவன் - பிரேமா: *(இளம் தம்பதியர்)*

வோட்டு என்பது தனியுரிமை, அதை யார்கிட்டயும் கலந்தாலோசிக்க வேண்டியதில்ல. தமிழ்நாட்ல இரண்டே கட்சிதான் இதுவரைக்கும் மாத்தி மாத்தி ஆட்சி செய்யுது. இப்போ நிறைய கட்சிகள் வந்திருக்கு. அவங்க நாட்டுக்கு ஏதோ செய்யணும்னு வந்திருக்காங்க. அதைச் செய்யட்டும். வலுவே இல்லாத அரசியல் கட்சிதான் முன்னுக்கு வரணும்னு நினைக்கிறோம்.

தேர்தல் II ஸ்பெஷல்

- சா. இலாகுபாரதி

படங்கள் : **ஸ்ரீஹரி**

4 வாரத் தொடர்

அழகி

தேவியக்கா, ஆனந்திடமிருந்து விலகிக் கொண்டதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதன்பிறகு தேவியக்காவிடம் பேசுவதைக் குறைத்துக் கொண்டேன்.

இதற்கிடையே நான் எம்.எஸ்ஸி. படித்து முடிக்க... சென்னையில் வேலை கிடைத்தது.

சென்னைக்குப் புறப்படுவதற்கு முன்பு தேவியக்கா வீட்டுக்குச் சென்றேன்.

"வா பாபு... மெட்ராஸ்ல வேலை கிடைச்சிருக்குதாமே. அம்மா சொன்னாங்க" என்று தேவியின் அம்மா வரவேற்றார்.

"ஆமாம்மா. அதான் சொல்லிட்டுப் போலாம்னு வந்தேன்."

"எப்ப போற?"

"இன்னிக்கு ராத்திரிம்மா."

"போறதுக்கு முன்னாடி, தேவிக்கு புத்தி சொல்லிட்டு போப்பா. நீதான் அவளுக்கு ரொம்ப தோஸ்த்."

"நான் என்னம்மா சொல்றது..." என்று இழுத்தேன்.

"நீயே சொல்லுப்பா. மாப்பிள்ளைய என்ன ஆர்டர் கொடுத்தா செய்ய முடியும்? நினைச்ச மாதிரியே எப்படிப்பா மாப்பிள்ளை கிடைக்கும்? இது இருந்தா அது இருக்காது. அது இருந்தா, இது இருக்காது. ஏதாச்சும் ஒண்ண அட்ஜஸ்ட் பண்ணிட்டுத்தான் போகணும். வெளிய சொன்னா வெட்கக்கேடு. இது வரைக்கும் பதினஞ்சு மாப்பிள்ள வந்து பாத்துட்டுப் போயிட்டாங்க. ஒருத்தனைக் கூட பிடிக்கலன்னா எப்படி? இவங்கப்பாவும், மக பேச்சைக் கேட்டுக்கிட்டு ஆடறாரு. இவ சேதி தெரிஞ்சு, ஒருத்தனும் இப்ப வர்றது கூட இல்லை. என் ஆயுசுக்கும், இப்படி ஒருத்திய பாத்தது இல்லை. நீ கொஞ்சம் சொல்லிட்டுப் போப்பா..." என்றபடி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"சரிம்மா..." என்று கூறிவிட்டு, நான் தேவியக்காவின் அறைக்குள் நுழைந்த போது, அவள் கண்ணாடி முன்பு நின்று கொண்டிருந்தாள்.

என்னைப் பார்த்தவுடன், "வாங்க... வாங்க... சாரைப் பார்க்கவே முடியறதில்ல" என்றாள் கிண்டலாக.

நான் பதில் ஒன்றும் கூறாமல், நாற்காலியில் அமர்ந்தேன்.

"மெட்ராஸ் போறியாமே?"

"ஆமாம். இன்னைக்கு நைட் கிளம்பறேன்" என்ற நான் சில வினாடிகள் யோசித்துவிட்டு, "எவ்வளவு நாளுக்கா இப்படியே இருக்கப்போற?" என்றேன்.

"இப்படியேன்னா? புரியல..."



"வர்ற மாப்பிள்ளைய எல்லாம் வேண்டாம்னு சொல்லிக்கிட்டு. எப்படி தாங்க்கா மாப்பிள்ள இருக்கணும்?"

"உனக்குத் தெரியாதா? நல்ல சிவப்பா, உயரமா..." என்று ஆரம்பித்து, தான் 18 வயதில் கூறியதை மாற்றாமல் அப்படியே கூறினாள்.

எனக்கு, 'சிவப்பாக, உயரமாக, மீசை வச்சுக்காமல்...' என்ற தலைப்பில் ஆதவன் எழுதியிருந்த சிறுகதை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

"நினைக்கிற மாதிரியே கிடைச்சுடாதக்கா."

"எல்லாம் பொறுமையா தேடினா கிடைக்கும்."

"இப்பவே உனக்கு இருபத்தஞ்சு வயசு ஆவுதுக்கா" என்ற என்னை சில வினாடிகள் உற்றுப் பார்த்துவிட்டு, "வேலை கிடைச்சுட்டதால, எனக்கு புத்திமதி சொல்ற அளவுக்குப் பெரிய மனுஷனாயிட்டதா நினைச்சுக்காத. நீ கிளம்பு" என்று முகத்திலடித்தாற்போல் கூறிவிட்டு, வேகமாக வெளியே சென்றாள்.





நான் சென்னை சென்ற பிறகு, தேவியக்காவுடன் சுத்தமாகத் தொடர்பு விட்டுப்போயிற்று. இடையிடையே ஊருக்கு வரும்போதுகூட, தேவியக்காவை பார்க்கச் செல்வதில்லை. யதார்த்தமாக ரோட்டில் பார்த்தால், பேருக்கு விசாரித்துக் கொள்வதோடு சரி.

அம்மா மட்டும் அவ்வப்போது

ஜி.ஆர்.சுரேந்தர்நாத் 4

தேவியக்காவைப் பற்றிக் கூறுவார். "போன வாரம் கூட, ரயில்வேல வேலை பாக்குற மாப்பிள ஒருத்தன் வந்தான்டா. அவனையும் வேண்டாம்னுட்டா" என்பார்.

இப்படியே மாப்பிள்ளைகளை மறுக்க, மறுக்க... தேவியக்காவை பெண் பார்க்க வருவது கொஞ்சம், கொஞ்சமாகக் குறைந்துகொண்டே போய், கடைசியில் சுத்தமாக நின்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன்.

தேவியக்காவுக்கு கல்யாணம் ஆகாதது குறித்தெல்லாம் கவலைப்படாமல், காலம் வேகமாக ஓடியது. குஷ்பு போய், சிம்ரன் பிரகாசித்த காலமும் முடிந்து, த்ரிஷா, அஸின் வரை வந்தாயிற்று. நான் வேலைக்குச் சென்று மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டன. தேவியக்காவுக்கு திருமணம் ஆவதற்கான அறிகுறியே தெரியவில்லை.

கடந்த பொங்கலுக்கு ஊருக்குச் சென்றபொழுதுதான், நீண்ட நாள் கழித்து தேவியக்காவைப் பார்த்தேன்.

நான் வீடு சென்று சேர்ந்தபொழுது, காலை ஏழு மணி இருக்கும். அம்மா அப்போதுதான் எழுந்து வாசல் தெளித்துக் கொண்டிருந்தார். "வாடா..." என்று வரவேற்றபடி, அம்மா எனது பேக்கை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றார். "எத்தனை மணிக்குக் கிளம்பின?" என்பது போன்ற சம்பிரதாயமான பேச்சுகள் முடிந்ததும், "முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்லணும். அத விட்டுட்டு மத்த கதையைப் பேசிக்கிட்டிருக்கேன். நம்ப தேவிக்கு கல்யாணம் முடிவாயிடுச்சுடா" என்று அம்மா கூறியவுடன் அசந்து போனேன்.

"நிஜமாவா சொல்றீங்க?" என்றேன்.

"நம்பவே முடியலல்ல. நேத்துதான் முடிவாச்சு" என்று அம்மா கூறிக் கொண்டிருக்கும்போதே, "சரோஜாக்கா..." என்று எதிர்வீட்டு தயிர்க்காரம்மா, அம்மாவைக் கூப்பிட "இதோ வந்துடறேன்" என்று அம்மா வெளியே சென்றாள்.

நான் சந்தோஷத்துடன் தேவியக்கா வீட்டுக்குச் செல்லலாம் என்று கிளம்பிய பொழுது, தேவியக்காவே வந்துவிட்டாள்.

"என்ன பாபு... நல்லாருக்கியா?" என்றபடி வீட்டினுள் நுழைந்தாள் தேவியக்கா.

"ம்... நல்லாருக்கேன்க்கா" என்றேன் சிரிப்புடன்.

"மாடிலயிருந்து உன்னைப் பார்த்துட்டுதான் வர்றேன்."

"அப்புறம்... விஷயம் கேள்விப்பட்டேன். கங்க்ராட்ஸ்" என்றேன் உற்சாகத்துடன்.



"என்னது மினி பைனாகுலர் வெச்ச மூக்குக் கண்ணாடியா?"

"ஆமாம். இனிமே யாரும் நம் தலைவருக்கு 'தொலைநோக்கே' இல்லேன்னு சொல்ல முடியாதே!"

- வெ.சீதாராமன்

தேவியக்கா சுரத்தில்லாமல் சிரித்தபடி, "மாப்பிள்ளை யாருன்னு தெரியுமா?" என்றாள்.

"தெரியாது. அம்மா இப்பதான் உன் பேச்சை ஆரம்பிச்சாங்க. அதுக்குள்ள தயிர்க்காரம்மா கூப்பிட்டாங்கன்னு போயிட்டாங்க. யாருக்கா மாப்பிள? ஆனந்தா?" என்றேன்.

"இல்ல... உங்க பெங்களூர் மாமா" என்றவுடன் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

எனது அதிர்ச்சிக்கு இரண்டு காரணங்

அடுத்த இதழில் ஆரம்பம்...

சீதாரவி எழுதும்

செண்பகம்







மணக்கும் 4 வாரத்தொடர்

கள், பெங்களூர் மாமாவின் மனைவி, ஆறு மாதங்களுக்கு முன்புதான் ஒரு கார் விபத்தில் இறந்துபோனார். அதற்குள் மாமா இரண்டாவது திருமணம் செய்து கொள்கிறார். இரண்டாவது அதிர்ச்சி, தேவியக்கா இந்தக் கல்யாணத்துக்கு ஒப்புக்கொண்டது.

"திடீர்னு எப்படி?" என்றேன்.

"எங்க கடைங்கள எல்லாம், ஹைவேஸ்ல ரோடு போடறதுக்காக எடுத்துக்கிட்டாங்க. தெரியும்ல?"

"ம்... ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே எடுத்துக்கிட்டாங்களே."

"அப்ப மூணு லட்சம் தந்தாங்க. அவ்ளோ பணத்தையும் அப்பா பிசினஸ்ல போட்டாரு. செம லாஸ். எல்லாம் போயிடுச்சு. ரெண்டு வீட்டு வாடகை மட்டும்தான் வருமானம். அது சாப்பாட்டுக்கே பத்தாது. செலவுக்கு நகைங்களையும் விற்க ஆரம்பிச்சுட்டாங்க" என்ற தேவியக்கா சில விநாடி பேச்சை நிறுத்தினாள்.

"நீங்க கஷ்டத்துல இருக்கீங்கன்னு அம்மா சொல்லியிருக்காங்க. ஆனா இவ்வளவு டீடெய்லா தெரியாது."

"ரெண்டு வருஷமா பொண்ணு பாக்க வர்றதுகூட நின்னு போயிடுச்சு. அப்படியே வந்தாலும் கல்யாணம் பண்ணி வைக்கறதுக்குக் காசில்ல. அப்பதான் உங்க மாமா வந்தாரு?"

"எப்ப?"

"நேத்துதான். எங்க வீட்டுப் பிரச்னைய எல்லாம் உங்கம்மா சொல்லியிருப்பாங்க போல. எங்க வீட்டுக்கு வந்து, 'இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடல. தேவி சரின்னு சொன்னா, ரெண்டாம்தாரமா கட்டிக்கிறேன்'னாரு. அம்மாப்பா ஒத்துக்கல. வீட்ட வித்தாச்சும் எனக்கு வேற இடத்துல பாக்கறேன்னாங்க. நான் வேண்டாம்னுட்டேன். அதையும் வித்துட்டு என்ன பண்ணுவாங்க? ஒரே நிமிஷம்தான் யோசிச்சேன். உங்க மாமாவ கட்டிக்கிறேன்னுட்டேன்."

"ஏன்க்கா?"

சட்டென்று குரல் தழுதழுக்க, "எனக்கும் இருபத்தெட்டு வயசு தாண்டிருச்சுடா. வீட்லயும் கல்யாணம் பண்ணி வைக்குற நிலைமைல இல்ல. இப்படியே போனா, கல்யாணமாகாமலே போயிடுமோன்னு கொஞ்ச நாளா பயம் வந்துடுச்சுடா" என்ற தேவியக்கா அழுதுவிட்டாள்.

"அக்கா... என்னக்கா இது?" என்று சமாதானப்படுத்த முயன்றேன்.

கண்களைத் துடைத்துக்கொண்டு, "அதான் ஒத்துக்கிட்டேன். உங்க மாமா வசதியானவரு. எங்க குடும்பத்துக்கும் உதவியா இருக்கும்" என்ற தேவியக்காவை வேதனையுடன் பார்த்தேன்.

"என்ன பாக்குற... எவ்ளோ உயரத்துல பறந்தாலும், கடைசில பட்டம் கீழ இறங்கித்தானே ஆகணும்" என்றாள்.

நான் ஒன்றும் பேசத் தோன்றாமல், மௌனமாக நின்றேன்.

(முற்றும்)

'அம்மான்னா சும்மா இல்லடா!'

சன் டீ.வியில் ஏப்ரல் 14 தமிழ்ப் புத்தாண்டு அன்று கவியரங்கம் என்ற பெயரில் தேர்தல் பிரசாரம் நடந்த செய்தி ஜெ.வின் காதுகளுக்குப் போனதும், கோபம் உச்சிக்கு ஏறிவிட்டது. உடனடியாக அதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் ஒரு கவியரங்கம் நடத்தியாக வேண்டும் என முடிவெடுக்கிறார். அதுபற்றி ஆலோசனை நடத்த காளிமுத்து, வைகோ, சசிகலா மூவரையும் அழைக்க, அடுத்த 'ஒன்பதாவது' நிமிடத்தில் மிகச் சரியாக ஆஜராகி ஜெ.வின் மனதைக் குளிரச் செய்கின்றனர்.

ஜெயலலிதா: நான் உங்களை ஏன் கூப்பிட்டேன்னு தெரியுமா?

காளிமுத்து: தெரியும்மா! ஆனா, தெரியும்னு சொல்லி உங்க வெறுப்பை சம்பாதிச்சுக்க விரும்பல! அதனால, தெரியாதும்மா.

ஜெயலலிதா: நல்ல பதில்! இத... இத... இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்.

வைகோ: எதுக்காக எங்களைக் கூப்டீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா மேடம்?

ஜெயலலிதா: சித்திரை 1-ம் தேதி சன் டீ.வி பார்த்தீங்களா?

வைகோ: (பதறியபடி) இல்லவே இல்லை மேடம்! நான் சன் டீ.வியை பங்குனி 1-னோட நிறுத்திட்டேன் மேடம்! இப்போ நான் பார்க்கறது ஜெயா டீவியை மட்டும்தான்.

ஜெயலலிதா: அதுக்குத்தானே ஜெயா செய்திகளை வைகோ செய்திகள்னு சொல்ற அளவுக்கு மாத்தியிருக்கேன்! இப்போ அது இல்லை மேட்டரு...

சசிகலா: அக்கா, விஷயத்துக்கு வாங்க! ஏதாச்சும் ஏடாகூடமா புரோக்ராம் வந்ததா? அப்படி வந்திருந்தா சொல்லுங்க வூடுகட்டிருவோம்! நம்ம கைல ஏகப்பட்ட ஆளுங்க இருக்காங்க.

ஜெயலலிதா: நீ வூடு கட்றதுலயும், கிரகப்பிரவேஷம் பண்றதுலயுமே இரு! மேட்டரே வேற...

சசிகலா: (பதறியபடி) என்னக்கா சொல்றீங்க?

ஜெயலலிதா: கவியரங்கம்ங்கிற பேர்ல நம்ம ஒரே எதிரி கருணாநிதியை புகழோ புகழ்னு புகழ்ந்து வைரமுத்து, வாலி, அப்துல்ரகுமான், பா.விஜய், நாலு பேரும் நம்மளை நார்நாரா கிழிச்சிருக்காங்க.

வைகோ: இவ்வளவுதான் மேட்டரா... மேடம், விடுங்க நமக்கு டீவியா இல்ல... இல்ல, அதைப் பார்க்க ஆளுங்களா இல்ல. உங்களைக் கவியரங்க தலைமையா போட்டு, படு பயங்கரமா புகழ்ந்து, அவங்களைக் கொடூரமா திட்டி ஒரு கவியரங்கம் போட்டுருவோம்.

ஜெயலலிதா: கரெக்ட்! இதைச் சொல்றதுக்குத்தான் கூப்பிட்டேன். நான் சொல்ல வந்ததை ஒரு வரி விடாம நீங்களே சொல்லிட்டீங்க... நான் தலைமையா இருக்கறது ஓ.கே. ஆனா, கவிதை பாட நாலு கவிஞர்கள் வேணுமே?

சசிகலா: மூணு பேருன்னு சொல்லுங்கக்கா! புலமைப்பித்தனை மறந்துட்டீங்களே...



ஜெயலலிதா: புரியாம பேசாத! அவருக்கு எனக்காக கவிதை எழுதித் தர்ற வேலை இருக்கில்ல?

வைகோ: இருக்கட்டுமே! உங்களுக்கு எழுதித் தந்துட்டு அவரும் வாசிச்சா கேஸா போட்டுருவாங்க! அப்படியே போட்டாலும் அதைச் சமாளிக்க வக்கீல் நான் இருக்கேனே!

ஜெயலலிதா: அப்போ ஒருத்தர் ஓ.கே! இன்னும் மூணு பேரு வேணுமே... நம்ம கட்சியில பெரிய சினிமா பட்டாளமே இருக்கு. ஆனா பேர் சொல்ற மாதிரி ஒருத்தரும் இல்ல...

வைகோ: நீங்க கவலைப்படாதீங்க மேடம்... உங்க மனசறிஞ்ச கவிஞர் ஒருத்தர் உங்க கூடவே இருக்கறதை நீங்க மறந்துட்டீங்க...

ஜெயலலிதா: யாரு அது?

வைகோ: அது நான்தான் மேடம்!

ஜெயலலிதா: வாட் எ சர்ப்ரைஸ்! நீங்க கவிதையெல்லாம் எழுதுவீங்களா?!

வைகோ: நீங்க உத்தரவு போட்டா... இந்த பம்பரம் சாட்டை இல்லாம கூட சுத்தும் மேடம்!

ஜெயலலிதா: பம்பரம் சுத்தும்! ஆனா கவிதை எழுதுமா?

வைகோ: என்னம்மா பெரிய கவிதை! நான் பேசுறதை நிறுத்தி நிதானமா ரெண்டு ரெண்டு முறை வாசிச்சா அது தான் கவிதை! நடுநடுவுல 'கேஸ் போடு! உள்ளே தள்ளு'ன்னு ரிப்பீட்டா ஒரு லைன் போட்டுத் தாக்கி வைரமுத்து மாதிரி கட்டைக்குரல்ல சும்மா கலாச்சிட மாட்டேன்...

ஜெயலலிதா: வெரிகுட்... வெரிகுட்!

காளிமுத்து: அம்மா... நானும் கவியரங்கத்துல...

ஜெயலலிதா: நீங்க எழுதுவீங்கன்னு தெரியும், ஆனா...

காளிமுத்து: சந்தேகப்படாதீங்கம்மா... பா.விஜய்க்கு நிகரா என்னால துதி எழுத

முடியும்மா! நீங்க மட்டும் சரின்னு சொன்னா ஜமாய்ச்சிடுவேன்.

ஜெயலலிதா: சரி எழுதுங்க! ஆனா, கவிதை... கவிதையா இருக்கக் கூடாது. அவங்க நாலு பேரும் செஞ்சாங்களே அதைவிடப் பிரமாதமா இருக்கணும்.

காளிமுத்து: (மகிழ்ச்சி பொங்க) ஹி...ஹி... அது மட்டும்தாம்மா இருக்கும்!

ஜெயலலிதா: என்னங்க வைகோ, மூணுபேரு ரெடி. இன்னும் ஒரே ஒருத்தர் இருந்தா ஷூட்டிங் போயிடலாம். அந்த ஒருத்தருக்கு என்ன பண்றது?

சசிகலா : அக்கா...

ஜெயலலிதா : என்னம்மா நீ எழுதப் போறியா? நீ என் கூட வர்றதையே சாமி குத்தமாட்டம் ஃபோகஸ் பண்றாங்க. என்னைப் புகழ்ந்து பாடினே... பொழைப்பு சந்தி சிரிச்சிடும்.

சசிகலா : அக்கா, நான் கவிதை பாடறேன்னு சொல்ல வரலை. நீங்க வைகோவைப் பார்த்து 'கவிதை எழுத வருமா?'ன்னு கேட்டப்போ எனக்கு திருமா ஞாபகத்துக்கு வந்துட்டார்.

ஜெயலலிதா : அவரு கவிதை எழுது வாரா?

சசிகலா: தெரியலை! ஆனா, வைகோகிட்டயும் காளிமுத்துகிட்டயும் விட்டு ட்ரெய்னிங் தந்துடுவோம்.

ஜெயலலிதா: அப்படி ட்ரெய்னிங் தந்து ஏன் எழுத வைக்கணும்?

சசிகலா: காரணம் இருக்குக்கா! இதை வெச்சு ஒரு சின்ன பாலிடிக்ஸ் பண்ணி அந்தக் கூட்டணியைக் காலி பண்ணலாம்.

ஜெயலலிதா : எப்படிச் சொல்ற?

சசிகலா: 'நான் கவியரங்கத்தைக் கூட கூட்டணிக் கட்சிகளுடன்தான் நடத்தினேன்! கருணாநிதி அப்படியா செய்தார்?'னு, நீங்க பேசறப்போ ஒரு சின்ன பிட்டுப் போட்டுட்டா பூசல் ஈசல் மாதிரி கௌம்பிடும்ல...

ஜெயலலிதா: அடடே! நல்ல யோசனையா இருக்கே! மொதல்ல திருமாவுக்கு போன் போட்டு இன்ஃபார்ம் பண்ணு! அப்புறம் நம்ம டீ.விக்கு போன் போட்டு 'வைகாசி 1' சிறப்பு நிகழ்ச்சிகள்னு அறிவிக்கச் சொல்லிட்டு அன்னைக்கு இந்தக் கவி யரங்கம் வரமாதிரி ஏற்பாடு பண்ணச் சொல்லு!

சசிகலா: அக்கா... இடம்?

ஜெயலலிதா: நம்ம நேரு ஸ்டேடி யத்தை புக் பண்ணச் சொல்லு.

சசிகலா: என்னக்கா தலைப்பு வைக்க லாம்?

ஜெயலலிதா: ம்... 'அம்மான்னா சும்மா இல்லடா'ன்னு வெச்சிடுவோம்! என்னங்க ஓ.கேவா? (என வைகோ, காளிமுத்துவைப் பார்த்துக் கேட்கிறார்)

இருவரும் கோரஸாக : டபுள் ஓ.கே...

கற்பனை : **வீ. விஷ்ணுகுமார்**

ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்து, சினிமாவில் நுழைந்தவர் நடிகர் ராஜேஷ். சினிமா வாய்ப்புகள் அவருக்குக் குறைந்தபோது, 'கட்டுமானத் துறையில் இறங்கிப் பார், உனக்கு ரசிகர்கள் மத்தியில் இருக்கும் நல்ல பேருக்கு அங்கேயும் சாதிக்கலாம்' என்று ராஜேஷுக்கு அறிவுரை கொடுத்தாராம் எம்.ஜி.ஆரின் வலது கரமாக இருந்த ஜேப்பியார். "அவர் சொன்னது போலவே ரியல் எஸ்டேட்டிலும் பின்னால் சாதிக்க முடிந்தது" என்று சொல்லும் ராஜேஷ், தன்னை வளர்த்த சினிமாவுக்கு நன்றி செலுத்தும்விதமாக, சென்னை ராமாவரத்தில் கட்டி வரும் பல அடுக்கு குடியிருப்புக்கு, சினிமாவைக் கண்டுபிடித்த லூமியர் சகோதரர்களின் நினைவாக 'லூமியர்ஸ் என்க்ளேவ்' என்று பெயர் சூட்டியிருக்கிறாராம்.



- ஸ்ரீ

நடக்குமென்பார்: நடக்கும்!

மேஷம்: ஆடை அலங்கார ஆபரண வஸ்துக்கள் சேரும். பொருளாதாரக் கஷ்டம் வராது. கொடுக்கல் வாங்கல் திருப்திகரமாக இருக்கும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக



காது. மன தைரியம் ஏற்படும். நீண்டகால எண்ணங்கள் கைகூடும். வெளிநாட்டு ஒப்பந்தம் கையெழுத்து ஆகும். சத்ரு தொல்லை இருக்காது. வியாபாரத்தில் ஏற்றம் காணும். புதிய தொழில் துவங்கலாம். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும்.

இருக்கும். பங்கு மார்க்கெட், வர்த்தகம் நல்ல பலனைத் தரும். திருமணக் காரியம் கைகூடும். கலைஞர்கள், பத்திரிகைகாரர்களுக்கு ஏற்றம் காணும். பாராட்டுகளும், பரிசு மழைகளும் வந்த வண்ணம் இருக்கும். நண்பர் / உறவினர் மூலம் நற்பலனை அடைவீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சனிக்கிழமைதோறும் சனீஸ்வரனுக்கு தீபம் ஏற்ற நற்பலனைத் தரும்.

ரிஷபம்: வழக்கு முடிவுக்கு வரும். நெருங்கிய நண்பர் / உறவினர்களை விட்டு விலகிச் செல்ல நேரிடும். பூர்வீகச் சொத்துகள் பாகப்பிரிவினை ஆகும். குழந்தைகள் பற்றின மனக்கவலை தீரும். சிலருக்கு வீடு மாற்றம் செய்ய நேரிடும். உடல்நிலையில் கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். இடமாற்றம் ஏற்படலாம். சுபகாரிய நிகழ்ச்சிகள் கைகூடும். வியாபாரத்தில் மந்தமான சூழ்நிலை தென்படும். பணமுடை நிவர்த்தி ஆகும். கடன் கிடைக்கும். வியாழன்தோறும் குருபகவானை வழிபட்டு தீபம் போட்டு வரவும்.

மிதுனம்: செல்வவளம் மிகுதி ஆகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். வீடு / வாகனம் வாங்க நல்ல நேரம். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். உடல்நிலை பாதிக்

மாணவ மாணவியர் விரும்பிய கல்வியைப் பெற வாய்ப்பு உண்டு. நண்பர்களால் ஆதாயம் கிட்டும். ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலனைத் தரும்.

கடகம்: கலைத்துறையில் முன்னேற்றத்தை அடைவீர்கள். மகான் தரிசனம் கிட்டும். உடல்நிலை நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல பலனை அடைவீர்கள். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். புத்திரபாக்கியம் ஏற்படும். கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், கணினி துறையில் உள்ளவர்கள் ஏற்றம் பெறுவார்கள். தனவிருத்தி ஏற்படும். புதிய முயற்சி கை கொடுக்கும். பதவி, பட்டம், புகழ் தேடி வரும். கல்வி வளம் மேலோங்கும். குரு/சனி வழிபட்டு வியாழன் / சனிக்கிழமைதோறும் தீபம் ஏற்ற நற்பலன் கிடைக்கும்.

சிம்மம்: மனத்தில் புத்துணர்ச்சி ஏற்படும். தெய்வ கடாக்ஷத்தில் நல்லது நடக்கும். உடல்நிலை சற்று சீராகும். வண்டி வாகனத்தில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். கணவன் - மனைவி அனுசரித்து நடந்து கொள்வது நற்பலனை அளிக்கும். வாக்குவாதம் தவிர்க்கவும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் ஏற்றம் ஏற்படும். வீடு

மாற்றம் ஏற்படும். குடும்பத்தை விட்டுத் தொலைதூரம் போகும் சூழ்நிலை உருவாகும். யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி கைகூடும். ராகு / கேது / குரு / சனி வழி பட்டு வருதல் நலம் தரும்.

கன்னி: சுபகாரியம் கைகூடும். வீடு, மனை, வாகனம் வாங்க ஏற்ற தருணம். குழப்பங்கள் முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். உடல்நிலையில் கவனம் தேவை. பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். கலைஞர்கள், எழுத்தாளர்கள் நல்ல பலனை அடைவார்கள். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். வெளிநாட்டு அழைப்பு கையெழுத்து ஆகும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

துலாம்: எண்ணங்கள் யாவும் ஈடேறும். வழக்கு முடிவுக்கு வரும். திருமணக் காரியம் கைகூடும். தூர தேசப் பிரயாணம் செல்ல நேரிடும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். மன சந்தோஷம் கிட்டும். நீண்ட நாள் முடிவுக்கு வராத சில வேலைகள் உடன் தடை நீங்கி வெற்றி அளிக்கும். சத்ரு தொல்லை விலகும். பொருளாதாரம் பலப்படும். மக்களால் சந்தோஷம் கிட்டும். பத்திரிக்கைகளில் பெயர், புகழ் வரும். மனசலனம் தீரும். கலைஞர்கள், எழுத்தாளர்கள் முன்னேற்றம் அடைவார்கள். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. குருப்ரீதி செய்து வரவும்.

விருச்சிகம் : சுப நிகழ்ச்சிகள் நடக்கும். மேல் படிப்புக்கு வெளிநாடு செல்லும் யோகம் வரும். பத்திரிகைகளில் பெயர் வரும். நீண்டகால எண்ணங்கள் ஈடேறும். சத்ரு தொல்லை விலகும். உடல் நிலையில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். புதிய தொழில் தொடங்க ஏற்ற தருணம். வீடு / வாகனம் வாங்க நல்ல காலம். குழந்தைகள் இடம் மாறிச் செல்வார்கள். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சி நடக்கும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். நெருங்கிய உறவினர் / நண்பர் விலகிப் போக நேரிடும். அயல் தேசம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். மனசலனம் விலகும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / குரு வழிபாடு நலம் தரும்.

தனுசு: வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் ஏற்படும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். சுபநிகழ்ச்சிகள் கை கூடும். நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல அனுகூலம் ஏற்படும். உடல்நிலை பாதிக்காது. புதிய வாகனம் வாங்க நேரிடும். ஆடை அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். செலவுகள் சுபமானதாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். மனை / வீடு வாங்க நல்ல காலம். கணவன் - மனைவி உறவு சுமுகமாக இருக்கும். உத்தியோக வேலைப் பளு அதிகரிக்கும். ராகு / கேது / சனி வழிபாடு சிறந்தது.

மகரம்: தனம், வாக்கு, கல்வி மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். பங்கு மார்க்கெட், ஏற்றுமதி இறக்குமதி தொழில் செய்பவர்கள் நல்ல பலனை அடைவார்கள். பணக்கஷ்டம் வராது. தொழில்துறையில் நல்ல மாறுதல் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு இட மாற்றம், வேலை மாற்றம் உண்டாகும். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சத்ரு தொல்லை விலகும். உடல் நிலை பாதிக்காது. திடீர் தனயோகம் கிட்டும். படிப்பில் மேன்மை உண்டாகும்.

பரத்வாஜ் பதில்கள்

• எனது கணவருக்கு புற்றுநோய் உள்ளது. நோயிலிருந்து அவர் எப்போது குணமடைவார்?

- கௌசல்யா ராஜகோபாலன்

தங்கள் கணவருக்கு 66 வயதில் குருதசை ஆரம்பமாகி உள்ளது. இதனால் குழந்தைகளால் மனக்கசப்பு, தீராத தொல்லை, கடன் தொல்லைகள் ஏற்படும். உங்களுக்கு 72 வயது வரை சந்திரதசை நடக்கும். இந்த சந்திரதசை கணவருக்குப் பாதுகாப்பை அளிக்கும். இறைவனைப் பிரார்த்திக்கவும்.

• விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்கான சான்றிதழ் வேண்டி உச்சநீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். வழக்கு வெற்றி பெறுமா?

- பி.ஆர்.கே.சாரி, சென்னை

2.1.2006 முதல் தங்கள் ஜாதகப்படி, சந்திரசை குருபுத்தி ஆரம்பமாகி உள்ளது. வழக்கில் வெற்றி பெறுவீர்கள். ராஜ சன்மானம் பெறுவீர்கள்.

• 1. என் தங்கையின் திருமண பந்தம் சந்தோஷமாக அமையுமா? அவளின் கழுத்து வலி குணமாகுமா?

2. எனது அக்காவுக்கு குழந்தை பாக்கியம் எப்போது? பரிகாரம் தேவையா?

3. எனக்குக் குழந்தை பாக்கியம் உண்டா? எப்போது?

- புவனா, தஞ்சை

1. தங்களுடைய சகோதரிக்குச் சரியான ஜாதகம் சேர்க்கப்படவில்லை. தங்களுடைய சகோதரியும் அவரது கணவரும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவது அரிது. 29.3.2007க்குப் பிறகு மறுமணம் செய்ய முயற்சிப்பது நல்லது. தற்போது சுக்ரதசை, சந்திர புத்தி நடப்பதால் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுள்ளது. பொறுமை காக்கவும். 29.3.2006க்குப் பிறகு நிவர்த்தியாகும்.

2. தங்களது அக்காவுக்கு 37 வயதில் குழந்தைப்பேறு ஏற்படும். பரிகாரம் தேவையில்லை.

3. தங்கள் ஜாதகப்படி புத்திர ஸ்தானதிபதியான சூர்யன் லக்னத்துக்கு 6-ல் மறைவு பெற்றுள்ளதாலும், செவ்வாய் தசை நடப்பதாலும் காலதாமதமாக குழந்தைப்பேறு ஏற்படும். சஷ்டி விரதமிருந்து கந்த சஷ்டி கவசம் படித்து வரவும். 2007-ல் குழந்தை பிறக்கும்.


மனக்கிலேசம் போகும். செலவுகள் பயனுள்ளதாக இருக்கும். வீடு / வாகனம் வாங்க நல்ல தருணம். மகான்களின் தரிசனம் கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். வழக்கு வெற்றிப் பாதையில் செல்லும். சனி / குரு வழிபாடு சிறந்தது.

கும்பம்: பெயரும், புகழும் தேடி வரும் வாரம். ஒவ்வொரு காரியத்துக்கும் முத்திரையைப் பதித்து நல்ல பெயரை எடுப்பீர்கள். பணக் கஷ்டம் இராது. கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. குடும்ப வாழ்வில் அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. உடல் நிலையில் கவனம் செலுத்தவும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். நெருங்கிய உறவினர் / நண்பர்கள் விலகிப் போவார்கள். வண்டி வாகனத்தில் போகும்போது உஷார். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். எதிர்பாராத அதிர்ஷ்டம் கிட்டும். புதிய முயற்சி பலன் அளிக்கும். ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக் கும்.

மீனம்: உத்தியோகத்தில் பதவி உயர்வு, பண உயர்வு ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். வீடு / வாசல் வாங்க ஏற்ற காலம். கணவன் - மனைவி அனுசரித்துப் போவது நல்லது. எண்ணங்கள் யாவும் ஈடேறும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். எதிர்ப்பு விலகும். கொடுக்கல் வாங்கல் நற்பலனைத் தரும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். மனசலனம் தீரும். வாக்குவன்மை மேலோங்கும். கலைஞர்கள், பத்திரிகையாளர்களுக்கு நற்பெயர் கிட்டும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். நீண்ட கால எண்ணம் ஈடேறும். வழக்கு வெற்றி அளிக்கும். பணக்கஷ்டம் நீங்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். தூரதேச அழைப்பு கிட்டும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு சிறந்தது.

படம் : ஸ்ரீஹரி

9 ஆண்டுகளுக்குமுன் நடந்த உண்மை சம்பவம்



என் நாத்தனாரை பிரசவத்திற்காக இரவு 1 மணிக்கு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். கவுண்டரில் பத்தாயிரம் ரூபாய் கட்டுங்கள் என்றார்கள். பிரசவ டாக்டர் வந்தார் பரிசோதித்தார். பிரசவத்திற்கு மொத்தபணமாக 19,500ஐயும் கட்டுங்கள் என்றார். காலையில் பேங்க்கில் எடுத்து கட்டுகிறோம் என்றோம். அதற்கு 4 பவுனுக்கு குறையாத தங்க சங்கிலி ஒன்றை கவுண்டரில் கொடுங்கள். பணத்தை கொடுத்துவிட்டு அதை திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்கள். அதையும் செய்தோம். ஆனால் குழந்தை இறந்து பிறந்தது. அப்போது நினைத்தேன் பிரசவத்திற்கு இலவசம் என்று எல்லா மருத்துவமனைகளிலும் ஒரு சட்டம் வரவேண்டும் என்று.



Dr. திருமதி.ஜெயந்தி ராஜேந்திரன் Ph.D.,
உடுமலைப்பேட்டை

அல்டிமேட்ஸ்டார் அஜீத் நடிக்கும்

ஏவிஎம்மின்

திருப்பதி U

பேரரசு

பரத்வாஜ்
S.சரவணன் D.F.Tech
ஆண்டனி
GK

AVM PRODUCTIONS

M.சரவணன் M.S.குகன்

வசூல் ராஜாக்கள்!

தேர்தல் திருவிழா
தெருவெல்லாம் நடக்குதுங்க!
தேடிவந்து ஓடி வந்து
தேனொழுகப் பேசுறாங்க!

வேட்பாளர் சொத்துகள
பேப்பர்ல போடுறாங்க!
வாக்காளர் சேத்ததெல்லாம்
வயித்துக்குச் சோறுதாங்க!

அள்ளித் திங்கறதுக்கு
அலுமினியத் தட்டிருக்கு
மொண்டு குடிப்பதற்கோ
எவர்சில்வர் சொம்பிருக்கு!

ஒண்ட இருக்குதுங்க
ஒழுவுற குடிச ஒண்ணு!
மேக்கூர மாத்தாம
ஆச்சுதுங்க வருஷம் ரெண்டு!

தாலியில தகடாட்டம்
காலரைக்கா தங்கமுண்டு!
அடகுக்கு வெச்சதுல
வட்டியாச்சு ரெண்டு பங்கு!

ஏசி அறைக்குள்ள
எங்களை நெனப்பீங்களா?
கும்புடு போட்டதுக்கு
குறையேதும் தீர்ப்பீங்களா?

ஊருக்குள்ள உங்க காரு
மறுபடியும் வந்திருமா?



தெருவோரக் குப்பையின்னு
எங்களையும் தள்ளிருமா?

வீட்டை ஒளிரவைக்க
உருப்படியா வழியில்ல!
நாடு ஒளிருதுன்னா
நம்பவே முடியலைங்க!

தேர்தல் II ஸ்பெஷல்

எம்.ஜி.கன்னியப்பன்

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது



காதலைக் கூறு போட்டுச் சொல்ற பத்தாயிரத்துச் சொச்சம் தமிழ் சினிமா கதைகள்ல ஒண்ணுதான் அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது. சிறந்த ஒளிப்பதிவாளரான விஜய்மில்டன் முதன்முதலா இயக்குநர் அவதாரம் எடுக்கறப்போ இந்தக் குட்டையிலதான் விழணுமா?

ஹீரோயின் மல்லிகா கபூரை ஒருதலையா லவ் பண்றார் ஹீரோ பரத். இது தெரியாம மல்லிகாவோ, கிரிக்கெட் பிளேயரும் தொழிலதிபருமான அருண்குமாரைத் தள்ளி நின்னு டாவடிக்கிறாங்க. ஆனா அவரோ நியூஸ் ரீடரான தீபு கூட டேட்டிங் போக, லவ் ஃபெயிலியரான இந்த இரு தலைகளும் அருண்குமார் - தீபு ஜோடியைப் பிரிக்கறதுக்கு சின்ன புள்ளைங்களாட்டம் மேப் எல்லாம் வரைஞ்சு சதித்திட்டம் போடறாங்க...! இடைவேளைக்கப்புறம், 'பூவே உனக்காக' விஜய் ஸ்டைல்ல மல்லிகா காதலுக்கு பரத் துணைபோய் தியாகியா நிக்கும்போது படம் கஷ்டப்பட்டு முடிஞ்சுடுது!

முதல் பாதி முழுக்க இளமையான காட்சிகள். அடுத்த தலைமுறைக்கான படமா, கணினியில் வரைந்த டிஜிட்டல் ஓவியங்களைப் பயன்படுத்தி ஒரு காதல் கவிதைத் தொகுப்பு பதிப்பிச்ச மாதிரி ரொம்ப அழகா இருக்கு.

வட இந்திய வரவான மல்லிகாவின் துறுதுறுப்பு முதல்பாதி காட்சிகளுக்கு ஓ.கே. ஆனா இரண்டாம் பாதியில் பரத் அவருக்காக தெய்விக காதல் ரேஞ்சுக்கு உருகும்போது ஏனோ ஈர்ப்பு ஏற்படலை. ஹீரோயின் போலவே ஹீரோவின் அம்மாவும் துறுதுறுன்னு பில்டிங் எல்லாம் தாவறது காமெடி மாதிரி ஆயிடுது! அருண்குமாரோட மாமாவான எம்.எஸ். பாஸ்கர் கலக்கிட்டாரு. அவர் யாரோ ஒரு பரத்துக்காக, தனக்கு நெருக்கமான அருண் - மல்லிகா திருமணத்தை நிறுத்த முயற்சி செய்யறதுதான் நம்பற மாதிரி இல்லை.

சென்னையிலுள்ள மெக்ஸிகன் ரெஸ்டாரண்டுல நடக்குற காட்சிகளும் ஆட்டம் பாட்டமும் ஏதோ தனித் தீவுல நடக்குற மாதிரி அந்நியமா இருக்கு. யுவன் இசை நவீனம். ராஜு முருகன் எழுதியிருக்கிற ரெண்டு மேற்கத்திய பாடல்கள் அமர்க்களம். இயக்குநர் தொழில்நுட்பம், கிராபிக்ஸ் இதையெல்லாம் ஒதுக்கி வைச்சுட்டு, யதார்த்தமா மனித உணர்ச்சிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்திருந்தா, 'படம் ரொம்ப அழகா இருக்கு'ன்னு சொல்லியிருக்கலாம். இப்போ அப்படிச் சொல்ல பயமா இருக்கு!

- லஜ்ஜாவதி

ஆயுதக் கிடங்காகும் அமெரிக்கப் பள்ளிகள்!

முதுகில் பையோடு உள்ளே நுழையும் அந்த மாணவனை வகுப்பறை வாசலில் தடுத்து நிறுத்துகிறார்கள். அவனது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை மெட்டல் டிடெக்டரைக் கொண்டு தேய்க்கிறார்கள். பீப் பீப் என்று அடிவயிற்றிலிருந்து கத்துகிறது அந்த வஸ்து. 'இவனைப் பிடிங்க' என்று கத்துகிறார் அந்த அதிகாரி. பேந்தப் பேந்த விழிக்கும் அந்த மாணவனைப் பிடித்து ஒருவர் உலுக்குகிறார். இரும்பு பக்கிள் போட்ட பெல்ட் கழண்டு விழுகிறது. 'ஓ-இதுதானா? சரி நீ க்ளாஸுக்குப் போ' என்று அனுப்பி வைக்கிறார்கள்.

அமெரிக்காவின் ப்ரூக்ளின் மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மேற்படி நிகழ்ச்சி சர்வ சாதாரணம்.

அமெரிக்கப் பள்ளிகளில் வன்முறை பெருகிக்கொண்டிருக்கிறது. ஏதோ தீவிரவாத முகாமிலிருந்து கைப்பற்றியதைப் போல குவியல் குவியலாக ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். பாக்கெட்டில் பிச்சுவா, பிஸ்டல் கொண்டு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால்தான் இந்த முன்னேற்பாடு என்கிறது அதிகார வட்டம்.

பள்ளிச் சுவரில் வன்முறையைத் தூண்டும்படி கண்டபடி கிறுக்குகிறார்கள் என்பதால் ஹைலைட்டர், ஸ்கெட்ச் பேனா எல்லாவற்றையும் பிடுங்கிக் கொள்கிறார்கள். சென்ற வாரம் ஜான் ஜே உயர்நிலைப் பள்ளியில் ஒரு ஆர்ப்பாட்டம். 'மெட்டல் டிடெக்டரைக் கொண்டு எங்களை மேயாதே' என்று, கடுப்படைந்த மாணவர்கள் குரல் எழுப்பினர். ஐந்து பேரை குண்டுக் கட்டாக ஜீப்பில் ஏற்றிவிட்டார்கள். கூடுதலாக செல்பேசிகளையும் வேவு பார்க்கிறார்கள். ஒரு நாளைக்கு பத்துப் பள்ளிகளுக்குத் திடீர் விசிட்.

'பேண்ட்ல பக்கிள் போட்டிருந்த ஒரே



காரணத்துக்காக என்னை கிரிமினல் மாதிரி நடத்தறாங்க. இது நியாயமா?' என்று கேட்கிறான் ஜுவான். 'ச்சே, எனக்கு ரொம்ப அசிங்கமாயிருக்கு' என்று முகம் சுளிக்கிறாள் 17 வயது ஜெஸிக்கா.

மாணவர்கள் ஏன் வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்பதற்கு பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் டாப் 5 மட்டும் இங்கே. 1) நேத்து டீவில ஒருத்தர் இப்படித்தான் சுட்டார். 2) அர்னால்ட் படம் பார்த்தேன். 3) விளையாட்டுக்குச் சுட்டேன் 4) எனக்கு அவனை/அவளைப் பிடிக்கலை. 5) வீட்டுல துப்பாக்கி கிடைச்சது. அதான் ட்ரை பண்ணினேன்.

- மருதன்



‘ஜோக்கு’ பெட்டி

“கட்சி ஆபீஸ் கதவுல தாழ்ப்பாளைக் கழட்டி வச்சுடுங்க!”

“ஏன் தலைவரே?”

“தேர்தல் கூட்டணிக்காக கதவைத் திறந்து வச்சுருக்கேன்னு சொன்னா யாரும் நம்ப மாட்டேங்கறாங்க!”

- அம்பை தேவா

“இந்த எலெக்ஷன்ல நீங்க தனியா நிக்கறீங்களாமே...?”

“யார் சொன்னது? எனக்குப் போட்டியா என் கூட பத்து பேர் நிக்கறாங்க...!”

- கே.ஆனந்தன்

“எல்லா தேர்தல்லயும் நின்னு டெபாசிட் இழப்பாரே ஒருத்தர். அவர் பேர் என்ன?”

“எப்போதும் வென்றான்!”

- இரத்தின மனோகரன்

“தலைவர் எப்பவும் உண்மையைத்தான் பேசுவார்.”

“அதுக்காக ‘கள்ள வோட்டுப் போட்ட கண்மணிகளுக்கு நன்றி’-ன்னா போஸ்டர் அடிச்சு ஒட்டறது?”

- லலிதா செல்லப்பா

அழகியான் தானே
அரிஉருவன்தானே
பழகியான் தாளே பணிமின்:
குழவியாய்த்
தான் ஏழ்உலகுக்கும், தன்மைக்கும்
தன்மையனே
மீன் ஆய் உயிர் அளிக்கும் வித்து

என்கிறார் திருமழிசையாழ்வார்.

தெள்ளிய சிங்கமாகிய தேவை திருவல்லிக்கேணி கண்டேனே என்கிறார் திருமங்கை ஆழ்வார்.

அழகியசிங்கம் அவன். பார்ப்பதற்கு ரமணீயமான ரூபம். அதனால்தான் நரசிம்ஹ வபுவே நம: ஸ்ரீமதே நம: என்கிற நாமாக்களால் அர்ச்சிக்கப்படுகிறான்.

இந்த ஸ்ரீமத் சப்தத்துக்கு 'ரூப யௌவன லாவண்ய அதீவ ஸௌந்தர்ய ரூப:' என்று பராசர பட்டர் வியாக்யானம் பண்ணுகிறார். ரொம்ப அழகான ரூபம். பார்ப்பதற்கு ரமணீயமான திவ்ய ரூபம் படைத்தவன் நரசிம்ஹன் ஆனதனாலே ராமகிருஷ்ணாதியவதாரங்களைக் காட்டிலும் அழகாக வந்து தோன்றினான். எங்கும் நிறைந்தான். அவசர கோலத்திலே, 'அந்தக் குழந்தை எந்த இடத்தைக் காட்டுமோ?' என்று எல்லா இடங்களிலும் நிறைந்தான்.

அத்ருச்யத அத்யத்புத ரூபம். இந்த அவதாரத்தில் ஈடுபடாதவர்களே கிடையாது. எல்லோரும் இதில் ஈடுபட்டு இதன் பிரபாவத்தைப் பேசியிருக்கிறார்கள்.

ஸ்ரீமத் பாகவதத்தில் ஸப்தம ஸ்கந்தத்தில் நரசிம்ஹ அவதாரத்தைச் சொல்லும்படியான சுலோகம் வருகிறது. ஸ்ரீமத் பாகவதம் மொத்தம் நரசிம்ஹ பரம். ராமாயணமும் நரசிம்ஹனைச் சொல்கிறது. மஹாபாரதமும் நரசிம்ஹனைச் சொல்கிறது. பதினெட்டு புராணங்கள், உப புராணங்கள், ஆசார்யர்கள் ஆழ்வார்களின் ஸ்ரீ சூக்திகள் அனைத்தும் நரசிம்ஹனுடைய பிரபாவத்தையே பரக்க பேசுகின்றன என்று சொன்னால் மிகையாகாது.

ஸ்ரீமத் பாகவதம் இருக்கிறது பாருங்கள், அது கிருஷ்ணனுடைய கதையைச் சொல்வதற்கென்றே ஏற்பட்டது. ஸரஸ்வதி நதிக்கரையிலே, வியாஸ பகவான் ரொம்ப கவலையோடு உட்கார்ந்திருக்கிறார். அங்கே நாரதர் வந்தார். வியாஸரைப் பார்த்து, "சுவாமி! இத்தனை சிந்தனையோடு இருக்கிறீரே, உலகத்தில் சிதை - சிந்தை என்று இரண்டு கேள்விப் பட்டிருக்கிறீர்கள் அல்லவா?" என்றார்.

சிதை - சிந்தை இரண்டையும் நாம் உணர வேண்டும்.

குறையொன்றுமில்லை

எட்டாம் பாகம் 17

சிந்தா - என்பது மனசிலே ஏற்படக் கூடிய வியாகூலம் - கஷ்டம்.

சிதா என்பது ஸ்மசானத்திலே சவத்தை எரிப்பதற்காக விறகினாலும் வரட்டியினாலும் அடுக்கப்பட்ட படுக்கை.

சாஸ்திரம் என்ன சொல்கிறது...? சிந்தையைக் காட்டிலும் சிதையே மேலானது என்கிறது. ஏனென்றால் சிதையானது பிராணனற்ற சரீரத்தைத்தான் எரிக்கிறது. சிந்தை பிராணனுள்ள சரீரத்தையே எரித்து விடுகிறது.

அதனால்தான் வியாஸரிடம் "சிந்தைக்கு இடங் கொடுக்கலாமா?" என்று கேட்டார் நாரதர்.



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அதற்கு வியாஸ பகவான் சொன்னார்:

''வேதங்களையெல்லாம் நான் விவரித்தேன். புராணங்களும் எழுதினேன். மகாபாரதத்தை எழுதினேன். இவ்வளவு எழுதியும் என் மனத்தில் வியாகூலமாக இருக்கிறது. எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கிறது'' என்றார்.

அப்போது நாரதர் அவருக்கு உபதேசம் பண்ணினார்:

''ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தை நன்கு விபுலமாக - நல்ல முறையிலே நீங்கள் எடுத்துக் கூறவில்லை. அங்கங்கு கோடி

ஒரு மனிதனை வெளித்தோற்றத்தை மட்டும் கண்டு நல்லவனென்றோ தீயவனென்றோ உறுதி செய்துவிடாதே. உள்ளத்தின் பண்பைக் கண்டு முடிவு செய்.

பலாப்பழம் பார்ப்பதற்கு முள்ளு முள்ளாகத் தோற்றமளிக்கும். உள்ளுக்குள் சுவையுள்ள சுளைகள் பல உண்டு. வீணை கோணல்தான்; ஆனால், இனிய நாதமுண்டு.

எட்டிப்பழம் பார்க்க பளபளவென்றிருக்கும்:

காண்பித்திருக்கிறீர். அந்த கிருஷ்ணாவதாரத்தின் மகிமையைச் சொல்லும்படியான புராணத்தை இயற்றும். இந்த வியாகூலம் நீங்கும்" என்றார்.

அந்த உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு, கிருஷ்ணனுடைய அவதாரத்தைச் சொல்வதற்காகவே பாகவத புராணத்தை எழுதினார். அதில் தசம ஸ்கந்தத்தில் கிருஷ்ணாவதாரத்தையும் லீலைகளையும் ரொம்ப அழகாக எடுத்துச் சொல்கிறார். அப்படிச் சொல்கிறபோது, கிருஷ்ணனை 'அற்புதமான குழந்தை' என்றார் வியாஸர். அதே வியாஸர் அதே பாகவதத்தில் ஸப்தம ஸ்கந்தத்தில் நரசிம்ஹ அவதாரத்தைச் சொல்கிறபோது "அத்ருச்யத அத்யத்புத ரூபம்" என்று குறிப்பிடுகிறார். கிருஷ்ணாவதாரம் அற்புதம்; நரசிம்ஹ அவதாரமோ அதி அற்புதம்! ஆகவே இந்த நரசிம்ஹ அவதாரமானது வியாஸருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டது என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறதல்லவா! அவருடைய வாக்கிலிருந்தே அது தெரிகிறது.

ருக்மிணி பிராட்டி, ஏழு சுலோகங்களை கிருஷ்ணனுக்கு எழுதி அனுப்பினாள். அந்த ஏழு சுலோகங்களில் எங்கேயாவது அவனை 'கிருஷ்ணா' என்று கூப்பிடுகிறாளா? என்றால் இல்லை. ஏனென்றால் 'கிருஷ்ணா' என்று கூப்பிட்டால் எங்கே வராது போய் விடுவானோ என்கிற பயம்!

கிருஷ்ணாவதாரமே 'வந்தாய் போல வாராதாய்; வாராதாய் போல் வருவானே' என்றபடிக்குத்தான் அமைந்தது. 'வரேன்' என்று சொல்லுவான்; ஆனால் வரமாட்டான். வரமாட்டேன் என்று சொல்லுவான்; ஆனால் வந்து நிற்பான்!

"ஹே மதுசூதனா!" என்று கிருஷ்ணனை அணுகிக் கேட்டான் துரியோதனன் : "பீஷ்ம - துரோணாதிகளெல்லாம் உம்மை வரவேற்க பூரண கும்பத்துடன் நின்று கொண்டிருக்கிறார்கள். சக்கரவர்த்தி நான் அவர்களோடு நிற்கிறேன். எல்லாவற்றையும் தாண்டிக் கொண்டு உன் அல்ப புத்தியைக் காட்டி, நீ விதுரர் கிருஹத்துக்குப் போனாயே!" என்றான்.

விதுரர் கிருஷ்ணன் வருவான் என்று எதிர்பார்க்கவேயில்லை. அங்கே போய் அவரைப் படாதபாடு படுத்திவிட்டான் கிருஷ்ணன். விதுரரோ கிருஷ்ணனுக்கு ஆசனத்தை எடுத்துப் போட்டுவிட்டு அதைத் தடவித் தடவிப் பார்க்கிறார். வாழைப்பழத்தை உரித்து, பழத்தைக் கீழே எறிந்துவிட்டு தோலை கிருஷ்ணனிடம் தருகிறார். தோலைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் பரமாத்மா!

அந்த மாதிரி அவர் பக்தியோடு கொடுத்ததைச் சாப்பிட்டான்! எதையும் எதிர்பார்த்து அவன் அவர் கிருஹத்துக்குப் போகவில்லை.

இப்படிப்பட்ட கிருஷ்ணனை,

"மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே
செய்யும் மணாளனை
ஏலாப் பொய்கள் உரைப்பானை
இங்கே போதக் கண்டீரே?"


என்று பாடினாள் ஆண்டாள். ஒரே பொய் இந்த கிருஷ்ணன்! அவதரித்த காலத்திலேயிருந்து பொய்தான்! ஒரு கிருஹத்திலே போய், பானையிலிருந்து வெண்ணெயை எடுக்கிறான். அங்கே கோபஸ்த்ரீகளெல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள்.

குழந்தை அவர்களிடம் சொல்கிறது: "இது என் வீடு என்று நினைத்துக் கொண்டு வந்து விட்டேன்."

"அப்படியானால் ஏன் அந்த பானைக்குள் கையை விட்டாய்?" என்றார்கள். அதற்கு அந்தக் குழந்தை நிர்ப்பயமாக ஒரு பொய்யைச் சொல்கிறது பாருங்கள்.

"பிருந்தாவனத்தில் நான் மாடுகளையெல்லாம் மேய்த்துக் கொண்டிருக்

தொட்டாலே கசக்கும், நாவற்பழம் கருமை; ஆனால், இனிக்கும். பாம்புக் குட்டி பள பளவென்றிருக்கும்; கொடிய விஷத்தைத் தரும். அம்பு நேராக இருக்கும்; உயிரை வாங்கும்.



வாரியார் அமுதம்

கிறேனல்லவா... ஐந்தாறு நாட்களாக ஒரு கன்றுக் குட்டியைக் காணவில்லை. அது இந்தப் பானைக்குள் இருக்கிறதா என்று தேடிக் கொண்டிருக்கிறேன்!"

இது பொய்! ஏலா பொய்கள் உரைப்பானை!

இப்படிப்பட்ட பொய்யனைக் கூப்பிட்டால் வருவானா? ரொம்ப இக்கட்டில் இருக்கிறபோது 'கிருஷ்ணா' என்று கூப்பிட்டால், அவன் உடனே வந்து கையைப் பிடிக்க வேண்டும். யோசனை பண்ணி, நிதானமாகப் பொய் சொல்லிக் கொண்டிருந்தால் காரியம் நடக்காதே!

ஆகவேதான், உடனே உதவக்கூடிய பெருமாள் யார் என்று பார்த்து அவனை நோக்கி விஷயத்தைச் சொன்னாள் ருக்மிணி. அவள் சொன்னதான அந்த ஏழு சுலோகங்களிலும் 'கிருஷ்ணா' என்று பகவானை அவள் கூப்பிடாமல் 'நரசிம்ஹா!' (நரலோக மனோபிராமம்) என்கிறாள். "அழகான ரூபம் உடையவனே..." என்கிறாள். திவ்ய மங்கள ரூபம் அவனுடையது. அந்த நரசிம்ஹனைப் பார்க்கிறபோது எவ்வளவு சுந்தர மூர்த்தியாகத் தெரிகிறான். ருக்மிணியின் ஹ்ருதயத்தைக் கொள்ளை கொண்ட மூர்த்தி - மனோபிராமன். காலத்தே வந்து உதவக்கூடியவன். அடித்த கை பிடித்த பெருமாள் என்று பெயர் அவனுக்கு - "இங்கேயா இருக்கான்?" என்று ஹிரண்யன் ஸ்தம்பத்தைத் தட்டியவுடனேயே வந்து கையைப் பிடித்துக் கொண்டான். எந்த அவதாரத்தில் இந்த மாதிரி உண்டு? அவன் உடனே வந்து உபகாரம் பண்ணக்கூடிய அவதாரம் என்பதால்தான் ருக்மிணி பிராட்டி நரசிம்ஹன் என்று பேசினாள்.

ஆகவே, பாகவதத்தைப் பார்த்தோமானால், எங்கும் நரசிம்ஹ பிரபாவம்.

ராமாயணத்திலே பார்த்தோமானால், எங்கும் நரசிம்ஹ பிரபாவம். மாரீசன் ராவணனுக்கு உபதேசம் பண்ணுகிறான்:

"சீதையை அபகரிக்க வேண்டும் என்று சொல்கிறாயே. சீதை எங்கே இருக்கிறாள் தெரியுமா? அவள் கிட்டே நாம் நெருங்க முடியாது; தெரிந்து கொள்! ராமனிடம் போக முடியுமா? அவன் யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? சீதை யார் மடியிலே உட்கார்ந்திருக்கிறாள் தெரியுமா? நரசிம்ஹ அவதாரமாகத் தோன்றினானே, அவன் மடியிலே உட்கார்ந்திருக்கிறாள்."

"எங்கும் ஒவ்வொரு இடத்திலும் அவனைப் பார்க்கிறேன்" என்று நரசிம்ஹனாகவே ஸ்ரீ ராமனைப் பார்த்தான் மாரீசன்.

அதே மாதிரி, சுக்ரீவன் ராமனைப் பார்க்கிற கட்டத்தில், பேசுகிறான்.

"வாலியைக் கொல்லும் சக்தி ராமனுக்கு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டவுடனேயே அவன் ஸப்தஸாரவிருக்ஷங்களை பேதித்து (ஏழு மரங்களைத் துளைத்து) துந்துபி என்கிற அசுரனுடைய எலும்புக்கூடை பாதத்தினால் தொட்டு அது தூர போய் விழுந்தபோது, அதைப் பார்த்துக் கொண்டிருந்த சுக்ரீவன் "ஹே ராமா! தாசரதே!" என்று கூப்பிடவில்லை.

கை குலுக்கி, பதம் பணிந்த பிறகு "தவப்பிரஸாதாது நரசிம்ஹ ராகவா" என்றான்! "நீ வெறும் ராகவன் இல்லை; நரசிம்ஹ ராகவன்" என்கிறான்!

(வளரும்)



கல்லூரி மாணவர் ஜெர்ரிக்கு காதலிக்கப் பிடிக்காது. அவனது நண்பர்களோ 'உன்னை எவ காதலிப்பா? உன்னாலும் யாரையும் லவ் பண்ண முடியாதுடா!' என்கிற ரீதியில் வெறுப்பேற்றுவார்கள். 'ஒருத்தி என்ன மூணு பேரை லவ் பண்ணிக் காட்டுறேண்டா!' என்று சவால் விடுகிறார் ஜெர்ரி. கையோடு ஒரு கல்லூரி மாணவி, ஒரு சினிமா நடிகை, ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் என மூன்று பெண்களை அவர் காதலிக்க(?!) ஆரம்பிக்கிறார். சவாலுக்காக காதலிக்க ஆரம்பித்த ஜெர்ரிக்கு கடைசியில் உண்மையான காதலின் வலியும், வலிமையும் புரிகின்றன. கடைசியில் அவர் யாரைக் கைப்பிடிக்கிறார் என்பதுதான் சுவாரஸ்யமான முடிச்சு'' என்கிறார் கதை, திரைக்கதை, வசனம் எழுதியிருக்கும் காமெடி கிங் கிரேஸி மோகன். இயக்கம் காந்தன், பிரபல இயக்குநர் மௌலியின் தம்பி.

''ஜெர்ரி - கலகலப்பான படமாக இருந்தாலும், கனமான கருத்தையும் உள்ளடக்கிய படம். பெரியவங்க செய்யத் தயங்கும், செய்ய முடியாத விஷயத்தைக் கூட இன்றைய இளைஞர்கள் சர்வ சாதாரணமாகச் செய்து விடுவார்கள். அதுவும் 'குளோபலைசேஷன்' வாழ்க்கையைச் சந்திக்கிற இளைய தலைமுறையினர் பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமலேயே துடுக்குத்தனமாக எதையும் செய்துவிடுகிறார்கள். அப்படியொரு துடுக்குத்தனமும், யதார்த்தமும் நிறைந்த இளைஞனாக ரமேஷ் நடித்திருக்கிறார்'' என்கிறார் இயக்குநர் காந்தன்.

இவருக்கு இது முதல் படம் என்றாலும் காந்தம் மாதிரி வசீகரிக்கிற மூன்று கதாநாயகிகளுடன் பட்டையைக் கிளப்பியிருக்கிறார். ஒருவர் ஸ்ருதி மலையாள வரவு. அடுத்து மீரா வாசுதேவன். ''நான் நடிக்கணும் நடிக்கணும்னு ஏங்கின போலீஸ் இன்ஸ்பெக்டர் ரோல். படத்துலே நானும் ரமேஷ்-ும் டாம் அன்ட் ஜெர்ரி மாதிரி ஒருத்தரை ஒருத்தர் துரத்துறதைப் பார்த்து வயிறு புண்ணாயிடும். நான் அவரைக் கன்காணிக்கத் துரத்துவேன். அவர் என்னைக் காதலிக்கத் துரத்துவார். இதுலே ஏற்படுற எதிர்பாராத சுவாரஸ்யங்களை நெனச்சுப் பாருங்க'' என்று சிரிக்கிறார் மீரா.

மும்தாஜ் நடிகையாகவே நடித்திருக்கிறார். கவர்ச்சியை ஓரங்கட்டிவிட்டு நல்ல நடிப்பிலும் சோபிக்க முடியும் என்று நிரூபித்



• ஸ்ருதி



• மும்தாஜ்



• ரமேஷ்

திருக்கிறார். இப்படி தொடக்கம் முதலே நடிப்பை நம்பிக் களமிறங்கியிருந்தால் இடையில் காணாமல் போயிருக்க வேண்டாமே!

- விஷுவல்தாசன்

ஜில்லுன்னு மூனு காதல்!!!!(??)

தூண்களின் பரிமள சுகந்தம்!




கூற்றாலநாதர் ஆலயத்தைத் தவிர, தமிழ்நாட்டில் உள்ள மூன்று பிரசித்தமான ஆலயங்களுக்குள் நான் இந்தத் தடவை பிரவேசம் செய்தேன். முதலாவது, ஸ்ரீரங்கம் ரங்கநாதரின் ஆலயம்; இரண்டாவது மதுரை மீனாக்ஷி அம்மன் கோயில்; மூன்றாவது, கும்பகோணம் கும்பேசுவர ஸ்வாமி கோயில்.

ஸ்ரீரங்கத்தில் கோயிலுக்குள் பிரவேசிக்கும்போதே அங்கு ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பது தெரிய வந்தது. முக்கியமாக, அது என் மூக்குக்குத் தெரிந்தது. "இதென்ன கூத்தாயிருக்கிறது? இது ஸ்ரீரங்கம் கோயில்தானா? வேறு ஏதாவது கோயிலா? ஸ்ரீரங்கம் கோயிலாயிருந்தால் கோயில் தூண்களிலிருந்து ஒரு திவ்ய பரிமள வாசனை வந்து கொண்டிருக்குமே, அதைக் காணோமே?" என்று திகைத்துப் போனேன். நூறு நூறு வருஷமாக ஸ்ரீரங்கநாதரின் பக்தர்கள் பொங்கல், புளியோதரை முதலிய பிரஸாதங்களைச் சாப்பிட்டுவிட்டு, தங்களுடைய திருக்கரங்களை அந்தத் திருத்தூண்களில் துடைத்துவிட்டுப் போயிருந்ததன் பயனாக, அந்தத் தூண்களிலிருந்து அப்படிப்பட்ட பரிமள சுகந்தம் வருவது வழக்கம். இப்போது அந்த வாசனையைக் காணோம். தூண்களைப் பார்த்தாலோ, எல்லாம் சுத்தமாயிருந்தன. திருநெய்ப் பிசுக்கு, பிரஸாத சேஷம், சுண்ணாம்புக் காரை ஒன்றுமேயில்லை. தூண்களில் செதுக்கப்பட்டிருந்த சிற்ப வேலைகள் எல்லாம் நன்றாய்த் தெரிந்தன.

ஸ்ரீரங்கம் கோயிலில் இது ஒரு பெரிய புரட்சியாகவே எனக்குத் தோன்றிற்று. இந்தப் புரட்சிக்குக் காரணமானவர் மாஜி புரட்சிக்காரரான டாக்டர் ராஜன்தான் என்பதையும் தெரிந்துகொண்டேன். சுகாதார மந்திரியையே கோயில்களுக்கும் மந்திரியாகப் போட்டது எவ்வளவு பொருத்தமானது என்றும் அப்போது எனக்குத் தெரிந்தது.

டாக்டர் ராஜன் இம்மாதிரி கோயில் தூண்களையும், தரையையும் சுத்தப் படுத்துவதோடு நிற்பாரா, அல்லது, கோயில்



அர்ச்சகர்களையும் பிடித்துக் குளிப்பாட்டி சலவை துணி உடுத்தித் தான் விடுவாரா என்று நான் யோசித்துக் கொண்டு நிற்கையில், ஒரு அய்யங்கார் ஸ்வாமிகள் வந்தார். கோயிலைச் சுற்றிக் காட்டுவதாகவும், பிறகு பெருமாளையும் தாயாரையும் எனக்காக சேவை சாதிக்கச் சொல்வதாகவும் தெரிவித்தார். கோயிலை நான் ஏற்கெனவே பல முறை பார்த்திருந்தபோதிலும், அவருடைய ஒத்தாசையை நிராகரிக்க மனமின்றி அவருடன் வருவதற்கு ஒப்புக்கொண்டேன். அய்யங்கார் ஸ்வாமிகள் கோயில் முழுவதையும் - ஸ்ரீரங்கத்து உலக்கை பிடிக்கிற இடம் உள்பட - நன்றாக எனக்குக் காட்டினார். ஒவ்வொரு இடத்தையும், ஒவ்வொரு சந்நிதியையும் பற்றி விவரமாகச் சொல்லிக்கொண்டு வந்தார். பெருமாள் சந்நிதியையும், தாயார் சந்நிதியையும் சேவிக்கப் பண்ணினார்; பிரஸாதமும் வாங்கிக் கொடுத்தார். இடையிடையே, தாம் வடநாடெல்லாம் சுற்றிப் பார்த்திருப்பதாகவும், சென்னையில் பல பெரிய மனுஷர்களைத் தமக்குத் தெரியுமென்றும் கூறிவந்தார்.

அமரர் கல்கி



"உங்களுக்கு மயிலாப்பூரில் திருநாராயண அய்யங்கார் ஸ்வாமிகளைத் தெரியுமோ? எனக்கு நன்றாய்த் தெரியும். அடியேனைப் பார்த்தால் விடமாட்டார். பத்து நாளானாலும் போகக் கூடாதென்பார்... இதுதான் பொன்னரங்கம் என்று சொல்கிறது! நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். அருமையான சேவை. வட தேசத்தில் காசி, மதுரா, துவாரகை எங்கேயும் இப்பேர்ப்பட்ட சேவை கிடையாது. இதுதான் சொர்க்க வாசல்!" என்று இவ்வாறு சொல்லிக்கொண்டு வந்தார். நானும் கேட்டுக் கொண்டே வந்தேன்.

எல்லாம் முடிந்து விடைபெற்றுக் கொள்ளும் சமயம் வந்தபோது, அவர் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, "பாருங்கள்! இப்பேர்ப்பட்ட அருமையான கோயிலை நமது பெரியவர்கள் கட்டி வைத்திருக்கிறார்கள். இப்போது காங்கிரஸ் மந்திரிகள் வந்து எல்லாவற்றையும் பாழாக்கப் பார்க்கிறார்கள். நம் ஊர் அய்யங்கார் மந்திரியாக வந்திருக்கிறார் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். அவரே இப்போது இப்படிப்பட்ட அநியாயம் பண்ணுகிறார்..." என்றார்.

"எந்த அய்யங்காரைச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அவர்தான், டாக்டர் ராஜன்..."

"டாக்டர் ராஜன் அய்யங்காரா, என்ன?"

"ஆமாம்; அசல் வடகலை அய்யங்கார்."

"ஓஹோ! அதனால்தான் அப்படிச் செய்கிறார். ஸ்ரீரங்கநாத ஸ்வாமி தென்கலை அய்யங்கார்தானே? அவருடைய கோயில் எப்படியாவது குட்டிச்சுவராய்ப் போகட்டுமே..."

"என்ன சொன்னீர்? ரங்கநாதர் தென்கலையென்று யார் ஐயா சொன்னது உமக்கு?" என்று அந்த அய்யங்கார் ஸ்வாமி ஓங்கினார் குரலை.

"பொறும் ஐயா, பொறும்! அப்படியானால் ரங்கநாதர் வடகலை அய்யங்கார்தானோ?" என்றேன்.

"அதில் சந்தேகமென்ன?"

"சரி; அப்படியானால் நான் டாக்டர் ராஜனிடம் போய்ச் சொல்லி, பொங்கல் பிரஸாதத்தை இனிமேல் வடகலை அய்யங்கார்கள் மட்டுந்தான் தூணில் துடைக்கலாம் என்று உத்தரவு போடச் சொல்கிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு வெளியேறினேன்.

- வானதி பதிப்பகத்தின் 'தாகூர் தரிசனம்' நூலிலிருந்து...


கம்பிக்குப் பதில் மெத்தனால்!



சுஜாதா

ஆங்கிலத்தில் 'paradigm shift' என்று ஒரு சொற்றொடரை அதிகம் பயன்படுத்துகிறார்கள். ஒரு இயலில் ஏற்படும் அடிப்படை உதாரண மாற்றத்தை விவரிக்கப் பயன்படுத்துகிறார்கள். தமிழில் திணை மாற்றம் என்று புதிதாகச் சொல்லலாம். சில உதாரணங்கள் மூலம் விளக்கலாம். முன்பெல்லாம் வாசலில் கோலம்போட செம்மண், கோலப்பொடி போன்றவற்றைப் பயன்படுத்தினோம். இப்போது ஒரு ஸ்டிக்கரை ஒட்டிவிடுகிறோம். கோலம் மாறுவதில்லை. உதாரண முறை மாறுகிறது. கோலம் போடுவது என்பது அடிப்படையான விஷயம். அதைச் செயல்படுத்தும் முறையில்தான் முழுமையான மாற்றம். இது ஓர் எளிய உதாரணம். செல்போன் ஒரு பாரடைம் ஷிப்ட், பீட்ஸா ஒரு திணை மாற்றம்.

'நானோ டெக்னாலஜி' முறைகளும் ஒரு (பாரடைம் ஷிப்ட்) திணைமாற்றம்தான். மூன்று தளங்களில் இந்த மாற்றத்தைப் பார்க்கலாம். சம்பிரதாய மைக்ரோ கம்ப்யூட்டர்கள் சிலிக்கான் தனிமத்தை ஆதாரமாகக் கொண்டு அமைத்த ட்ரான்சிஸ்டர் ஸ்விட்சுகள் மூலம் மின்சாரம் கடத்துவது, நிறுத்துவது இரண்டு செயல்களின்பாற்பட்டவை. இந்த ஏற்றி அணைக்கும் செயலை நானோ டெக்னாலஜியில் செய்வது சிலிக்கான் இல்லை. ஆர்கானிக் மாலிக்யுல்கள் என்னும் கூட்டணுக்கள்தான். அடுத்து மைக்ரோ டெக்னாலஜியில் ஸ்விட்சுகளுக்கு இடையே உள்ள இணைப்புகள் மிக நுட்பமான உலோக ஒயர்கள். நானோ டெக்னாலஜியில் இடை இணைப்புகள் கார்பன் நானோட்யூப்கள். ஸ்விட்சையும் மாற்றிவிடுகிறார்கள். இணைப்பையும் மாற்றி விடுகிறார்கள். ஆனால் இப்படி இணைத்து வடிவமைக்கப்படும் கம்ப்யூட்டர்களை மாற்றிப்போட்டு வேறு வேறு சாத்தியக்கூறுகளை மட்டும் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இது நிகழும்போது இந்தத் திணைமாற்றம் முழுமைபெறும். ஆராய்ச்சிக் கூடங்களில் நானோ மீட்டர் அளவில் ட்ரான்சிஸ்டர்களும், டையோடுகளும் தனித்தனியாகச் செய்துபார்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்த்து ஒரு முழு கம்ப்யூட்டரைச் செய்ய இவர்களின் அணுகுமுறை இப்படியிருக்கும் : கோடி கோடி கோடி கோடி அணுக்கூட்டங்கள் நிறைந்த ஒரு சில்லை வைத்து முதலில் துவங்குவார்கள். அந்த அபரிமிதமான அணுக்கூட்டத்தினை பகுதி, பகுதியாக ஒழுங்குபடுத்தி ஒரு கம்ப்யூட்டர் இணைப்பாக மாற்றுவார்கள். ஒரு கூடை நிறைய எல்லா இணைப்புகளும் கோடிக் கணக்கில் உள்ளன. அவற்றில் தேர்ந்தெடுத்து ஒரு கம்ப்யூட்டர் கிடைக்குமா? என்று பரிசோதித்துப் பார்க்கும்





சாகசம் இது.

'**மா**லிக்யூல்' என்னும் கூட்டணுவை ஒரு ஸ்விட்சாக மாற்றலாம் என்கிற யோசனை ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளாக இருக்கிறது. (ஐபிஎம்) நிறுவனத்தைச் சேர்ந்த 'எவிரான்' என்பவரும் அமெரிக்க நார்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 'ராட்னர்' என்பவரும் இதை ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில் சொல்லியிருந்தார்கள். இது சமீபத்திய நடைமுறையில்தான், சில வேதியியல் பொறியியல் முன்னேற்றங்களால் சாத்தியமாகியிருக்கிறது. மாலிக்யுல் என்னும் கூட்டணுக்கள் சில சேர்ந்துகொண்டு ஆக்ஸிடேஷன் ரிடக்ஷன் என்னும் வேதியியல் மாற்றம் பெறும்போது ஒரு ஸ்விட்சாக அணைந்து ஏற்றும் குணத்தைப் பெறுகின்றன என்று யு.சி.எல்.ஏ. பல்கலைக்கழகத்திலும் ஹ்யூலிட் பாக்கார்டு நிறுவனத்திலும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளனர். மிகக் குறுகிய நானோமீட்டர் அளவுள்ள கார்பன் குழாய்களையும் ஆராய்ந்து வருகிறார்கள். ரொம்பக் குழப்பாமல் இந்த ஆராய்ச்சிகளின் சாரத்தை மட்டும் சொல்கிறேன். நானோ அளவு நுட்பமான அணைந்து ஏற்றும் சாதனத்தைத் தேடிப்பிடிப்பதே இவர்கள் குறிக்கோள். மாலிக்யுல் அளவில் கிடைக்கும் நுட்பம் இன்றைய மைக்ரோ கம்ப்யூட்டர்களின் நுட்பத்தைவிட பல்லாயிரம் மடங்கு சிறியது. மாலிக்யுல் அளவில்தான் இயற்கை இயங்குவதால் அதைச் சீண்டிப் பார்க்கும் தைரியமான பயணம் இது.

மாலிக்யுல்களை ட்ரான்சிஸ்டர்களாகவும் ஸ்விட்சுகளாகவும் மாற்ற முடியும் என்று அறிந்தோம். ஆனால் அவற்றால் தனித்து இயங்க முடியாது. அவற்றை







"நல்லா இருக்கிற பாலத்தை தலைவர் சீர் செய்யணும்கிறார்"

"ஏனாம்?"

"மகளுக்குச் சீர் செய்யணுமாம்."

- வீ.விஷ்ணுகுமார்



"சுயேச்சை வேட்பாளர்கூட வோட்டுப் போட ஏதோ குடுத்தாராமே... என்ன அது?"

"தையல் மெஷினுக்கான ஊசி!"

- அம்பை தேவா

"இப்பதானே வோட்டுக் கேட்டுட்டு போனீங்க. மறுபடி எதுக்கு வந்துருக்கீங்க?"

"உங்க வீட்ல ரெண்டு கள்ள வோட்டுகளும் இருக்கறதா கேள்விப் பட்டேன்!"

- அம்பை தேவா



இணைக்க வேண்டும். அதற்கு சம்பிரதாயமான ஒயர்களை முதலில் பயன்படுத்திப் பார்த்தார்கள். அதில் பல சிக்கல்கள் வந்தன. ஸ்விட்சுகள் மாலிக்யூல் அளவிலிருக்க அவற்றை இணைக்கும் கம்பிகள் பத்தாயிரம் மடங்கு பெரிதாக இருந்தன. இதனால் தற்போது கம்பிக்குப் பதில் மெத்தனால் போன்ற திரவ வழிகளை இணைப்பாகப் பயன்படுத்தலாம் என்று ஓர் ஆராய்ச்சி ஓடிக் கொண்டிருக்கிறது. நெல்லுக்குத் தண்ணீர் பாய்ச்ச பாத்தி கட்டுவதுபோல சில்லுக்குள் எலக்ட்ரான்களைப் பாய்ச்ச பாத்தி கட்டுகிறார்கள். சிறிய மாலிக்யூல் அளவு மெத்தனால் பாத்தி. ஃபேய்ன்மன் சொன்னதுபோல் 'கீழே நிறைய இடம் இருக்கிறது'. மற்றொரு கோஷ்டி முற்றிலும் வேறுபட்டுச் சிந்திக்கிறார்கள். எதற்காக சம்பிரதாய கம்ப்யூட்டர் அமைப்பைக் கட்டிக்கொண்டு அழ வேண்டும்? விட்டுவிடலாமே! உயிர்களின் 'டி.என்.ஏ.' என்னும் மரபணு என்னவெல்லாம் விந்தைகள் செய்கிறது. அடினின், தயோமின், குவனின், சைடோசின் என்னும் நான்கே நான்கு சமாசாரங்களை வைத்துக்கொண்டு விந்தை புரிகிறது. ஒரு உயிரின் அத்தனை அடையாளங்களையும் ஒரு நூலேணிக்குள் அடக்கி வைத்திருக்கிறது. ஒரு தனி மினிராஜ்யம் சிருஷ்டி, சம்ஹாரங்களுடன் மாலிக்யூல் அளவில் இயங்குகிறது. அத்தனை செய்தியடர்த்தி கொண்ட இந்த விந்தை டி.என்.ஏ.யை உதாரணமாகக் கொண்டு கம்ப்யூட்டர் செய்ய முடியாதா? என்றனர். விளைவு 'டி.என்.ஏ. கம்ப்யூட்டிங்' என்ற புதிய இயல் 1994-ல் துவங்கியது. அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

(விந்தை தொடரும்)



மஹாபாவம்!

கோஹத்தி - பசு வதை - என்பது கனவிலும் நினைக்கக் கூடாத மஹாபாவம்; படு பாதகம் என்பது, வதை வரையில் போகவேண்டாம்; அதற்கு ஒரு சின்ன ஹிம்ஸை விளைவித்தால்கூடப் பாபமாகும். அதனால் கோஹத்தி என்பது ப்ராயச் சித்தமேயில்லாத மாத்ருஹத்திக்கு ஸமானமான மஹா பெரிய தோஷமாகும்.

கறக்கிற மட்டும் ஒட்டக் கறந்து குடித்துவிட்டு, அல்லது அந்தப் பாலை விற்றுப் பணம் பண்ணிவிட்டு, கறவை நின்று போன பிறகு கோவுக்குத் தீனி போட்டு ரக்ஷித்து என்ன ப்ரயோஜனம் என்கிற எண்ணத்தில் அதை கசாப்புக் கடைக்கு அனுப்புவதென்பது, நம்மைப் பெற்ற தாயார் வயதாகி வேலை செய்ய முடியாமல் ஆனவுடன் அவளைக் கொலை செய்தால் எப்படியோ அப்படித்தான். கோ மாம்ஸம் தாய் மாம்ஸத்துக்கு ஸமானமே.

தானாக மரித்த கோவின் சர்மத்தைத்தான் ஸங்கீத வாத்யங்களுக்கு எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் ஸங்கீதம் தெய்வ பரமானதாக இருக்கிறதனால், ஸ்வாமி கோயிலிலேயே வாத்யங்கள் வாசிக்க வேண்டித்தானே இருக்கிறது? ஆனால் அதற்காக உயிருள்ள கோவை உபயோகமாயில்லை என்பதற்காக வதைத்துத் தோலை உரிப்பது என்றால் அதை ஸ்வாமி க்ஷமிக்கவே மாட்டார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அருள்வாக்கு

வள்ளிக்கு உயிரே போய்விட்டது போலிருந்தது. அவளது உயிருக்குயிரான ஆட்டுக்குட்டி, சோர்ந்து, தளர்ந்து, அசைவின்றித் தரையில் படுத்துக் கிடந்தது. அவள் அதை அப்படியே அள்ளிக்கொண்டு, அடுத்த தெருவிலிருந்த மாட்டாஸ்பத்திரிக்கு ஓடினாள்!

"குட்டியின் வாயெல்லாம் களிமண்ணாயிருக்கு. அது வயித்துக்குள்ளயும் போயிருக்கணும். கொஞ்சம்னா இப்படி ஆகாது... பேதிக்கு மருந்து கொடுத்திருக்கேன். ரெண்டு மூணு வாட்டி போனதும், இந்த மாத்திரையை வாயிலே போட்டு, தண்ணி ஊத்தி விடுங்க. எல்லாம் சரியாயிடும்!" என்றார் டாக்டர்.

வீடு வந்தாள். வாசலிலேயே கணவன். விவரம் அறிந்ததும் அவனும் பதறிவிட்டான். "கொஞ்சம் அதிகமாயிடுச்சோ என்னமோ...?"

"எது...?"

"அகத்திக்கீரை போட்டமே... கொஞ்சம் அதிகமா தின்னிருக்குமோன்னேன்!"

"ஆடு மாடுங்க, மனுஷங்களைப் போல வழிச்சு வாரிக் கொட்டிக்காதுய்யா! டாக்டர் வயித்துக்குள்ளே களிமண் போயிருக்கலாம்னுல்ல சொன்னாரு..!"

"நல்லவேளை... அறுநூறு ரூபா... தப்பிச்சிச்சு...!"

"என்ன உளர்ற..?"

"ஆமா வள்ளி... நம்ம கசாப்பு தர்மா இல்லே... அவன் வந்து குட்டியை எடை போட்டுப் பாத்தான். அறுநூறு ரூபாய்க்குப் பேசி முடிச்சேன்!"

வள்ளி பத்ரகாளியானாள்! "உனக்கு அறிவிருக்கா...? யாருகிட்ட கேட்டுய்யா? கசாப்புக்குப் பேசி முடிச்சே...?"

"யாருகிட்ட கேக்கணும்...?"

"ஏன்யா... தெருநாய் கடிச்சுக் குதறி, எங்கிருந்தோ தூக்கியாந்த இந்தக் குட்டியை, அதுகிட்டே இருந்து காப்பாத்தி, மருந்து மாயம் பண்ணி தாயில்லா அதுக்குத் தாயாயிருந்து, பாலும் சோறும் போட்டு இவ்ளோ பெரிசாக்கினது, அதோட கழுத்தை அறுத்துக் காசாக்குறதுக்குன்னா நினைச்சே...? போகட்டும் அந்தக் காசை வெச்சு என்னத்தைய்யா பண்ணப் போறே...?"



ஆன்ரு

"என்ன வள்ளி...? நம்ம புள்ளையோட பொறந்தநாள 'தாம் தூம்'னு கொண்டாடணும்னா பணம் வேணுமில்ல..?"

"ஒரு புள்ளைய காவு கொடுத்திட்டு, இன்னொரு புள்ளைக்குப் பொறந்தநாள் கொண்

டாட நினைக்கிற நீயெல்லாம் ஒரு மனுஷனாய்யா...? இனிமே குட்டி விஷயத்திலே தலையிட்டே.... நான் மனுஷியா இருக்க மாட்டேன்... பார்த்துக்கோ...!

அவனை அதட்டிவிட்டு, வீட்டுக்குள் நுழைந்த வள்ளி விறிட்டாள், "யோ... தூளியிலே தூங்கிட்டிருந்த புள்ளை எங்கேய்யா...?"

இருவரும் வாசலுக்கு ஓடினர். பின்பக்கம், வீதியில்... எங்கேயும் குழந்தையைக் காணோம்! தவழும் குழந்தை... எங்கே போய்விடும்?

அவன் கத்தினான். "ஏண்டி... குழந்தையைத் தூளியிலே போட்டுட்டு எங்கேடி தொலைஞ்சே...?"

"தொலையலேய்யா... ஆட்டுக்குட்டி செத்துப் போயிடுமோங்கிற பயத்திலே அதைத் தூக்கிட்டு மாட்டாஸ்பத்திரி ஓடினேனா..."

"குழந்தையை மறந்திட்டே...! குழந்தைக்கு ஏதாவது ஆகட்டும்... அப்புறம் பாரு...!"

"வாயை மூடுய்யா, வாயைத் திறந்தா என்ன சொல்லுறதுன்னில்லே...?"


பால்காரி பாப்பாத்தி பதறி அடித்துக்



ஊரான் புள்ளைய...

கொண்டு ஓடி வந்தான். "ஏய் வள்ளி... உடனே ஆஸ்பத்திரிக்கு ஓடு... ஓம்புள்ளை.. தொண்டைல ஏதோ சிக்கிக்கிட்டு மூச்சுத் திணறி... நான் அப்பத்தான் மாட்டுக்குத் தண்ணி எடுத்துட்டுப்போக வந்தேனா... ஓம் புள்ளையப் பாத்து பயந்துபோய் ஆஸ்பத்திரிலே சேர்த்திட்டு உங்கிட்டே ஓடியாந்தேன்..!"

டாக்டர் சொன்னார், "குழந்தை களிமண்ணைத் தின்னுருக்கு... அது தொண்டைல அடைச்சுக்கிடுச்சு... கொஞ்சம் லேட்டாயிருந்தாக் கூட, குழந்தையைக்



"கட்சி ஆபீஸ் கதவுல தாழ்ப்பாளைக் கழட்டி வச்சுடுங்க!"
"ஏன் தலைவரே?"
"தேர்தல் கூட்டணிக்காக கதவைத் திறந்து வச்சுருக்கேன்னு சொன்னா யாரும் நம்ப மாட்டேங்கறாங்க!"
- அம்பை தேவா

காப்பாத்தியிருக்க முடியாது!"

ஏதோ நினைத்துக்கொண்டவனாய் அவனிடம் கேட்டாள், "எதுக்குய்யா அந்த நாசமாய்ப்போன களிமண்ணை அள்ளியாந்து திண்ணைல கொட்டி வெச்சிருக்கே...?"

"திண்ணையெல்லாம் பேர்ந்து கிடக்கு... கொஞ்சம் களிமண்ணை அள்ளியாந்து பூசி விடுறதுதானேனு நீதானடி தொளைச்செடுத்தே...'

அவளுக்கு நினைவில்லை, பேச்சை நிறுத்திக்கொண்டாள்.

இரவு உணவை முடித்துக்கொண்டு உறங்கச் சென்றார்கள். வள்ளியின் மனம் ஆட்டுக்குட்டி, குழந்தை, களிமண் என்பதிலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அவன் அவளை சமாதானப்படுத்த நினைத்துச் சொன்னான், "போகட்டும்மா... என்னை மன்னிச்சிடு... குட்டி எப்பவும் இனி நம்ம கூடவே இருக்கும்... நம்ம ரெண்டாவது புள்ளையா...! சரிதானே...?"

"ரெண்டாவதா இல்லையா... மூணாவதா!"

"வள்ளி...!" மகிழ்ச்சியில் அவன் அவளை இடுப்போடு கட்டிக்கொண்டான்!

"மெதுவா... மெதுவா! உள்ள ஒண்ணு இருக்குனு சொன்னேன்ல! அது போகட்டும்... எம் மனசுக்குள்ளே ஒரு சினிமா படமே ஓடுதுய்யா... அடுத்த வீட்டுப் புள்ளைங்களையும் எதுத்த வீட்டுப் புள்ளைங்களையும் நீ ஆசையா தூக்கி வச்சுக் கொஞ்சுறப்போல்லாம், உனக்கொரு புள்ளையப் பெத்துக் குடுக்க முடியலியேன்னு என் மனசு எம்மாம் பாடுபடும் தெரியுமா? எத்தினி ஆஸ்பத்திரிக, எத்தினி டாக்டருங்க...? அத்தினி பேருமில்ல, ஒரேயடியா 'உனக்குப் புள்ளையே பொறக்காது'ன்னுட்டாங்க...? நான் உடைஞ்சு போயிட்டேன்யா...! அன்னிக்கு அந்த முரட்டு நாய் வாயிலே இந்த ஆட்டுக் குட்டி மாட்டிக்கிட்டு, 'மே... மே...'னு கத்தினப்போ, 'அம்மா என்னைக் காப்பாத்தும்மா... என்னைக் காப்பாத்தும்மா'னு என்னைப் பார்த்துக் கெஞ்சுறாப்பல இருந்துச்சய்யா! அதைக் காப்பாத்தி, அது யார் வீட்டுக் குட்டினு தெரியாமே, என்னையே அதோட தாயா பாவிச்சு, அதுகிட்டே அன்பையும் ஆசையையும் காட்டி வளத்தேன். அதைப் பாத்த கடவுள், டாக்டர்களையெல்லாம் ஏமாத்திட்டு என் வயித்திலே ஒரு பரிசைக் கொடுத்தார்.

குழுதாடித் தண்ணிக்காக வந்த ஒரு பொம்பளையாலதானேய்யா இப்போ நம்ம புள்ளை பொழைச்சிருக்கு? அதனாலேதான்யா, ஊரான் புள்ளைய ஊட்டி வளத்தா தாம் புள்ளை தானா வளரும்னு சொல்லுறாங்க!"

விடிந்ததும் முதல் வேலையாக திண்ணையில் கொட்டிக் கிடந்த களிமண்ணை அள்ளி வீதியில் எறிந்தான். குட்டியின் எடையை அதிகரித்துக் காட்டி, அதை அதிக விலைக்கு விற்க எண்ணி, அதன் வயிற்றுக்குள் அவ்வளவு களிமண்ணைத் திணித்து விட்டதை நினைத்தபோது.... அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை! அவன் 'டக்'கென்று ஆட்டுக்குட்டியின் கால்களைப் பற்றிக்கொண்டு வாய் விட்டுச் சொல்லிக்கொண்டான், "என்னை மன்னிச்சிருடா...!"

கள்ள வோட்டுக்குக் கல்தா!

நரேஷ்குப்தா நறுக் பேட்டி!

பரபரப்பான தேர்தல் பணிகளுக்கு நடுவிலும் புன்னகை இழையோடும் முகத்தோடு கேள்விகளை எதிர்கொள்கிறார் தேர்தல் ஆணையர் நரேஷ்குப்தா ஐ.ஏ.எஸ்.

வாக்காளர் அடையாள அட்டை மூலம் எந்த அளவுக்கு கள்ள வோட்டைக் குறைக்க முடியும்?

"அதைப்பற்றி முன்கூட்டியே எதுவும் கூற இயலாது. இருப்பினும் தமிழகத்தில் கள்ளவோட்டைத் தடுக்க தேர்தல் ஆணையம் மும்முரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. வாக்குப்பதிவின்போது ஒவ்வொரு அடையாள அட்டையும் தீவிரமாகப் பரிசோதிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குச் சாவடிகள், அரசு, காவல்துறை அதிகாரிகளால் கூர்ந்து கண்காணிக்கப்படும். தவிர எப்படியாவது கள்ள வோட்டுப் போட்டுவிடலாம் என்று வருகிறவர்கள் இந்தமுறை மாட்டிக் கொள்வார்கள். காரணம், கைவிரலில் 'மை' வைக்கும் முறையில் மாறுதல் வருகிறது."



தமிழகத்தில் தொடர்ந்து எழுபது சதவிகிதம் வாக்குகள் மட்டுமே பதிவாகின்றன. எஞ்சிய மக்கள் வாக்களிக்க முன் வராதது ஏன்?

"இதற்கு முன்பு தேர்தல் என்பது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே நடந்து கொண்டிருந்தது. ஆனால் இப்போதெல்லாம் தேர்தல் என்பது வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை என்று அடிக்கடி நடந்துகொண்டிருக்கிறது. இதனால் மக்கள் தேர்தல் மீது சலிப்படைகின்றனர். கட்சிப் பூசல்களைக் கண்டு, மக்கள் குழப்பமும் கோபமும் அடைந்துள்ளனர். அதனாலேயே தமிழகத்தில் முப்பது அல்லது நாற்பது சதவிகித மக்கள் வாக்களிக்க முன்வருவதில்லை."

வாக்களிக்க மறுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா?

"நிச்சயமாக முடியாது. வாக்களிக்க மறுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க எந்தவிதமான சட்டங்களும் இந்தியாவில் இல்லை. ஆனால் உலகிலேயே ஆஸ்திரேலிய அரசில் இதற்குச் சட்டம் இருக்கிறது. வாக்களிப்பது என்பது ஒவ்வொரு குடிமக்களின் பிறப்புரிமை. பொதுமக்கள் வாக்களிப்பதும், அளிக்காமல் இருப்பதும் அவர்களுடைய விருப்பம். அதையும் மீறி அவர்களைக் கட்டாயப்படுத்தி வாக்களிக்க வைத்தல் என்பது, மனித உரிமை மீறலுக்குச் சமம்."

வடமாநிலங்களில் தேர்தல் கண்காணிப்பிற்காக கேமராக்கள் பொருத்தப்படுவது போல தமிழகத்திலும் பொருத்தப்படுமா?

"நிச்சயமாக! அதிலும் பதற்றம் நிறைந்த பகுதியென்றால் கண்காணிப்பு கேமரா கட்டாயமாகப் பொருத்தப்படும்."

- **வி.விமலன்**

படம் : **ஸ்ரீஹரி**

தேர்தல் II ஸ்பெஷல்

தேர்தல் II ஸ்பெஷல்

திகுதிகு திண்டிவனம்...

சாதிப்பார

திண்டிவனம் தொகுதி, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாசின் சொந்தத் தொகுதி. இங்கு சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் வாக்காளர்கள் உள்ளனர். கடந்த முப்பதாண்டுகளில் காங்கிரஸ், தி.மு.க. ஆகிய இரு கட்சிகள் மட்டுமே வென்று வந்த தொகுதி. 2001 சட்டமன்ற தேர்தலில் பா.ம.க. துணையோடு அ.தி.மு.க. தொகுதியைக் கைப்பற்றியிருக்கிறது. தற்போது ராமதாசின் மூத்த சகோதரி மகன் என்.எம்.கருணாநிதி பா.ம.க வேட்பாளராகவும், கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சரும், தொகுதியின் சிட்டிங் எம்.எல்.ஏவுமான சி.வி. சண்முகம் அ.தி.மு.க. வேட்பாளராகவும் போட்டியிடுகிறார்கள்.



• சேதுநாதன்



• என்.எம்.கருணாநிதி

ராமதாசின் சொந்த ஊரிலேயே அவரது கட்சி வேட்பாளரைத் தோற்கடித்துக் காட்ட வேண்டும் என்கிற முனைப்பு அ.தி.மு.க. தரப்பில். பா.ம.க மற்றும் கூட்டணிக் கட்சிகளின் வாக்குகளைப் பெற்றுத்தான் சிட்டிங் எம்.எல்.ஏ கடந்த தேர்தலில் வெற்றிபெற முடிந்தது. அ.தி.மு.க. வோட்டுகளை மட்டும் பெற்று அவர் வெற்றி பெற்று விடவில்லை. எனவே இந்த முறை இங்கு அ.தி.மு.கவின் தோல்வி முடிவான ஒன்று என்று உச்சபட்ச பிரசாரத்தில் இறங்கியுள்ளது பா.ம.க.

"1972-ல் கட்டப்பட்டது இந்திராகாந்தி பேருந்து நிலையம். 1996வரை அந்தப் பேருந்து நிலையம் இயங்கி வந்தது. அதற்கப்புறம் பேருந்துகள் உள்ளே போறதே இல்லை. நடப்பு எம்.எல்.ஏ தன்னோட பதவிக் காலத்தில் சிறிது கூட இப்பிரச்னை குறித்து கண்டுகொள்ளவே இல்ல. திண்டிவனம் நகருக்கு நல்லதொரு பேருந்து நிலையத்தை இவர் நினைத்திருந்தால் நிறுவியிருக்கலாம். ஆனால், தற்போது மேம்பால வளைவுகளின் கீழே ஏழு இடங்களில்


• சி.வி.சண்முகம்

தொகுதி விசிட்

சண்முகம்?

சாலையோரப் பேருந்து நிலையங்கள் வெட்டவெளியில் இயங்கி வருகின்றன. இந்த நகரின் பேருந்து நிலையப் பயன்பாடே இந்த லட்சணம் என்றால், தொகுதிக்குள் மத்த பணிகள் எப்படி இருக்கும்னு நெனைச்சுப் பாருங்க" என்கிறார் திண்டிவனம் இந்திராகாந்தி பேருந்து நிலைய கடைக்காரர்கள் சங்க பொருளாளர் கே. நாராயணன்

"தொகுதி எம்.எல்.ஏ கல்வி அமைச்சர்னுதான் பேரு. தொகுதி மக்களோட கல்வி வளர்ச்சிக்கு எதையுமே அவர் செய்யலை. ஒரு கவர்மெண்ட் ஐ.டி.ஐ., கவர்மெண்ட் பாலிடெக்னிக்னு எதுவுமே எங்க தொகுதியில் கிடையாது. அவரோட கல்வித் துறையில்கூட தொகுதிக்கு எந்தப் புது விஷயமும் வந்து சேரல. திண்டிவனத்துலயும் ரெட்டணையிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி இருக்கு. இந்த இரண்டு மாணவர் விடுதிக்கும் ஒருத்தர் தான் விடுதிக் காப்பாளர். ரெண்டு விடுதி மாணவர்களையும் எப்படி அவர் கண்காணிக்க முடியும்!" என வினவுகிறார் ரெட்டணை கிராமத்தைச் சேர்ந்த பழனிவேல்.


• கே. நாராயணன்


• செல்லப்பிள்ளை

"எம்.ஜி.ஆர். காலத்துலேர்ந்து ரெட்டை

இலைக்குத்தான் வோட்டுப் போட்டு வர்றேன்! முதல் மூனு வருஷம் மழையே பெய்யாததால் கடும் வறட்சி. பின்னாடி பெருவெள்ளம். கிராமத்துல எல்லாரோட வீட்டுக்கும் வெள்ள நிவாரணப் பணம் கெடைச்சுது. இதெல்லாம் பத்தாதுங்கற மாதிரி விவசாயிங்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்துல சொளையா பணமும் கெடைச்சது. வழக்கம்போல இந்த முறையும் ரெட்டை எலைக்குத்தான் என்னோட வோட்டு!" என்கிறார் மைலத்தைச் சேர்ந்த விவசாயி செல்லப்பிள்ளை.



• பழனிவேல்

திண்டிவனத்திலிருந்து எட்டு கி.மீ. தொலைவிலுள்ள சாரம் கிராமம், செஞ்சி தொகுதிக்கு உட்பட்டது. இங்கு கூட்டுறவு நூற்பாலை ஒன்று பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. அங்கு வேலை பார்த்த தொழிலாளர்களில் பெரும்பாலோர் திண்டிவனம் தொகுதியைச் சேர்ந்தவர்கள். "அந்த மில்லைத் திறந்து வெச்சு மறுபடியும் இயங்க வைப்பேன்னு வோட்டுக் கேட்டு வந்தப்ப வாக்குறுதி தந்தாரு. எம்.எல்.ஏ.ஆகி, வருஷம் அஞ்சு ஆகப் போறது. இன்னும் அந்த மில்லைத் திறந்து வைக்கல. போன தடவை கூட பா.ம.க ஆதரிச்சதாலதான் நாங்க எல்லாரும் ரெட்டை எலைக்கு வோட்டுப் போட்டோம். இந்தத் தடவை பா.ம.கவே அ.தி.மு.கவ எதிர்த்து நிக்குது. அதனால எங்க எல்லாரோட வோட்டும் மாம்பழத்துக்குத்தான்!' என்று உறுதியாகச் சொல்கிறார் மைலத்தைச் சேர்ந்த கலைச்செல்வி.

• கலைச்செல்வி



கூட்டணிக் கட்சிகளின் ஊழியர்கள் கூட்டத்தில் இருந்த பா.ம.க வேட்பாளர் கருணாநிதியைச் சந்தித்தோம். "அமைச்சர் தொகுதி என்பதால் பணம் புகுந்து இங்கு விளையாடலாம். தொகுதிவாசிகள் பணத்துக்கு விலை போய்விடக் கூடியவர்கள் அல்ல. பா.ம.க., தி.மு.க., காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு நிரந்தர வாக்குகள் அதிகளவில் இருக்கின்றன. எங்கள் அணியின் கூட்டணிக் கட்சிகளின் வாக்குபலத்தினால் நான் வெற்றி பெறுவது உறுதி!" என்றார்.

"திண்டிவனம் தொகுதியில் அ.தி.மு.க. வாக்கு வங்கி பலவீனமா இருக்கு. இங்கு ம.தி.மு.க. மற்றும் விடுதலைச் சிறுத்தைகளும் சொல்லிக் கொள்கிற மாதிரி இல்லை. இரட்டை இலை சின்னத்தோடும், அதனுடன் பணத்தை அள்ளிவிடும் திட்டத்தோடும் களத்தில் அ.தி.மு.க. நிற்கிறது. தி.மு.க. - பா.ம.க உள்ளிட்ட ஆறு கட்சிகளின் கூட்டணி பலமே திண்டிவனத்தில் வெற்றியை முடிவு செய்யும்!" என்கிறார் தொகுதியின் முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ. சேதுநாதன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

புரூஸ்லீக்கு டூப் போட்ட ஜாக்கிசான்!

கு.ஞானசம்பந்தன்

‘ஆங்கில ஜேம்ஸ்பாண்ட் நடிகர் ஷீன்கானெரி, உலகப் புகழ்பெற்ற ஜாக்கி சான் ஆகிய நடிகர்களுக்கு தமிழ்நாட்டில், குறிப்பாக மதுரையில் ரசிகர் மன்றங்கள் உண்டு’

- மதுரைச் செய்தி

நாங்கள் வண்டியில் ஏற, வண்டி மெதுவாக நடைபோடத் தொடங்கியது. எங்களைப் போன்றே வண்டி மாடுகளுக்கும் ‘டூப்’களைப் பார்த்ததில் உற்சாக மில்லை போலும்.

அதற்குள் எங்களை உற்சாகப்படுத்த நினைத்த மணி சொல்லத் தொடங்கினான். “இங்க பாருங்கடா. சாண்டோ சின்னப்பா தேவர் படத்திலே பாம்பு வருதுன்னு வச்சுக்கோ, ஒரே பாம்பு படம் முழுக்க வராதாம். ஒரே நீளமுள்ள பல பாம்புகளைத்தான் பயன்படுத்துவாங்களாம். அதுமட்டுமில்லை நாளைக்கு மேலக் கால் பாலத்தில, பதினைஞ்சு ரேஸ் மாட்டு வண்டிகள் கதாநாயகன் வண்டிய விரட்டப் போகுதாம். காலையில ரெடியா இருங்க இதே வண்டி நம்ம ஊர்ப் பாலத்துக்கிட்ட வரும்” என்று சொல்லி விட்டு எங்களை இறக்கி விட்டுவிட்டுப் போனான்.

தற்காலத்தில் விருமாண்டி படத்தில் கூட நான் இந்த ‘டூப்’ நிகழ்ச்சியைப் பார்த்தேன். கமல்ஹாசன் அடக்குற அந்த ஜல்லிக்கட்டு மாட்டை கதாநாயகி வளர்த்து வருவார். அந்த மாட்டுக்கு ‘சொறிமுத்து’ன்னு பேரு. கமல் ஒரே மாதிரி உருவமுள்ள இரண்டு மாடுகளை வாங்கி வளர்த்து வந்தார்.

“எதற்காக இரண்டு ஜல்லிக்கட்டு மாடுகள்? கதைப்படி ஒன்றுதானே வேண்டும்” என்று கேட்டேன் நான். அதற்கு அவர் “ஒரு மாட்டுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் படப் பிடிப்பு நிற்கக் கூடாது பாருங்க. அதுக்குத்தான் இது ‘டூப்’ ” என்று சொல்லிச் சிரித்தார்.

நான் நினைத்துப் பார்த்தேன்— உலகப் புகழ்மிக்க கராத்தே நடிகரான புரூஸ்லீயின் ‘பிக்பாஸ்’ படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் உயரமான இடத்தில் இருந்து குதிக்க வேண்டியிருந்தபோது புரூஸ்லீக்கு ‘டூப்’ போட்டவர் யார் தெரியுமா? நம்ம ‘ஜாக்கிசான்’தானாம்.

முதல்நாள் ஷூட்டிங் பார்க்கப் போய் பள்ளிக்கூடத்துக்கு வராத பையன்களை எல்லாம் காலை பிரேயர் கூட்டத்தில் வைத்து பி.டி. மாஸ்டர் ரவுண்டு கட்டி அடிக்கப் போவதாக எங்கும் வதந்தி நிலவியது.

இந்தச் செய்தி குறித்து நான் சிறிதும் கவலை கொள்ளவில்லை இன்று போனால் தானே அடி கிடைக்கும். இன்றைக்குத்தான் நாங்கள் வில்வண்டியில் மேலக்கால் பாலத்துக்குப் போகப் போகிறோமே. மொத்தமாக அடிக்கட்டும் அப்புறம் பார்ப்போம்.

இது விஷயமாக நான் என் அம்மாவிடம் இரகசிய ஆலோசனை செய்தேன். “எனக்கு ஒண்ணும் தெரியாது. நீ எப்படியாவது போ... ஆனா பள்ளிக்கூடம் மட்டும் போகாம இருக்காதே. அப்பா நேத்தே உன்னைத் தேடியிருக்கார்” என்று அம்மா சொல்ல, “அம்மா! நான் சிவாஜியோட நின்னு பேசினப்ப நீ பாத்திருக்கணும்...” என்று இழுத்தேன்.

“என்ன? நீ சிவாஜியோட பேசுனியா? பக்கத்தில் போய் நின்னியா?” என்று என் கையைப் பிடித்துக்கொண்டு ஆச்சரியமாய்க் கேட்டார் என் அம்மா.

“ஆமாம்” என்று ஒரேயடியாக டூப் விட்டேன்.

இதிலென்ன தப்பு இருக்கிறது? அங்கேயும் ‘டூப்’. இங்கேயும் ‘டூப்’ அவ்வளவுதான்.


“அதுமட்டுமில்லம்மா, நம்ம வீட்ல எல்லாரையும் பத்திக் கேட்டார். இன்னிக்கு எல்லாத்தையும்

சொல்றதாச் சொல்லியிருக்கேன்...'' என்று தயங்கினேன்.

''அப்ப நீ இன்னிக்கும் பள்ளிக் கூடம் போகப் போறதில்லையா?''

"நான் பள்ளிக்கூடம் போனா ஷூட்டிங்ல சிவாஜி... 'நேத்து வந்த அந்தப் பையன் எங்கே'ன்னு தேடுவாரே, நான் என்ன செய்யட்டும்? நம்ம குடும்பத்தைப் பத்தி, உன்னைப் பத்தி, அப்பாவைப் பத்தி அவருக்கு யார்தான் சொல்ல முடியும்?'' என்று கண்கலங்கக் கேட்டேன்.

''சரி சரி நீ போய் சினிமா எடுக்கிறதைப் பாரு. உன்னய நான்தான் கடைக்கு அனுப்பப் போறேன்னு சொல்றேன். அப்பாவுக்குத் தெரிஞ்சா முதல் அடி எனக்குத்தான் விழும்''



• படம் : புதூர் சரவணன்



என்று சொல்லிக்கொண்டே அம்மா உள்ளே போக, நான் உண்மையிலேயே கலங்கிப் போனேன். தாயன்புதான் எவ்வளவு இனிமையானது, சிநேகமானது பாருங்கள்.

காலை 10 மணிக்கு எங்கள் வில் வண்டி ஷூட்டிங் நடந்த இடத்தை

17

சினிமாவுக்குப் போகலாம் வாங்க!



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2006

படைப்பாளிகளுக்கும் வாசக எழுத்தாளர்களுக்கும் மாபெரும் வாய்ப்பு!

முதல் பரிசு - ரூ.10,000

இரண்டாம் பரிசு - ரூ.7,500

மூன்றாம் பரிசு - ரூ.5,000

கடைசித் தேதி : **ஜூன் 15**

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும்.

விதிமுறைகள், மற்ற விவரங்களுக்கு 30.4.2006 இதழ் கல்கியைப் பாருங்கள். அல்லது அடுத்த இதழுக்குக் காத்திருங்கள்.

- ஆர்.

நோக்கி விரைந்தது. சினிமாமணி கீழே இறங்கி வில்வண்டியில் இருந்த 50க்கும் மேற்பட்ட இளநீர்க் காய்களை சினிமா குழுவினர் அனைவருக்கும் வெட்டிக் கொடுக்கத் தொடங்கினான். (எல்லாம் அந்த நாராயணன் உபயம்தான்)

திடீரென்று கைதட்டும் ஆரவாரம் கேட்க மிகப் பெரிய 'பிளைமவுத்' காரில் கம்பீரமாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வந்து இறங்கினார். நேற்றுப் பார்த்த அந்த 'டூப்' நடிகரைப் போலவே இருந்தார். தப்பு... இவரைப் போலத்தான் அவர் இருந்தார் என்று சொல்ல வந்தேன்.

அவர் மகிழ்ச்சியோடு எல்லோருக்கும் கையசைக்க, சினிமாமணி அவருக்கு பசுமைமிக்க சோழவந்தான் இளநீரைக் கையில் கொடுத்தான். பெருமிதமாக அதை வாங்கிக்கொண்டு மணியின் முதுகில் ஒரு செல்லத் தட்டு தட்டினார்.

'ம்... நான் கொடுத்திருக்கலாமோ' என்று எண்ணினேன். பத்து நிமிடத்துக்குள் எல்லோரும் தயாரானார்கள்.

முதல் இரட்டை மாட்டு வண்டியில் சிவாஜியும் கதாநாயகி ஜெயலலிதாவும் (நேற்று பார்த்த அதே கல்யாண உடை) ஏறிக் கொண்டார்கள். டைரக்டர் மாதவன் காட்சியை விளக்கினார். "நீங்க மணவறையிலிருந்து உங்க மாமன் மகளைத் தூக்கிட்டு இந்த வண்டியில கொண்டு போறீங்க. உங்க அத்தை அடியாட்களைவிட்டு உங்களைப் பிடிக்கச் சொல்றாங்க. இதுதான் இப்ப எடுக்கப் போறோம். எங்கப்பா... அடியாட்களும், மத்த மாட்டு வண்டிகளும் ரெடியா?" என்று கேட்க, "ரெடி சார்" என்று பதில் வந்தது.

அங்கே இருந்த அடியாட்களில் பாதிப் பேர் எங்கள் ஊர்க்காரர்கள்தான். பஜனை மடத்துப் பாண்டுரங்கன், சாவடி சங்கையா, அந்தப் பெரிய மீசைவெச்சு முண்டாசுகட்டின கிழவனாரை எங்கேயோ பாத்த மாதிரி இருக்கே...

"டேய் மணி, அந்தக் கிழவனார் யாருடா?"

"நம்ம முத்துராக்குடா. நான்தான் சேர்த்து விட்டேன்?" என்றான். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.


கேமரா வண்டி முன்னால் போய் நிற்க, "இதோ பாருங்க, சிவாஜி அய்யாவுடைய வண்டி முன்னாடி போகும். நீங்க எல்லாரும் உங்க கையில இருக்கிற அருவா, கம்பு, கத்தி இதெல்லாத்தையும் தூக்கிக் காமிச்சுக்கிட்டு 'ஹே'ன்னு கத்திக்கிட்டு அவரு வண்டிய நெருங்காம வெரட்டிக்கிட்டே வரணும் தெரியுதா?" என்று அந்த அஸிஸ்டெண்ட் டைரக்டர் கத்தினார்.

"ஸ்டார்ட்" என்றவுடன், சிவாஜி, ஜெயலலிதா வண்டி விரைவாகக் கிளம்பியது. மக்கள் கூச்சலும் கைதட்டலும் தூள் பறந்தது. எங்களுக்கும் உற்சாகம் தாங்க முடியாமல் கைதட்டிக் குதித்தோம். சிவனாண்டி வாய்க்குள் விரல்விட்டு அண்ட சராசரம் கிடுகிடுக்க ஒரு விசில் அடித்தபடி, முன்னாடி இருந்தவர் தோள் பட்டையில் ஒரு மோது மோதினான். அவர் கோபத்தோடு திரும்ப, எங்களுக்கு உயிரே போனமாதிரி ஆகிவிட்டது. பள்ளிக்கூட பிரேயரில் ஷூட்டிங் பார்க்கப் போனவர்களை ரவுண்டு கட்டி அடிக்கப் போகும் விளையாட்டு வாத்தியார் தான் அங்கே நின்றிருந்தார்.

(ரீல் சுற்றும்)



பலே பலே விண்டோஸ்!



பல்வேறு இந்திய மொழிகளில் (ஹிந்தி, குஜராத்தி, தமிழ், மலையாளம், தெலுங்கு...) தனது விண்டோஸை அறிமுகப்படுத்தியிருக்கும் மைக்ரோசாஃப்ட், அடுத்து கவனம் செலுத்தியிருக்கும் மொழி பலே பலே பஞ்சாபி. சென்ற வாரம் பத்து இந்திய மொழிகளுக்கான 'விண்டோஸ் எக்ஸ்பி' பேக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. பஞ்சாபியில் விண்டோஸ் எக்ஸ்பியை அறிமுகப்படுத்தியிருக்கும் இத்திட்டத்துக்கு வைக்கப்பட்டுள்ள பெயர் 'பஞ்சாபி பாஷா'. இதன் மூலம் பஞ்சாபி பேசும் 104 மில்லியன் மக்கள் கணினி கற்றுப் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (www.efytimes.com/- தளத்திலிருந்து)

முழுசா எடுத்துக்க!

ஒரு வலைத் தளத்தை மேய்ந்து கொண்டிருக்கிறீர்கள். அதில் பயனுள்ள பல தகவல்கள் இருக்கின்றன. அதை அடிக்கடி பார்க்க வேண்டிய தேவையும் இருக்கிறது. ஆனால் உங்களிடம் இணைய இணைப்பு கிடையாது. என்ன செய்யலாம்? டௌன்லோட் செய்து கொள்ளுங்கள். ஒன்றிரண்டு பக்கங்களை அல்ல, முழு இணைய தளத்தையும், அதற்கு உதவும் அப்ளிகேஷனைத் தருகிறது www.surfoffline.com ஒரே சமயத்தில் 100 ஃபைல்களை டௌன்லோட் செய்யும் ஆற்றல் கொண்டது இந்த அப்ளிகேஷன். வலைத்தளத்தை முழுமையாக டௌன்லோட் செய்து வைத்து இணைய இணைப்பு இல்லாதபோதும் அத் தளத்தை பார்த்துக் கொள்ளலாம்.

ஓ!

49-O வினைப் பயன்படுத்துவது தேர்தல் அடிப்படை நோக்கத்துக்கு நேர்மாறாக உள்ளது. தேர்தல் என்பது ஒரு உறுப்பினரைத் தேர்வு செய்ய; அனைவரையும் நிராகரிக்க அல்ல. அனைவரையும் நிராகரிப்பதால் என்ன பயன் புதிதாக வந்துவிடப் போகிறது. இதைப் பற்றி ஞாநி கூறியிருப்பதைப் பாருங்கள். அனைவரும் வாக்களிக்க வந்தாலே கட்சிகள் நல்ல வேட்பாளர்களை நிறுத்த நேரிடும். வோட்டுப் போட வருபவர்கள் 60 பேர். அதிலும் நடுநிலையானவர்கள் வோட்டுப் போடாமல் O போட்டால் நூறுக்கு இருபது வோட்டு வாங்கியவர் வெற்றி பெறுவார். வோட்டுப் போட்டதற்கு சான்றிதழ் வழங்க வேண்டும். அந்தச் சான்றிதழில் வாக்காளரின் ஜாதி, நேட்டிவிட்டி, லைசன்ஸ் போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். ஒருவர் வோட்டுப் போட்டால் மட்டுமே இந்த விவரங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும். மக்கள் தானாகவே வோட்டுப் போட முன்வருவார்கள். அனைவரும் வந்து வோட்டுப் போட்டாலே போதும். யாரும் O போட வேண்டாம். (bunksparty.blogspot.com)

\- முகில்

தேர்தல் II ஸ்பெஷல்

உளவுப் பறவை! அலறும் எதிரணி!

கடந்த மார்ச் 31-ம் தேதி சென்னை சைதாப்பேட்டையில் பிரசாரத்தை துவக்கினார் முதல்வர் ஜெ. முதல்வர் ஒரு பாய்ண்டை அடையும் முன்னரே, அந்த இடத்துக்கு அரை மணி நேரம் முன்னதாக வந்தார் உளவுத்துறை டி.ஐ.ஜி. சிவனாண்டி. அங்கு கூடியிருந்தவர்களிடம் முக்கியமாகப் பெண்களிடம், 'நீங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்' என்றெல்லாம் விசாரித்துவிட்டு 'அம்மாவுக்குத்தானே உங்கள் வோட்டு' என்று கேட்டு இரட்டை விரலைக் காட்டிச் சென்றதைப் பார்த்த நிருபர்களுக்கு அதிர்ச்சி. 'அட, வழக்கமாக அம்மாவுக்கு முன்னதாக செங்கோட்டையன்தான் வந்து கலக்குவார். இப்போது அவரது ரோலை இவர் எடுத்துக்கொண்டு விட்டாரா?' என்று அ.தி.மு.க. ரத்தங்களே வியந்து நின்றனர். 'அவர் முதல்வர் பாதுகாப்பை முன்னிட்டுத்தான் அட்வான்ஸாக விஸிட் செய்து கண்காணிக்கிறார்' என்று போலீஸ் வட்டாரம் சொன்னாலும், தமிழகத்தில் தேர்தல் பேச்சு துவங்கிய பிறகு 'ஆளும் கட்சிக்கு ஆதரவாக உளவுத்துறை முழுமூச்சாக வேலை செய்கிறது' என்கிற பேச்சு அடிபடாமல் இல்லை. டி.ஜி.பி. அலெக்ஸாண்டரே ஒரு உளவுப் புலி. இருந்தபோதிலும், அவரும் உளவுத் துறை ஏ.டி.ஜி.பி. ராமானுஜமும் அமைதி காப்பதால் டி.ஐ.ஜி. சிவனாண்டி சர்ச்சைக்குரியவராக முன்னணிக்கு வந்திருக்கிறார்.

பலமான தி.மு.க. கூட்டணியிலிருந்து ம.தி.மு.க.வை வெளியே இழுத்தது, பா.ம.க.வையும் இழுக்க முயற்சித்து தோற்றது, விடுதலைச் சிறுத்தைகளை அம்மாவிடம் கொண்டு சேர்த்தது, அ.தி.மு.க. வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் உதவி, கோலிவுட் வட்டாரத்தை அம்மாவுக்கு ஆதரவாகக் கொண்டு சேர்த்தது, கார்த்திக்கை ஓட, ஓட விரட்டுவது, சரத்குமாரை வளைத்துப் போட்டது, தினசரி பத்திரிகைகள் மற்றும் அரசியல் வார இதழ்களை அம்மாவுக்கு ஆதரவாகச் செயல்பட வைப்பது - இப்படிப் பல வகையான பணிகளில் உளவுத் துறை மூக்கை நுழைத்ததாக தி.மு.க.

முன்னணிப் பிரமுகர்கள் அடித்துச் சொல்கிறார்கள். இவை தவிர இதுவரை மூன்று கருத்துக் கணிப்புகளை எடுத்து முதல்வரிடம் கொடுத்திருக்கிறது உளவுத்துறை. எல்லாவற்றுக்கும் சூத்ரதாரியாக அவர்களால் கட்டிக் காட்டப்படுபவர் சிவனாண்டிதான்.

இன்று ஜெ.வின் நம்பிக்கை நாயகராக இருக்கும் சிவனாண்டி, ஒரு காலத்தில் தி.மு.க.வுக்கு மிகவும் வேண்டியவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மதுரைப் பக்கத்தைச் சேர்ந்த இவர், டி.எஸ்.பி.யாக மதுரையில் பணிபுரிந்தபோது கலைஞர் மகன் அழகிரிக்கு ரொம்பவே நெருக்கமானார். அந்த நெருக்கமே பதவி உயர்வையும், முக்கிய போஸ்டிங்கான சென்னை அண்ணா நகர் துணை கமிஷனர் பொறுப்பையும் பெற்றுத் தந்ததாக போலீஸ் வட்டாரத்தில் சொல்லுவார்கள். அப்போது சென்னையில் தி.மு.க. ஆட்சி. கலைஞருக்கு வேண்டியவரான காளிமுத்து ஆணையராக இருந்தாலும், தி.மு.க. தலைமைக்கு சிவனாண்டி மிகவும் வேண்டியவராக இருந்ததால் பல சமயங்களில் காளிமுத்து மிகவும் சங்கடப்பட்டார் என்று காவல் துறை மூத்த அதிகாரிகள் சொல்கிறார்கள். அழகிரியின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு ஒரு முறை சிவனாண்டி சென்னையிலிருந்து மதுரை சென்றபோது, அவருக்கும் சேர்த்து கட் அவுட் வைத்துவிட்டார்களாம். சென்னை நுங்கம்பாக்கத்தில் இலங்கைத் தமிழர் பிரச்னையில் நெடுமாறன் போராட்டம் நடத்தியபோது, அவரிடம் மிகக் கடுமையாக நடந்துகொண்டு விட்டார் சிவனாண்டி. கலைஞருக்கு வந்த கோபத்தில் கோயமுத்தூருக்குப் பந்தாடப்பட்டார். 2004 பாராளுமன்ற தேர்தலில் அம்மா தோற்ற பிறகு சென்னை நக்ஸலைட் பிரிவுத் துறைக்கு மாற்றப்பட்டவர், முதல்வரின் நம்பிக்கையை படிப்படியாகப் பெற்று உளவுத்துறையில் இணைந்து இன்று அசைக்க முடியாத சக்தியாக இருக்கிறார்.



• சிவனாண்டி

உளவுத்துறை டி.ஐ.ஜி. பொறுப்பு என்பது இருபுறமும் கூர்மையான கத்தி போன்றது. ராமானுஜம் போன்ற அதிகாரிகள் இந்த ஆபத்தை உணர்ந்து ஒரு வட்டத்துக்குள் செயல்பட்டு எல்லோரிடமும் நல்ல பெயர் எடுப்பதுண்டு. ஆனால் ஆளும் அரசியல் தலைமையின் எல்லா ஆணைகளையும் ஏற்றுச் செயல்படும் சிலர், அரசியல் தட்பவெப்பநிலை மாறும் போது பந்தாடப்பட்டு, பழிவாங்கப்படுவார்கள். இந்த வகையில் சிவனாண்டி அசைக்க முடியாத சக்தியாகத் தொடர்வாரா என்ற கேள்விக்கு மே 11-ல் விடை கிடைத்துவிடும்.

- கௌசி

ஒரு கதை...

மகாகவி ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் கற்பனையும், ஆச்சர்யங்களும், மண்டிக்கிடக்கும். அதிலும் அவரின் 'மிட் சம்மர் நைட் ட்ரீம்' நாடகம் பற்றிச் சொல்லவே வேண்டாம். இந்நாடகம் சமீபத்தில் சென்னை ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் நிகழ்த்தப்பட்டது. நாடகம் முடியும் வரை ஆச்சர்யம் விலகாத கண்களோடு பார்வையாளர்கள் அமர்ந்திருந்தது சிறப்பான ஒன்று. நாடகத்தில் ஆழ்ந்துவிட்ட அவர்கள் 'நவீன' ஷேக்ஸ்பியரை இடையிடையே கைதட்டிப் பாராட்டாமல் இல்லை.

ஷேக்ஸ்பியர் நாடகத்தில் அப்படி என்ன நவீனம் என்கிறீர்களா? ஒரே கதை, ஒரே களம்தான். ஆனால் தமிழ், மலையாளம், சிங்களம், மராத்தி, பெங்காலி, ஹிந்தி பேசுகிற கதாபாத்திரங்கள். ஒவ்வொரு சீக்வன்ஸும் ஒவ்வொரு மொழியில் விரிந்தபோது, பார்வையாளர்கள் புதுமை அனுபவத்தில் திளைத்தது ஒருபுறம் இருக்க... நடிகர்களுக்கே இது புதுமையான அனுபவம்.




• நாடகத்தில் ஒரு காட்சி...

சென்னை பிரிட்டிஷ் கவுன்சில் தயாரிப்பில் உருவான 'மிட் சம்மர் நைட் ட்ரீமை' பன்மொழிகளில் கலவையாக இயக்கியிருந்தவர் இங்கிலாந்துக்காரரான டிம் சூப்பல். பன்மொழிகளின் கலவையாக ஷேக்ஸ்பியரின் இந்த நாடகத்தை இயக்க வேண்டும் என்று ஏன் அவருக்குத் தோன்றியதாம்..?

"இந்திய இலங்கைக்கான ஒரு நவீன நாடகத் தயாரிப்பை செய்து தர முடியுமா என்று என்னைக் கேட்டுக் கொண்டது சென்னை பிரிட்டிஷ் கவுன்சில். 'முதலில் இந்தியா, இலங்கை முழுவதும் பயணம் செல்கிறேன். அதன் பிறகு பதில் சொல்கிறேன்' என்றேன். இங்கே வந்ததும் ராமாயணம், மகாபாரதம் மற்றும் நாட்டுப்புறக் கலைகளையும், நவீன நாடக உலகில் இயங்கி வரும் கலைஞர்களையும் தெரிந்து கொண்டேன்.

இங்குள்ள இலக்கியங்கள் அவை புராணம் என்றாலும், நவீனம் என்றாலும் அவற்றில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் நான் கண்ட பல கூறுகளைப் போன்ற ஒத்த தன்மை இருப்பதை உணர்ந்தேன். அதேபோல கலைஞர்களும் நவீனம், பழமை இரண்டுக்கும் இடைப்பட்ட தன்மையில் இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். மேலும் இந்தியா, இலங்கையில் பல்வேறு மொழிகள், பல்வேறு கலாசாரங்களோடு வாழும் மக்களின்

• டிம் சூப்பல்



ஒருமுகத் தன்மை என்னை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. இதை பெருமைப் படுத்தும்விதமாக இந்திய இலங்கை மொழியின் கலவையாகவும், தேசம் தழுவிய நாடகக் கலைஞர்களின் பங்கேற்

பல மொழி!

புடனும், ஏன் ஷேக்ஸ்பியருக்கு புது வடிவம் தரக் கூடாது என்று தோன்றியது. இந்திய, இலங்கைச் சூழலின் இலக்கியப் பின்னணிக்குப் பெரிதும் ஏற்ற கதைக் களம் கொண்ட 'மிட் சம்மர்' நாடகத்தைத் தேர்வு செய்தேன். புதிய முயற்சிக்கு மொழி ஒரு தடையே இல்லை. இதை நீங்களே அனுபவித்து உணர்ந்தீர்களா இல்லையா?'' என்று எதிர்க்கேள்வி கேட்கிறார் டிம் சூப்பல். 'ஆமாம்' என்று தலையாட்டிவிட்டு தமிழ்ப் பகுதியை மொழிபெயர்த்த பேராசிரியர் அ. மங்கையிடம் பேசினோம்.

"பொன்னியின் செல்வனைப் போல சர்வதேச அளவில் புகழ்பெற்ற நாடகம் என்பதால் எழுத ஒப்புக்கொண்டேன். இதுபோன்ற ஒரு சர்வதேச முயற்சியில், தனிப்பெரும் செம்மொழியாக வாழும் தமிழுக்கு பங்கு தரப்பட்டது ஷேக்ஸ்பியர் நாடகத்துக்கு புதிய அடையாளத்தைக் கொடுத்தது.

பழைய நாடகம் என்றாலும் அதன் தமிழ்ப் பகுதியில் பழைய நாடகபாணி வராமல் பார்த்துக்கொண்டேன். அடுக்கு மொழி வசனம் இல்லாமல், நம் வாழ்க்கைக்கு அருகாமையில் இருக்கக்கூடிய மொழியிலேயே பேச்சுமொழியை உருவாக்கினேன்'' என்கிறார் மங்கை. மீண்டும் பன்மொழி பேசும் ஷேக்ஸ்பியர் உங்கள் நகருக்கு சுற்றுப்பயணம் வந்தால் தவற விடாதீர்கள்.

- முத்தையா வெள்ளையன்



கலர் டி.வி. அவசியம்தானா?

- தா. பாண்டியன் தடாலடி

முதல்கட்ட பிரசாரத்தை முடித்து விட்டு நம்பிக்கையுடன் சென்னை திரும்பியிருக்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளரான தா.பாண்டியன். நமது நறுக் கேள்விகளுக்கு 'சுருக்' பதிலளித்தார்....

முதல்கட்ட பிரசார அனுபவம் எப்படி?

"எங்கள் அணியின் வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாகவே இருக்கிறது. எந்த ஆட்சி, எவ்வளவு நல்ல ஆட்சியாக இருந்தாலும், அடுத்த தேர்தலின்போது குறைந்தது 10 சதம் மக்களாவது எதிர்ப்பாளர்களாகத்தான் இருப்பார்கள். 2004-க்குப் பிறகு ஜெயலலிதா மேற்கொண்ட திருத்த நடவடிக்கைகள் அவர் மீதுள்ள கோபத்தைக் குறைத்திருக்கிறதே தவிர, ஆதரவாக மாறிவிடவில்லை. 2004-ல் மத்தியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் 2006-ல் நம் மாநிலத்திலும் நடக்கப் போகிறது."

இரண்டு ரூபாய்க்கு கிலோ அரிசியும் இலவச கலர் டி.வியும் உங்களுக்கு உடன்பாடானது தானா?

"அரிசி விலையைக் குறைத்துக் கொடுப்பது இலவசம் ஆகாது. நலிந்த பிரிவினருக்குக் குறைந்த விலையில் அரிசி கொடுப்பது தவறே அல்ல. ஏற்றுமதிக்கு ஊக்கத் தொகை கொடுப்பது நியாயம் என்றால் மலிவு விலை அரிசி அதைவிட நியாயமே. ஆனால் கலர் தொலைக்காட்சி கொடுப்பது அவசியம் தானா? இருந்தாலும் தி.மு.க. தர முடியும் என்கிறது. தந்தால் நல்லது என்கிறார்கள் மக்கள். எனவே குறுக்கிட்டுத் தரவேண்டாம் என்று சொல்வது சரியாகாது."

தேர்தல் பிரசாரம் தனி நபர் குடும்பத் தாக்குதல் என்று தரம் தாழ்ந்து போய் விட்டதே?

"ஆம்! பிரசாரம் தடம் புரண்டிருக்கிறது. தரமும் தாழ்ந்திருக்கிறது. தனிப்பட்ட நபர்கள் மீது குற்றச்சாட்டுகள் இருதரப்பிலும் தவிர்க்கப்பட்டால் நல்லது."

கூட்டணி ஆட்சிக்குக்கூட பச்சைக் கொடி காண்பித்து விட்டார் கலைஞர். உங்கள் கட்சி கூட்டணி ஆட்சி அமைந்தால் பங்குபெறுமா?

"நிச்சயமாக அமைச்சரவையில் சேர மாட்டோம். வெளியிலிருந்து முழு ஆதரவு கொடுப்போம்."

மாநிலத் தேர்தல்களுக்குப் பிறகு மத்திய ஆட்சிக்கு, இடதுசாரிகளால் ஆபத்து வருமா?

"மத்திய ஆட்சிக்கு எந்த ஆபத்தும் வராது. ஆனால மத்திய அரசில் உள்ளவர்கள் மக்களின் எச்சரிக்கையைப் புரிந்து நடந்துகொள்ள வேண்டும். காங்கிரஸ் தோற்றாலும், ஜெயித்தாலும் மன்மோகன்சிங் மிகப் பாதுகாப்பாகவே இருக்கிறார். இந்த நிலை அடுத்த பத்தாண்டுகள் கூட நீடிக்கலாம்."

அது என்ன கால அளவு?

"பா.ஜ.க.வை மேலும் பலவீனமாக்கி காணாமல் போகச் செய்ய வேண்டும். பிறகு காங்கிரஸையும் களத்தில் சந்திப்போம்."

- ப்ரியன்

அன்பெனும் மழையிலே...



விடுமுறை நாட்களில் குடும்பத்துடன் சுற்றுலா செல்வது மேல் நாடுகளில் மிகவும் சகஜமான ஒரு விஷயம். நம் நாட்டில்கூட விடுமுறையில் உல்லாசப் பயணம் செல்பவர்கள் நிறையப்பேர் உண்டு. அம்மா, வாழ்க்கையே ஓர் உல்லாசப் பயணம் மாதிரி இருக்க வேண்டும் என்று சொல்கிறேன். உல்லாசப் பயணம் போகிற சமயத்தில் நாம் என்ன செய்வோம்? நல்லதொரு காட்சியைக் கண்டால் அதன் அழகை ரசிப்போம்; புதிய விஷயங்களை ஆர்வத்துடன் கவனிப்போம்; அங்கே சென்றதன் நினைவாக புகைப்படங்கள் எடுத்துக் கொள்வோம். புதிய உணவு வகைகள் ஏதாவது இருந்தால் அதனை ருசித்துப் பார்ப்போம். எல்லாம் சரிதான். ஆனால், உல்லாசப் பயணம் போன இடத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிடமாட்டோம். திட்டமிட்டபடி பயணத்தை முடித்துக்கொண்டு நம்முடைய ஊருக்குப் புறப்பட்டுவிடுவோம்.

இன்னும் சில நாட்கள் தங்கிப் பார்க்க முடியாமல் போன இடங்களை, அடுத்த முறை வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு நம்முடைய ஊருக்குக் கிளம்பிவிடுவோம். உல்லாசப் பயணம் என்பது தற்காலிகமான ஒரு விஷயம். அது முடிந்ததும் நாம் நம்முடைய வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்பது முக்கியம்.

அதே மாதிரி, இந்த உலகில் நாம் எப்படி வாழ்ந்தாலும், கடைசியில் நாம் நமக்கென்று உள்ள ஒரு இடத்துக்குத் திரும்பிச் செல்ல வேண்டியது கட்டாயம். அதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஒரு தந்தைக்கு நான்கு மகன்கள். அவர்கள் அனைவரும் குடும்

புன்னகை போதும்!

மாதா அமிர்தானந்தமயி

4

பச் சொத்தான வீட்டை பாகப்பிரிவினை செய்து தரும்படி தங்கள் அப்பாவிடம் கேட்டார்கள். "இந்த வீட்டை எங்கள் நான்கு பேருக்கும் பிரித்துக் கொடுத்து விடுங்கள். வீட்டை இடித்துவிட்டு, நாங்கள் நாலு பேரும் நாலு வீடுகள் கட்டிக்கொண்டு தனித்தனியாக வசிக்கிறோம். நீங்கள் வருடத்தில் மூன்று மாதங்கள் எங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் தங்கிக்கொள்ளலாம்" என்று ஆலோசனை அளித்தனர்.

தந்தை தயங்கினார்! ஆனால், மகன்கள் விடவில்லை. "உங்கள் எதிர்காலம் பற்றிய கவலை வேண்டாம். நாங்கள் நான்கு பேர் இருக்கிறோம்" என்று வற்புறுத்தினார்கள். கடைசியில் தந்தை சம்மதித்தார். மகன்கள் விருப்பப்படியே வீட்டை பாகம் பிரித்துக் கொடுத்து விட்டார்.

நான்கு மகன்களும் புதுவீடு கட்டிக்கொண்டார்கள். முதல் மகன் அப்பாவை தன் வீட்டில் வந்து இருக்கும்படி ஆசையுடன் அழைத்தான். அவரும் சென்றார்.



இரண்டாவது மகன், "அப்பா! சரியாக மூன்று மாதங்கள் கழித்து என் வீட்டுக்கு வந்துவிடவேண்டும். அதில் எந்த மாற்றமும் இல்லை" என்று உரிமையுடன் அழைத்தான். அப்பாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி.

ஆனால் அடுத்த சில நாட்களிலேயே, சற்று வரவேற்பு குறைவதுபோல அவருக்குத் தோன்றியது. மூத்த மருமகளின் போக்கில் சில மாற்றங்களையும் அவர் கவனித்தார். நாளடைவில் மகனும் தன்னைக் கண்டுகொள்வதில்லை என்று அவருக்குத் தோன்றியது. எப்படியோ ஒரு மாதம் ஓடிவிட்டது. 'முதல் மகன் வீட்டை விட்டுப் போய்விடு' என்று சொல்லுவதற்கு முன்பாகவே அங்கிருந்து புறப்பட்டுவிடுவதுதான் நமக்கு மரியாதை என்று நினைக்கத் தொடங்கினார்.

மூத்தவனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு, இரண்டாவது மகன் வீட்டுக்குச் சென்றார். அவர்களும் முதலில் அன்பு காட்டினாலும், நாளடைவில் மாற்றம் தெரிந்தது. பதினைந்து நாட்களுக்கு மேல் அங்கே அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மூன்றாவது மகன் வீட்டுக்கு மூட்டை கட்டினார்.

மூன்றாவது மகன் வீட்டிலும் பத்தே நாட்களில் வாழ்க்கை கசந்தது. நாலாவது மகன் வீட்டுக்குப் போனார். அங்கேயும் நாலே நாட்கள்தான்.

'இருந்த வீட்டை, நாம் பெற்று வளர்த்த பிள்ளைகளுக்காகக் கொடுத்துவிட்டு, இப்போது நம் நிலைமை இண்டாட்டமாகிவிட்டதே!' என்று மிகவும் நொந்து போனார். பிள்ளைகளுக்குச் சொத்தைப் பிரித்துக் கொடுத்தபோது, அவர்கள் தன் கடைசி காலத்தில் வைத்துக் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்த்தார். அது நடக்காமல் போனவுடன் அவருக்குப் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது.

மனிதர்கள் காட்டும் அன்பு இப்படிப்பட்டதுதான் என்பதை நாம் புரிந்து

கொள்ள வேண்டும். பசு பால் தருகிறது என்ற காரணத்துக்காகத்தான் அதன் மீது நாம் அன்பு காட்டிப் பராமரிக்கிறோம். கறவை வற்றிவிட்டால், கொஞ்சமும் கருணை இல்லாமல் கசாப்புக் கடைக் காரனுக்கு விற்று விடுகிறோம்.

அவர் அதைச் செய்வார்; இவர் இப்படிச் செய்வார் என்று எதிர்பார்ப்புடன் எந்தக் காரியம் செய்தாலும், நாம் துன்பப்பட நேரிடும். நாம் செய்யும் காரியங்களை எதிர்பார்ப்பு இல்லாமல், சந்தோஷமாகச் செய்ய வேண்டும்.

பொறுப்புகளைத் துறந்துவிட வேண்டும் என்பது இதற்குப் பொருளல்ல. நாம் நம்முடைய தர்மத்தை எந்தவிதமான எதிர்பார்ப்புமில்லாமல் செய்ய வேண்டும் என்பதே இதன் அர்த்தம். குழந்தைகள் இருந்தால், அவர்களை வளர்த்து ஆளாக்குவது பெற்றோரின் கடமை. அவர்கள் வளர்ந்து பெரியவர்களானவுடன், நம்மை வைத்துக் காப்பாற்றுவார்கள் என எதிர்பார்க்கக் கூடாது.

நீச்சல் தெரிந்தவன் கடலில் அலைகள் வரும்போது அதில் நீந்தி மகிழ்கிறான். ஆனால், நீச்சல் தெரியாதவனோ கடல் அலைகளில் சிக்கி, கடலில் மூழ்கிப் போகிறான். அதுபோலவே, ஆன்மிகத்தை அறிந்தவனுக்கு, வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் ஆனந்தம் அளிப்பதாகும். வாழ்க்கைப் பாதையில் தான் எதிர்கொள்ளும் ஒவ்வொரு தடையையும் அவன் புன்னகையுடன், துணிச்சலுடன் எதிர்கொள்கிறான். அவனை எதனாலும் மனம் தளரச் செய்துவிட முடியாது.

ஸ்ரீகிருஷ்ணரைப் பாருங்கள். யாதவர்கள் தங்களுக்குள் அடித்துக்கொண்டபோதும் அவரது முகத்தில் புன்னகை மாறவில்லை. பாண்டவர்கள் சார்பாக கௌரவர்களிடம் தூது சென்ற போதும் அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. குருக்ஷேத்திரத்தில் போரின் போது, தேரைச் செலுத்திய வேளையிலும் அவரது இதழ்களில் புன்னகை நடனமாடியது. காந்தாரி சபித்தபோதும் அவர் புன்னகைத்தபடியே இருந்தார். கிருஷ்ணரது வாழ்க்கையே ஒரு ஆனந்தப் புன்னகைதான். இதைப் புரிந்து கொண்டால், நாமும் ஆனந்த மழையில் நனையலாம்.

(அன்பு பெருகும்)



அம்மா!

பதினேழாவது வயதில் சுதாமணிக்கு தையல் கற்றுக்கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது. பெற்றோரிடம் தையல் வகுப்புக்குப் போக அனுமதி கேட்டார். ஆனால், பெற்றோரின் அனுமதி கிடைக்கவில்லை. மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்ட பிறகே, தினமும் ஒரு மணி நேரம் தையல் வகுப்புக்குப் போய் வர அனுமதி கிடைத்தது. தன் வீட்டு வேலைகளைச் சீக்கிரமாக முடித்துவிட்டு, தையல் வகுப்புக்குப் போக ஆரம்பித்தார் சுதாமணி.

வகுப்பில் சேர அனுமதித்ததே பெரிய விஷயம் என்பதால், தையல் வகுப்புக்கான கட்டணத்தை பெற்றோரிடமிருந்து வாங்கிக் கொள்ள அவர் விரும்பவில்லை. எனவே, வசதி படைத்த சிலருக்குத் துணி தைத்துக் கொடுத்து அதன் மூலம் கிடைத்த பணத்திலிருந்து பயிற்சிக் கட்டணம் கட்டினார்.

தையல் வகுப்பினை நடத்தியவர் அந்த ஊரிலிருந்த சர்ச் பாதிரியார். தையல் வகுப்பில், தையல் மிஷினில் தைத்துக்கொண்டே, அது எழுப்பும் சத்தத்துக்கேற்ப பாடியபடி சுதாமணி தைப்பார். சுதாமணியின் பக்தியும், பண்பாடும் அந்தப் பாதிரியாரை மிகவும் கவர்ந்தது. சில ஆண்டுகளுக்குப் பின் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போன பாதிரியார், சர்ச்சின் பாதிரியாருக்கு எழுதிய கடிதங்களில், சுதாமணியைப் பற்றி அன்புடன் விசாரித்ததுண்டு.

பல ஆண்டுகளுக்குப் பின், தையல் வகுப்பில் படித்தபோது, அம்மாவால் சொந்தமாக ஒரு தையல் மிஷின் வாங்கிக்கொள்ள முடியவில்லை என்பதை அறிந்து, ஒரு தையல் மிஷினை வாங்கிக் கொடுத்தார் ஒரு ஹாலந்து நாட்டு பக்தர்.

- மௌலி



மீண்டும் வருவார் மகாஜன்!

டாக்டர் முகமது ரேலா மயிலாடுதுறைக்காரர். சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் படித்தவர். மேற்படிப்பு சென்னையில், கல்லீரல் மாற்றுச் சிகிச்சையில் சாதனை புரிந்தது லண்டனில். இந்த 47 வயது தமிழரின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. பிறந்து ஐந்தே நாளான குழந்தைக்கு கல்லீரல் மாற்றுச் சிகிச்சையினை வெற்றிகரமாக செய்து முடித்தவர். லண்டனிலிருந்து இவர் அவசர அழைப்பின் பேரில் மும்பை வந்திருக்கிறார். எதற்காக? சொந்தத் தம்பியாலேயே துப்பாக்கியால் சுடப்பட்ட பா.ஜ.க. பொதுச்செயலாளர் பிரமோத் மகாஜனுக்கு சிகிச்சை அளிப்பதற்குத்தான்.

"பிரமோத் மகாஜன் மிகச் சிறந்த பேச்சாளர். சிறந்த பார்லிமென்டேரியன். திறமையான நிர்வாகி. எந்த விஷயமானாலும், கற்பூரம் மாதிரி கிரகித்துக்கொள்ளக் கூடியவர். பழமை, பாரம்பரியம் ஆகியவற்றையும் விட்டுத் தர மாட்டார். அதேசமயம் நவீன நாகரிகத்தையும் கையாளக் கூடியவர். மிக எளிமையானவர். பழக இனியவர். அசாத்தியமான மன உறுதி கொண்டவர். அவர் மீண்டு வருவார்" என்கிறார் இல.கணேசன்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மகாஜன் என்றுமே அக்கறை எடுத்துக் கொண்டதில்லை. ‘வாழ்க்கையில் அனைவரும் ஒருமுறை மரணமடையத்தான் போகிறோம். ஆபத்து என்றால், அது எனக்கு நெருக்கமானவர்களால்தான் வரும்' என்று பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மும்பை போலீசாரிடம் மகாஜன் ஒருமுறை குறிப்பிட்டதுண்டாம். அவர் எதிர்பார்த்தது போலவே, அவரது தம்பியே அவர் மீது குண்டுகளைப் பாய்ச்சிவிட்டார். சுடப்படுவதற்கு முந்தைய நாள் இரவு பதினொன்றரை மணி வரை தமது தம்பியுடன் டெலிபோனில் பேசியபோதும், மறுநாள் காலை தம்மை வந்து சந்திக்கும்படி கூறியபோதும்கூட, தம்பி பிரவீன் துப்பாக்கியுடன் வந்து தன்னைச் சுடப்போகிறார் என்று சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார் மகாஜன்.

அதிகாலையில் அவரது வீட்டுக்கு வந்த பிரவீன், அண்ணனுடன் தனியறையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போதே, தம்முடைய பெல்ஜியம் நாட்டு பிரௌனிங்க் கைத்துப்பாக்கியால் மூன்று முறை சுட்டுவிட்டார் என்கிறது மும்பை போலீஸ். பிரவீன் வீட்டிலிருந்து மேலும் 28 குண்டுகளைக் கைப்பற்றியுள்ளனர்

இந்தச் சம்பவத்துக்கு என்ன காரணம்?

• பிரவீன்



தமக்கு அவ்வளவாக வசதி இல்லை என்பதால், அரசியல் ரீதியாக செல்வாக்கு மிகுந்த அண்ணன், தான் வசதியாக வாழ வசதி செய்து கொடுக்கவில்லை; அவர் தம்மை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவமானப்படுத்தினார் என்றும் போலீஸில் கூறியிருக்கிறார் பிரவீன்.

- எஸ். சந்திரமௌலி


"கூடுதல் இடம் கிடைக்கும்!"

உற்சாகத்தில் உம்மன்சாண்டி

பரபரப்பான தேர்தல் சூழ்நிலையில் கேரள மாநில முதல்வர் உம்மன்சாண்டியைச் சந்தித்தோம்.

மாநிலத்தின் முதலமைச்சராக உங்களைத் தேர்வு செய்தபோது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

"காங்கிரஸ் பேரியக்கம் என்னை நம்பி ஏற்கெனவே எனக்குத் தந்த பணிகளை ஏற்று மனச்சாட்சிக்குட்பட்டு நான் உண்மையாய் பணியாற்றினேன். அதே வரிசையில் முதலமைச்சர் பணிக்கு என்னை அனுமதித்துள்ளது இயக்கம். வேறு மாதிரி என்னால் நினைக்க முடியவில்லை."



இந்தத் தேர்தலில் மக்களிடம் என்ன வாக்குறுதி கொடுத்துள்ளீர்கள்?

"எங்களது அரசு வறுமையால் வாடும் ஒரு குடும்பத்துக்கு மாதம் ஒன்றுக்கு 25 கிலோ அரிசி வழங்கி வருகிறது. ஒரு சிறிய மாநிலத்தில் மூன்று விமானத் தளங்களைக் கொண்டுள்ளோம். எங்களின் தொழில் அணுகுமுறையால், பிறநாட்டவர்கள் கேரளத்தில் தொழில் தொடங்க விரும்பும் சூழலை உருவாக்கியுள்ளோம். சவுதி அரேபியா சென்றிருந்தபோது அங்கு பணி நிமித்தமாகத் தங்கியிருக்கும் கேரள மாநில மக்களைச் சந்தித்தேன். அதில் பலர் சொன்ன தகவல் என்னை வியக்க வைத்தது.

சவுதி அரேபியாவில் இருக்கும் கேரள மக்கள் வேலைக்கு வந்து பல ஆண்டுகள் ஆகியும் தங்களால் சொந்த ஊருக்குச் செல்ல முடியவில்லை என்றனர். இந்நிலையில் என்னுள் ஓர் புதிய எண்ணம் ஏற்பட்டது. இந்திய அரசுடன் பேசி 'ஏர் கேரளா' என்ற ஓர் திட்டத்தை உருவாக்கி, மாநில அரசே விமான, போக்குவரத்தை இயக்கத் திட்டமிட்டு, அதன் இறுதி கட்டத்துக்கும் வந்திருக்கிறோம். விமானக் கட்டணத்தை மற்றவர்களைக் காட்டிலும் 5 சதம் அல்லது 10 சதமாகக் குறைப்பது போன்ற திட்டங்களையும் அறிவித்திருக்கிறோம்."

உங்களின் 'பட்டினியில்லா கேரளம்' திட்டம் எந்த நிலையில் உள்ளது?

"இத்திட்டத்தின் மூலம் மலையோரப் பகுதிகளில் உள்ளவர்களும், பட்டினியால் வாடும் தோட்டத் தொழிலாளர்களும் பயன்பெறுகிறார்கள். நகரப் பகுதிகளில் உணவுக்கு வழியில்லாத ஏழைகளுக்கும், மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கும் அவர்களைக் கவனித்துக்கொள்ள உடனிருப்பவர்களுக்கும் 'அந்தியதோ அன்ன யோஜன' திட்டத்தின் மூலம் ஒரு வேளை உணவு வழங்கப்படுகிறது."

காங்கிரஸ் தலைவி சோனியா, பிரதமர் மன்மோகன்சிங் வருகை எத்தகைய நிலையை மாநிலத்தில் ஏற்படுத்தியுள்ளது?

"காங்கிரஸ் தலைவர் சோனியா, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் போன்றோரின் வருகை எங்கள் வாக்கு வங்கியை அதிகரித்துள்ளது. அண்மையில் பத்திரிகை கணிப்பில் யு.டி.எஃப் 103 இடங்களில் வெற்றி பெறும் என்ற நிலையில் அவர்களின் வருகை காங்கிரசுக்குக் கூடுதல் இடங்களைப் பெற்றுத் தரும்."

இந்தத் தேர்தலில் உங்களை எதிர்த்து நிற்கும் சிந்துஜாய் பற்றி?

"தேர்தல் காலங்களில் அவ்வப்போது சிறுசிறு சலசலப்புகள் வரும். புதுப்பள்ளி வாக்காளர்களுக்கு யாரைப் பிரதிநிதியாக அனுப்ப வேண்டும் என்பது தெரியும்."

- த.இ.தாகூர்

அன்று எனக்கு விடுமுறை. பால்கனியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தேன். பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றுவிட்டார்கள், என் மனைவி உள்ளே வேலை செய்து கொண்டிருந்தாள்.

புறநகர்ப் பகுதியில் வீடுகட்டிக் கொண்டு குடிவந்து ஓராண்டு ஆகிறது. இந்த நகருக்கு அருகில் ஒரு கிராமம் இருந்தது. அந்த மக்களில் சிலர் மாடுகளை தினமும் மேய்ச்சலுக்காக ஓட்டிக் கொண்டு வருவார்கள்; சில சமயங்களில் ஆடுகளும் வரும்.

''என்னங்க காபி வேணுமா...? வெளியே என்ன செய்யறீங்க...? உள்ளே வரக்கூடாதா...'' என்று என் மனைவியின் குரல் வீட்டினுள் இருந்து வந்தது.

''இதோ வரேன்...'' என்று குரல் கொடுத்தேன். ''என்னதான் அந்த பேப்பரில் இருக்கோ தெரியலை'' என்று முணுமுணுத்தாள்.

தூரத்தில் மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்து கொண்டிருந்தார்கள் ஒரு வயதானவரும் அவரது பேத்தியும். அவர்களை அடிக்கடி பார்க்கிறேன்.

தாத்தாவுக்கு ஒல்லியான தேகம், கறுப்பான உடல், இடுப்பில் ஒரு கோவணம் மட்டுமே கட்டியிருந்தார். இடுப்பில் இருக்க வேண்டிய வேட்டி தலையில் தலைப்பாகையாக... கையில் ஒரு கழி. கண்களில் கறுப்புக் கண்ணாடி.

முதன் முதலில் பார்க்கும்போது எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. கூலிங் கிளாஸ் எதற்கு...? பிறகுதான் தெரிந்தது அந்தத் தாத்தா கண் ஆபரேஷன் செய்திருக்கிறார் என்று.

வழக்கமாக அவர்கள் இருவரும் சேர்ந்தே மாடுகளை ஓட்டி வருவார்கள். தூரத்தில் இருக்கும் வேப்ப மரத்தின் கீழ் உட்கார்ந்து கொள்வார்கள்.

அவர்களின் தோற்றம் அவலட்சணமாக இருந்தாலும், அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது ஆச்சர்யமாக இருக்கும்.

நாங்கள் இந்த வீட்டுக்கு வந்த புதிதில், 'ஏதாவது சாப்பிட இருந்தால் கொடுங்கள்' என்று அந்தத் தாத்தா கேட்டார். அவரது தோற்றத்தைக் கண்டு பயந்து போன என் மனைவி மறுத்துவிட்டாள். அதிலிருந்து அந்தக் கிழவர் வீட்டுக்கு வருவதில்லை.

சூரியன் நடுவானுக்குச் சென்றுவிட்டது. வேப்பமரத்து நிழலில், தரையில் கோடுகளைக் கிழித்து அதில் காய்களை வைத்து அவர்கள் இருவரும் ஏதோ விளையாடிக் கொண்டிருந்தார்கள். மதிய உணவுக்காக நானும் வீட்டினுள் சென்றுவிட்டேன்.

மதிய உணவு, தூக்கத்தை முடித்துவிட்டு நான் மீண்டும் வெளியே வரும் போது சூரியன் மேற்கே செல்ல ஆரம்பித்துவிட்டான்.

வேப்ப மரத்தின் கீழ் அவர்கள் இல்லை. அங்கிருந்து கொஞ்ச தூரத்தில் இருந்த கரும்புத் தோட்டத்தருகே இருந்தார்கள்.

மறுநாள் வழக்கம்போல் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தேன்.

''சார்'' என்று குரல் கேட்டது.

எதிரே அந்தச் சிறுமி.

''என்ன...?''

''குடிக்கக் கொஞ்சம் தண்ணி வேணும்'' கையில் குவளையுடன் நின்றிருந்தாள் அவள்.

''அந்த பைப்பில் பிடிச்சுக்கிட்டுப் போ...'' என்றேன்.

வெளியே போக இருந்தவளை அழைத்துக் கேட்டேன்.

''தினம் மாடு மேய்க்க வர்றியே... ஸ்கூலுக்குப் போகலையா...?''

''இல்லை சார், எங்க அம்மா செத்துப் போச்சு. தாத்தாதான் என்னைக் கவனிச்சுக்கிறார். வீட்டில் இன்னொரு தம்பி இருக்கான். இந்த மாடுகளை வெச்சு பால் கறந்து வித்தாதான் சாப்பாடு.''

''உங்க அப்பா எங்கே?''

''அது எங்காவது குடிச்சுட்டு படுத்துக் கிடக்கும்''

''சரி... போ...'' என்று அனுப்பினேன். 'பள்ளிக்குப் போகும் வயதில், கிழிந்த

அவனும் அவளும்...

கே. பூபதி

பாவாடை, சட்டையுடன் உணவுக்காக மாடு மேய்க்க வேண்டிய கட்டாயம். குடும்பச் சூழ்நிலை. சமுதாயம் சரியான பாதுகாப்பை அந்த இளம் பிஞ்சுக்குத் தர முடியவில்லை. குழந்தைத் தொழிலாளர் சட்டம், கட்டாயக் கல்விமுறை எல்லாம் இருந்தும், இத்தகைய குழந்தைகளை அவற்றால் பாதுகாக்க முடியவில்லை' என் மனம் வேதனைப் பட்டது.

என் மனைவி காபியோடு வெளியே வந்தாள்.

"என்னங்க, ஊருக்குப் போறதுக்கு எல்லாம் எடுத்து வைச்சுட்டேன்" என்றாள்.

'மாதத்தில் இருபது நாட்கள் ஊர் ஊராகச் சுற்றும் 'மெடிக்கல் ரெப்' வேலை எனக்கு. நாளை மீண்டும் வெளியூர் போக வேண்டும்.'



அடுத்த பயணத்தை முடித்துக் கொண்டு நான் வீட்டுக்கு வருவதற்குள் இருபது நாட்கள் மளமளவென ஓடிவிட்டன.

அன்று நான் வீட்டு வாசலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தேன். தூரத்தில் மாடுகளுக்குப் பின்னால் அந்தச் சிறுமி மட்டும் வந்து கொண்டிருந்தாள்.

அந்தச் சிறுமியை கைநீட்டி அழைத்தேன். "உன் தாத்தா எங்கேம்மா...?" என்றேன். உடனே அவள் அழ ஆரம்பித்தாள்.

"தாத்தா செத்துப் போச்சு..."

"எப்படிம்மா...?"

"உடம்பு சரியில்லாமதான்..." மீண்டும் அழுதாள்.

"இப்ப யார் உன்னைப் பாத்துக்கிறாங்க...?"

"நானும் தம்பியும் தனியாத்தான் இருக்கோம். அப்பா எப்பவாச்சும் வரும்."

அதற்கு மேல் என்னால் எதுவும் பேச முடியவில்லை.

அந்தத் தனிமை அவளைப் பாதித்ததோ இல்லையோ, என்னை மிக அதிகமாகவே பாதித்தது.

காஞ்சி கிருஷ்ணா

நிலம் வாங்குவது

சென்ற வாரம் பூமியை ஆண் பூமி, பெண் பூமி என்று இரு பிரிவுகளாகப் பிரிக்க முடியும் என்று சொன்னோம். இது எப்படிச் சாத்தியம் என்பதை இந்த வாரம் தெரிந்து கொள்வோமா...?

பொதுவாக நமது பூமி அல்லது மனையின் வாசல் பகுதி கிழக்கு மேற்காக நோக்கியும், கிழக்கு - மேற்கு பகுதிகள் நீளமாகவும், வடக்கு - தெற்கு பகுதிகள் அகலமாகவும் இருந்தால் அந்தப் பூமியை ஆண்பூமி என்று சொல்ல வேண்டும். அதற்கு நேர் எதிராக வாசல் வடக்கு தெற்கு நோக்கியும், வடக்கு - தெற்கு பகுதிகள் நீளமாகவும், கிழக்கு - மேற்கு பகுதிகள் அகலமாகவும் இருந்தால் அதற்கு பெண்பூமி என்று பெயர்.

இதில் ஆண்பூமிதான் சிறந்ததென்றும், எல்லாவிதமான நன்மைகளையும் செய்யக்கூடியதென்றும் சாஸ்திரம் சொல்கிறது. அதற்காக பெண்பூமி மோசமானது என்று அர்த்தமல்ல.

சூரிய பகவான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும்போது ஆண்பூமியின் மீது அவருடைய பார்வை முழுவதுமாக விழும். இதனால் ஆண்பூமியின் மீது இருக்கும் தோஷங்கள் நிவர்த்தியாகின்றன. ஆனால் பெண்பூமியின் அகலமான பக்கத்தில் சூரியனின் பாதை அமைந்துவிடும். இதன் காரணமாக சூரியப்பார்வையானது குறுகிய காலம் மட்டுமே பெண் பூமியின் மீது விழுகிறது. இதனால் நமக்கு வரவேண்டிய நன்மைகள் குறைகின்றன. ஆக, இதற்குத் தகுந்த மாதிரி பார்த்து, பூமியை (நிலம்) வாங்குவது நல்லது. அதேபோல் நம் வீட்டுக்கான சுற்றுச்சுவர் குறித்தும் பார்த்து விடுவோம்.

நம் வீட்டுக்கு சுற்றுச்சுவர் அமைப்பது என்பது வாஸ்து அடிப்படையில் மிக முக்கியமான விஷயம். எப்போதுமே சுற்றுச்சுவர் அமைத்துக் கட்டப்படுகிற வீடானது



• சூரிய பகவான்

வளம் தரும் வாஸ்து-3

எப்படி?



• படம் : ஸ்ரீஹரி

கட்டப்படுகிற வீடானது மிகச் சிறப்பாக இருக்கும் என்பது சாஸ்திரம். இதற்கு ராஜாக்கள் வாழ்ந்த அரண்மனைகளே உதாரணம். அரண் அமைத்துக் கட்டப்படும் மனையே அரண்மனை. அப்படி அரண் என்கிற பலமான சுற்றுச்சுவர் கொண்டு அமைக்கப்பட்ட ராஜாக்களின் இல்லங்கள் சிறப்பாக இருந்தன என்பதை அறிவோம்.

சுற்றுச்சுவர் என்பது வெறுமனே நம் வீட்டைச் சுற்றி தடுப்புச்சுவர் எழுப்புவது மட்டும் அல்ல. வாஸ்துப்படி அதற்கென்று சில வரையறைகள் இருக்கின்றன. பொதுவாகச் சொல்ல வேண்டும் என்றால், பின்பக் கம் அல்லது முன்பக்கம் என்று எதையாவது விட்டுவிட்டு அரைகுறையாகக் கட்டக்கூடாது. வீட்டின் நான்குபுறத்திலும் கண்டிப்பாகச் சுற்றுச்சுவர் அமைக்கப்படுவது நல்லது. அது மட்டுமில்லாமல், அந்தச் சுவர்கள் ஏற்ற இறக்கம் இல்லாமல் சம உயரத்தில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக மனையின் நீளமும் அகலமும் சமமாக இருக்க வேண்டும். ஆனால், எல்லா மனைகளும் அப்படி அமைந்துவிடாது. உதாரணமாக, நமது நிலம் மேற்கில் 40 அடி, கிழக்கில் 48 அடி, தெற்கில் 60 அடி, வடக்கில் 66 அடி இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இதில் இரண்டு நீளங்களும், இரண்டு

இப்படிச் சரியில்லாத பூமிக்கு வேதையான பூமி என்று பெயர். இந்தப் பூமியை சரி செய்யாமல் அதன் மீது கட்டப்படும் எந்தக் கட்டடமும் சிறப்பாக இருக்காது.

இதற்கு என்ன தீர்வு என்றால் மனையின் அகலம் இரண்டு மடங்காகவும், நீளம் மூன்று மடங்காகவும் இருக்குமாறு, முறையாக அளந்து சுவர் எழுப்ப வேண்டும். இதற்காக நம் நிலத்தின் சில பகுதிகளைப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டியிருக்கும். இதற்கு பலர் விருப்பப்பட மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில், சரியான அளவில் சுற்றுச்சுவரைக் கட்டிவிட்டு, மீதமுள்ள இடத்தில் புல்தரை, கார் அல்லது டூவீலர் ஷெட் அல்லது சிறியகடை ஒன்றைக் கட்டுவது என்று ஏதாவது செய்து அந்த இடத்தை உபயோகமாகப் பயன்படுத்தலாம்.

இப்படி சுற்றுச்சுவர் சரியாக அமைக்கப்படாமலோ அல்லது சேதாரம் அடைந்தோ இருந்தால், அதன் விளைவாக தோஷம் ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கிறது. இப்படி சுற்றுச்சுவர் சரியில்லாத காரணத்தால் ஒரு நாட்டு மன்னனுக்கே பிரச்னைகள் வந்தன. யார் அந்த மன்னன்? அவனுக்கு வந்த பிரச்னைகள் என்ன... எப்படித் தீர்வு கிடைத்தது?

(பேசலாம்)

கேளுங்கள் சொல்கிறேன்!

கே : கடைகளில் நிறைய வாஸ்து பொம்மைகள் விற்கின்றனவே... அவற்றை வாங்கி வந்து வீட்டில் வைத்தால் வாஸ்து குறைபாடு நீங்குமா?

- கதிரவன், குறிஞ்சிப்பாடி

ப : இப்போது என்னென்ன பெயரிலோ, கலர் கலராக வாஸ்து பொம்மைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றால் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியாது. இதுபற்றி இன்னும் விரிவாக இந்தத் தொடரில் பேசுவோம்.

கே : என் மகன் சரியாகப் படிப்பதில்லை. ஒருவேளை அவன் படிக்கும் அறையில் வாஸ்து குறைபாடு இருக்குமோ?

- சுதா, கும்பகோணம்

ப : படிக்கும் அறையில் கிழக்கு பார்த்து உட்கார்ந்து படிப்பது நல்ல பலனைத் தரும். எதிரே 'ஹயக்ரீவர்' படத்தை மாட்டி, அவரை வணங்கிவிட்டு படிப்பது கூடுதல் பலனைத் தரும். அவரை வணங்க ஒரு ஸ்லோகம் இருக்கிறது.

ஞானாநந்தமய தேவம் நிர்மல
ஸ்படிகாக்ருதிம்!
ஆதாரம் ஸர்வவித்யாநாம்
ஹய்க்ரீவம் உபாஸ்மஹே!

இந்த ஸ்லோகத்தை ஒருமுறை சொல்லிவிட்டுப் படிப்பது நல்லது.

“நல்ல பளீர் வெள்ளை, மொட மொடப்பு, மேடையில் நின்று பேசும்போது, என்ன காற்றடித்தாலும் சும்மா கத்திபோல நிற்கும் வேஷ்டி. நான் கடந்த இருபது வருட காலமாக எங்கள் கட்சிக் கரை போட்ட சாரதி வேஷ்டிகளையே பயன்படுத்தி வருகிறேன்'' என்கிறார் தி.மு.கவின்



சிதம்பரத்துக்குப் பிடித்த வேட்டி!



துணைப் பொதுச் செயலாளராக இருக்கும் பரிதி இளம்வழுதி. இவர் மட்டுமல்ல, இன்று பல கட்சிகளில் இருக்கும் ஆயிரக்கணக்கான பிரமுகர்கள் விரும்பி அணியும் வேஷ்டியாக இருக்கிறது மதுரை சாரதி வேஷ்டிகள்.

மதுரையைச் சேர்ந்த பார்த்தசாரதி இரண்டாம் உலகப் போர் துவக்கத்துக்கு முன்னர் சிறிய அளவில் 'சாரதி டெக்ஸ்டைல்ஸ்' என்ற நிறுவனத்தைத் துவக்கினார். ஆரம்ப காலத்தில் சாதாரண வேஷ்டிகளை நெய்து விற்பனை செய்து கொண்டிருந்த பார்த்தசாரதிக்கு, 1949-ல் தி.மு.க. தனியாகத் தொடங்கப்பட்டபோது, கட்சிக் கரை போட்ட வேஷ்டிகளை விற்பனை செய்தால் என்னவென்று தோன்றியது. அப்போதிருந்து கறுப்பு - சிவப்பு பார்டரில் கரை போட்ட வேஷ்டிகளை நெய்து விற்பனை செய்யத் துவங்கினார். நாளடைவில் சாரதி வேஷ்டிகளின் விற்பனையும் உயர்ந்தது. "இன்று எங்களுடைய விற்பனையில் ஐம்பது சதவிகித்துக்கும் மேலாக கட்சிக் கரை வேஷ்டிகள்தான் இடம் பிடித்திருக்கின்றன'' என்கிறார் சாரதி நிறுவனத்தைச் சேர்ந்த மோகன். மதுரை மற்றும் சுற்றுவட்டாரத்தில் சுமார் ஆயிரம் குடும்பங்கள், சாரதி வேஷ்டி தயாரிப்பில் ஈடுபட்டிருக்கின்றன.

கட்சிக் கரை போடாத சாதாரண வேஷ்டிகளையும் இவர்கள் விற்பனை செய்கிறார்கள். சமீபத்தில் ஆங்கில இதழொன்றுக்கு அளித்த பேட்டியில் நிதியமைச்சர் சிதம்பரம் மதுரை சாரதி வேஷ்டிகளை விரும்பி அணிவதாகச் சொல்லியிருக்கிறார்.

''எப்போதும் விற்பனையாகிக் கொண்டிருப்பது தி.மு.க., அ.தி.மு.க. கரை போட்ட வேஷ்டிகள்தான். தேர்தல் காலத்தில் விற்பனை கூடும். கடந்த சில மாதங்களாக விஜயகாந்த் கட்சிக் கரை வேஷ்டிகளும் கணிசமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன'' என்கிறார் சாரதி வேஷ்டிகளின் சென்னை மொத்த விற்பனையாளரான குழந்தை முதலியார் நிறுவனத்தைச் சேர்ந்த மணி.

கடந்த ஐம்பது வருடத்துக்கும் மேலாக கட்சிக் கரை வேஷ்டிகள் உலகத்தில் கொடி நாட்டிக் கொண்டிருந்த சாரதிக்குப் போட்டியாக இன்று ராம்ராஜ் வேஷ்டிகளும் வரத் துவங்கியிருக்கின்றன. "இந்த ரக வேஷ்டிகளுக்குப் பரந்த அளவில் மார்க்கெட் இருப்பதால் போட்டியை நாங்கள் வரவேற்கிறோம்'' என்கிறார் மோகன். சகல கட்சிக்காரர்களையும் சாரதி வேஷ்டிகள் கவர்ந்திருந்தாலும் கலைஞர் விரும்பி அணிவது என்னவோ 'சங்கு மார்க்' கரை வேஷ்டிதான்!

- ஸ்ரீநி

படம்: சேகர்

டைபாய்டு

விஜயபுருஷ்

'மிஸ்டர் மூர்த்தி, நாலைஞ்சு நாளா தொடர்ந்து ஹைபீவர் இருந்தபோதே சந்தேகப்பட்டேன். ப்ளட் டெஸ்ட் இப்ப கன்ஃபார்ம் செஞ்சிடுச்சு. உங்களுக்கு வந்திருக்கிறது டைபாய்டு. நத்திங் டு ஒர்ரி...! கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும். மெடிசன்ஸ் தர்றேன். அதைவிட முக்கியம் டயட். எல்லாத்துக்கும் மேலே ஒரு மாசம் கம்ப்ளீட் பெட் ரெஸ்ட்.''


"என்ன டாக்டர்! ஒரு மாசம் பெட் ரெஸ்டா? ஏதாவது ஸ்ட்ராங் மெடிசன் சாப்பிட்டு நாலைஞ்சு நாள்ல சரி பண்ண முடியாதா?''

"நோ! மூர்த்தி! டைபாய்டை அலட்சியம் பண்ண முடியாது. குறைஞ்சது ஒரு மாசம் ரெஸ்ட் எடுக்கணும். டேக் கேர்.''

மூர்த்தி ஆடிப் போய்விட்டான். 'ஒரு மாசம் பெட் ரெஸ்டா? இந்த ஒரு மாசம் தானே சிக்கலான காலகட்டம். ஆபீஸில் ஆடிட். குழந்தைகளுக்கு எக்ஸாம். மங்களம் வேறு மூலத்துக்கு ஆபரேஷன் பண்ணணும்னு சொல்லிக்கிட்டிருக்கா. அக்கா பொண்ணுக்கு அடுத்த மாதம் திருப்பூர்ல கல்யாணம். தாய் மாமன் செய்ய வேண்டிய வேலை எக்கச்சக்கமா இருக்கு! அம்மாவுக்கும் சேர்த்து டிக்கெட் வேற ரிசர்வ் செஞ்சாச்சு. மங்களத்துக்கும் அம்மாவுக்கும் இடையே இருக்கிற பனிப்போர் வேற. இந்தச் சமயத்தில் டைபாய்டு ஒண்ணுதான் குறைச்சல். வீடு இதை எப்படி ஏத்துக்கப் போறது?

வீடு சமாளிச்சாலும், ஆபீஸ் எப்படிச் சமாளிக்கும்? ஆடிட் வேற ஆரம்பிச்சாச்சு. நாலு வருஷமா ஆடிட்ல இருந்ததால அதோட நெளிவு சுளிவு எல்லாம் எனக்கு அத்துபடி. போன வருஷம் ஜி.எம் கூட எனக்கு பர்ஸனலா தேங்க்ஸ் சொன்னாரே! அதுமட்டுமா, ஹைதராபாத்துக்கு வந்த டிரான்ஸ்பரைக் கூட மூர்த்தி இல்லாம ஆடிட் நடக்காது என்று சொல்லி கேன்சல் செஞ்சாரே...' இப்ப என்ன பண்ணுவேன்? ஒரு மாசம் பெட் ரெஸ்டா! இம்பாஸிபிள்.'

ஆட்டோவில் வந்து இறங்கினாலும் ரொம்ப டயர்டாக இருந்தது மூர்த்திக்கு. வீட்டுக்குள் நுழைந்ததும் யாராவது வந்து விசாரிப்பார்கள் என்று எதிர்பார்த்தான் மூர்த்தி. யாரும் வரவில்லை. அம்மா மூலையில் உட்கார்ந்துகொண்டு மங்களத்தின் மேலே அர்ச்சனை செய்துகொண்டிருந்தாள். கண் வேற சரியாத் தெரியலை! ஆபரேஷன் பண்ணணும்னு சொல்லிக்கிட்டிருக்காங்க. எனக்கு எப்போ டைம் கிடைக்குமோ தெரியலை. மங்களம் அடுப்பில் உப்புமா கிளறிக்



கிட்டிருக்கா? சின்னவன் சுரேஷ் டீவியில் கிரிக்கெட் மேட்ச் பார்த்துக் கொண்டிருக்கிறான்! உமாவை வீட்டிலே காணோம்! படிக்கிறேன்னு சொல்லிவிட்டு விளையாடப் போயிருப்பா!"

"அப்பா ஷேவாக் அவுட் ஆயிட்டான்பா" என்று அலறினான் சுரேஷ்.

"ஏண்டீ மங்களம்! டாக்டர்கிட்டே போய்விட்டு வந்திருக்கான், என்ன ஏதுன்னு கேக்காம? அப்படி என்ன அடுப்படியில செய்யறே."

"ஏன்! உங்க பிள்ளைதானே! நீங்க கேட்கக்கூடாதா? உப்புமாவை இறக்கறதுக்குள்ளே அப்படி என்ன தலைபோகிற அவசரம்? அடுப்படியில இருக்கறப்போ ஆயிரம் தடவை கூப்பிடறது. அப்புறம் சமையல்ல இது சொள்ளை நொள்ளை, தீஞ்சு போச்சுன்னு கத்தறது."

"ஏண்டீ! நான் என்னத்தைச் சொல்லிட்டேன்! நீ சண்டைக்கு வர்றே!"

"ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் வாயை மூடிக்கிட்டு இருக்க மாட்டீங்களா? சுரேஷ்! டீவியை ஆஃப் பண்ணு."

"அப்பா! ப்ளீஸ்! மேட்ச் நல்லா போகுதுப்பா!"

மங்களம் கையைத் துடைத்துக் கொண்டே கேட்டாள் "டாக்டர் என்ன சொன்னார்?"

"எனக்கு டைபாய்டாம்! ஒரு மாசம் ரெஸ்ட் எடுக்கணுமாம்!"


அம்மாவுக்குப் பாம்புக் காது.

"டைபாய்டா! பகவானே! ஈஸ்வரா! நான் இப்படி குத்துக் கல்லாட்டம் இருக்கறப்போ என் பிள்ளைக்கு இப்படி ஒரு வியாதியைக் கொடுத்திட்டியே! எப்படிடா வந்தது உனக்கு!"

"ஸ்... அம்மா! கொஞ்சம் சும்மா இரு! ஏன் இப்படிக் கத்தறே? எனக்கு வந்திருக்கிறது டைபாய்டுதான். வேறொண்ணும் இல்லே!"

"நான் படிச்சுப் படிச்சு சொன்னேன்! வெளியில கண்ட கண்ட ஹோட்டல்ல





"இந்தத் துண்டை அணிவித்த தம்பிக்கு வாழ்த்துக்களையும், நன்றியினையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்..."

- பி.கணேசராஜா

சாப்பிடாதீங்கன்னு! நான் சொன்னா கேக்கக் கூடாதுன்னு ஒரு வைராக்யம்."

'இப்ப அதுவா முக்கியம்' மூர்த்திக்கு கோபம் கோபமாய் வந்தது. டீ.வியை ஆஃப் செய்துவிட்டு பாட்டியிடம் போய் சுரேஷ் கேட்டான் - "ஏன் பாட்டி! டைபாய்டுன்னா என்ன? மெட்ராஸ் ஐ மாதிரி எல்லார்கிட்டேயும் ஒட்டிக்குமா."

"உனக்குத் தெரியாதுடா சுரேஷ்! உங்க தாத்தாவுக்கு டைபாய்டு வந்து அறுபத்தெட்டு நாள் அவஸ்தைப்பட்டார்! நல்லா குண்டுகட்டா இருந்தவர் கொத்தவரங்கா மாதிரி இளைச்சுப் போயிட்டார்?"

"வரும்போதே மெடிசன்ஸ் வாங்கிட்டு வந்துட்டீங்களா, இல்லே நான் போய் வாங்கி வரணுமா?"

'இதுதான் இவ கவலையா!' மூர்த்திக்கு எரிச்சலாக வந்தது.

இவர்கள் பண்ணின கலாட்டாவில் அக்கம் பக்கத்திலிருக்கும் ஃப்ளாட்டுகளிலிருந்து என்னவோ ஏதோவென்று இவர்கள் வீட்டுக்கு வர ஆரம்பித்து விட்டார்கள்.

"என்ன மூர்த்தி சார்! என்ன சமாசாரம்."

"ஒண்ணுமில்லே! நாலைஞ்சு நாளா ஜுரம். டைபாய்டுன்னு டாக்டர் சொல்றார்."

"டைபாய்டா. மூர்த்தி ! நீங்க ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்! டயட்தான் ரொம்ப ரொம்ப முக்கியம். முதல்ல காபியை கட் பண்ணுங்கோ!"

உயிர்நாடியில் கை வைத்தார்!

"காரம், உப்பு, புளி, எண்ணெய் எல்லாத்தையும் ஸ்டாப் பண்ணிடுங்க! இப்படித்தான் என் மச்சினிக்கு பி.காம் பரீட்சை எழுதறப்போ டைபாய்டு வந்து பரீட்சைல தவறிட்டா."

"மிஸ்டர் மூர்த்தி, பேசாம ஆபீஸுக்கு ஒரு மூணு மாசம் லீவு போட்டுடுங்க! நம்ம உடம்பை நாமதான் பாத்துக்கணும்."

தடாபுடா என்று அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்தாள் உமா! என் சீமந்தபுத்திரி.

"அப்பா என்னாச்சுப்பா! டைபாய்டாமா! கீழ்வீட்டு மாமா சொன்னார்!" சன் தலைப்புச் செய்தியில் சொன்ன மாதிரி அலறினாள். ஓங்கி அறையலாம் போல இருந்தது மூர்த்திக்கு.

அதன் பிறகு வீடே ஜனாதிபதி ஆட்சி வந்த ஸ்டேட் கவர்ன்மெண்ட் மாதிரி மாறிவிட்டது. மூர்த்திக்குத் தனிக் கட்டில். அரை மணிக்கு ஒரு தடவை குளுகோஸ், ஆரஞ்சு ஜூஸ், ஆர்லிக்ஸ், எக்செட்ரா... கஞ்சி குடிப்பதுதான் கஷ்டமாக இருந்தது. ஒரு வாரத்துக்குள் மூர்த்தி டைபாய்டை என்ஜாய் பண்ண ஆரம்பித்தான். அடுத்த வாரம் அவன் ஆபீஸிலிருந்து ஜி.எம். வந்தபோது அவனே எழுந்து உபசரிக்கத் தொடங்கினான்.

"மிஸ்டர் மூர்த்தி, ரிலாக்ஸ். நல்லா ரெஸ்ட் எடுங்க! நான் இன்டர்மீடியட் படிக்கறப்போ எனக்கு டைபாய்டு வந்தது. அதனால சொல்றேன்! நீங்க ஆபீஸைப் பத்திக் கவலைப்படாம இருங்க!"

"ஆடிட் சமயத்துல இப்படி வந்திருச்சேன்னுதான்..."

"ஹேய் மூர்த்தி! ஆடிட் எல்லாம் முடிஞ்சுபோச்சு. டெஸ்பாட்சில் இருக்கானே ரமணன்... அவன் சி.ஏ.வில் இன்டர் முடிச்சிருக்கானாம். அவனை வைச்சு அஞ்சே நாளில் முடிச்சுட்டேன்."

'அந்த ஆடிட் வேலைய நான் முடிக்கப் பத்து நாள் ஆகும். ரமணன் அந்த நாளில் முடிச்சுட்டானா, இனிமே ஹைதராபாத் டிரான்ஸ்பர் நிச்சயம்?' மூர்த்தி நினைத்துக் கொண்டான்.

"மங்களம்! சாருக்கு தோசை போட்டுக் கொடு! காபியில சர்க்கரை இல்லாம போடு."

"நோ! நோ! மூர்த்தி! எனக்கு ஒண்ணும் வேண்டாம். இப்பதான் சாப்பிட்டு வந்தேன்."

'எங்கே இந்த வீட்டில் டிபன் சாப்பிட்டால் டைபாய்டு ஒட்டிக்கொள்ளுமோ என்ற பயம் போலிருக்கு!'

நாளாக நாளாக வீட்டில் ஒவ்வொருவரும் மாறிக்கொண்டு வருவது மூர்த்திக்குப் புரிந்தது. எப்போதும் தன் பிரச்னையையே பேசிக்கொண்டிருந்த மங்களம், தானாகக் கேட்டால்கூட 'அதெல்லாம் விடுங்க! உங்க உடம்பு சீக்கிரம் சரியாகணும்' என்று சொன்னாள்! அதைவிட ஆச்சரியம் அம்மா-மங்களம் உறவுதான். ரொம்பவும் ராசியாகிவிட்டார்கள்! 'ஏண்டி மங்களம்! நீ கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்க! பசங்க வந்தா நான் சாதம் போடறேன்' - இது அம்மா!

'நீங்களும் உடம்பைப் பார்த்துக்கங்க! கொஞ்சம் சாத்துக்குடி பிழிஞ்சு தரேன் சாப்பிடுங்கம்மா!' - இது மங்களம்!

ஆச்சரியமான சம்பாஷணைகள்!

"என்ன பண்றதுப்பா! டயர்டா இருக்கா?" என்று அடிக்கடி கேட்டாலும் பாடங்களை சிரத்தையோடு படிக்க ஆரம்பித்து விட்டாள் உமா. மூர்த்திக்குக் கண்ணையே நம்ப முடியவில்லை!

சுரேஷ்! சதா கிரிக்கெட் பேட்டோடு வெளியில் விளையாட ஓடுபவன், இப்போ வீட்டிலேயே இருக்கிறான். ஒரு நாள் சாயங்காலம்கிட்டே வந்து 'அப்பா! கால் வலிக்குதா? மெல்ல பிடிச்சு விடட்டுமா'ன்னு கேட்டான். மூர்த்திக்குக் கண்ணில் தண்ணீர் வந்துவிட்டது. மூர்த்திக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. டைபாய்டு இருக்கும் வரையில், தான் இந்த நல்ல சமாசாரங்கள் இருக்குமா இல்லை, உடம்பு சரியாகப் போன பிறகும் தொடருமா என்று. நியாயமான சந்தேகம்தான்! ○

துப்பறியும் புலி!



● லத்திகா சரண்

சென்னை மாநகர ஆணையாளர் அலுவலக ஆலோசனைக் கூடத்தில் காலை பத்து மணி முதலே பொதுமக்கள் வரத் தொடங்கிவிடுகிறார்கள். அவர்கள் பிரச்னை என்னவென்று அக்கறையுடன் பொதுமக்கள் தொடர்பு இன்ஸ்பெக்டர்கள் விசாரிக்கிறார்கள். ஒரு துணை ஆணையாளர் அந்தப் புகார்களை சரி பார்க்கிறார். அதன்பிறகு அவர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து, புகார்களைக் கேட்டு, சம்பந்தப்பட்ட பகுதி துணை ஆணையாளர்கள், இன்ஸ்பெக்டர்களைச் சந்திக்கும்படி அறிவுரை கூறுகிறார் சென்னை மாநகர காவல்துறை ஆணையாளராக புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் லத்திகா சரண் ஐ.பி.எஸ். இவர் சென்னை மாநகரின் முதல் பெண் கமிஷனரும்கூட.

லத்திகா சரண் கேரளா, மூணாரில் பிறந்தவர். பள்ளிப் படிப்பு சென்னை சர்ச் பார்க் கான்வென்டில். தொடர்ந்து பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி. சின்ன வயதில் துப்பறியும் நாவல்களை விரும்பிப் படித்த இந்தப் பெண் புலி, பின்னாளில் போலீஸ் அதிகாரியாகி சி.பி.ஐ.யிலேயே பணிபுரிவோம் என்று நினைக்கவில்லை. தமிழ்நாடு போலீஸின் குற்றப் பிரிவிலும், சி.ஐ.டி. பிரிவிலும் லஞ்ச ஒழிப்புத் துறையிலும் பணியாற்றியபோது இவருக்கு ஏற்பட்ட சுவாரஸ்யமான அனுபவங்கள் ஏராளம். ஆஸ்திரேலியாவுக்கு நிர்வாகவியல் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்டவர், காவல் துறையில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக ஜனாதிபதியின் பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'ஒரு பெண்மணி என்ற முறையில், இதுவரை ஆண்களே அமர்ந்து வந்த கமிஷனர் இருக்கையில், நீங்கள் அமர்ந்தபோது எப்படி உணர்ந்தீர்கள்?' என்று கேட்டோம்.

"நான் ஒரு போலீஸ் அதிகாரி. பல்வேறு பொறுப்புகளிலும் இருந்தபோது எப்படி என் கடமையைச் செய்தேனோ. அப்படித்தான் எனக்கு அளிக்கப்பட்டுள்ள இந்தப் பொறுப்பையும் நான் நினைக்கிறேன். ஸ்பெஷலான உணர்வு ஏதும் எனக்கு இல்லை" என்றார்.

சரி, பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்க ஏன் மறுக்கிறீர்கள்?

"இது தேர்தல் நேரம். வேலைப்பளு அதிகம். ஒரு பத்திரிகைக்குப் பேட்டியளித்துவிட்டு மற்றவர்களுக்கு மறுக்க முடியாது. எல்லோருக்கும் பேட்டியளிக்க நேரம் ஒதுக்குவது சாத்தியமில்லை. எனவேதான் தேர்தல் முடியும்வரை பேட்டிகளைத் தவிர்க்கிறேன்."

- எஸ்.சந்திரமௌலி



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

